குமரேசசதகம்

வந்தனை செய்யும் முறை செய்பவர்க் கன்பு[illegible]ம்
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

[illegible]ல்லாருனை.

[illegible] பெருக்கின்றனர்
[illegible]
[illegible]
[illegible] மென்னர்
[illegible]
[illegible] திருப்பவர்
[illegible] விருக்கின்றனர் [illegible]
[illegible] மென்னர்
[illegible] திருக்கின்றனர்
[illegible]
செறிவாகி நின்றிடென்னர் [illegible]
[illegible] மென்னர்
ம[illegible] ருபமா[illegible] பில்லாது
வம்பர்வாழ் புக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

செந்நாம் காரகவர்.

[illegible] வரமுன்
[illegible] நீடு மண்ணர
[illegible] யங்கட்டி வைத்தவேனா
உதாரங்கள் செய்த பெரியோர்
துணையொப்பி லாப்புகல்வனைப்பெற்ற பேறொருகா
சமர்வென்ற சத்த வீரர்
[illegible] வெங்காரு மாறு
தருமங்கள் செய்த பேர்கள்

கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர் களிம்
மன்னிதர்கள் சரீரங்கள் போயினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (22)

இருந்தும் பயன்படாதவர்.

பகராகி லுங்கள்ள விருத்தியினை யிலங்கும்
பழமைபெறு சுவரா யினும்
பலருக்கு மறைவாகு மாறெரிந் தெரிமலட்
பன்றிகட் குபயோ கமாம்
கருமிகு கடாவெனினி லுழுதுபுவி காக்கும்வன்
கழுதையும் பொதிசு மக்கும்
கல்லெனினு மேறவர்களு மாலயமு மாம்பொருந்
கான்புற்று மரவ மனையாம்
இருமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவிசெயு
மிழிவுறு குரங் காயினு
மிரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருங்கோ
லேற்றமா ளிகை விளக்கும்
மதமது மிரும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (23)

திருவாழிடங்கள்.

கடலா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
கமலா சனந்தன் னிலுங்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
காவியின் கூட்டத் திலும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன் னிலு

நல்லசபை லக்ஷணமா யிருக்குமனை நன்னிலத்
துமனைசுத்த வீரர் பாலும்
உடர்பிசக மனத்திலுஞ் சமரிலசர் நன்னிலு
மருகத்தானி யில்லைத் திரு
மலர்தரு கடம்பமலர் குணிழுமி நத்திலு
மதிகுணா மானா புய
மடவார் நிறைத்திலுஞ் சுழமொழின்றி திருமாது
மாமு திருப்ப வாள்வேர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (24)

அறிபடுக்கல்.

மனதிற் படும்பகை முகத்திலே யறியலா
மாவிலைப் பூவினை லாம்
மழையினை யறியலா நல்லார்பெரி லோர்தமை
மக்களா லறிய லாகும்
கனமருவு ஆசார மதிலே யறியலாங்
கற்றவொரு வித்து வானைக்
கல்விப்ர சங்கத்தி லறியலாங் குணந்
தனைநடை யதி லறியலாம்
குணமுக மகிழ்ச்சியாற் பரிசிலே யறியலாஞ்
சாதிசொல் லால றியலாம்
சூருத்தி யோசனைய லறியலாம் பிணிகளைத்
தாதுக்க ளால றியலாம்
வனசமுக சிநேகிதனை பரிவா லறிந்தக
வாலவழு மான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (25)

குணமாறுமை.

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நயகுணங்
கொண்டிட் படுத்தி விடலாம்

கொடியபல விடநோய்க ளியாவுமௌ டதமது
கொடுத்துத் திருப்பி விடலாம்
உணர்விலாப் பிரமராட் சசுமுதற் பேய்களை
யுகந்துகூத் தாட்டி விடலாம்
முபாயத்தி னாற்பெரும் பறவைவந் துறாயுத்தி
யுண்டாக் கலாமுயிர் பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
பெரும்புன லெனச்செய் யலாம்
பிணியையு மகற்றலாங் காலதூ துவரையும்
பின்புவரு கென்று சொலலாம்
மணலையுங் கயிறாய்த் திரிக்கலாங் கயவர்குண
மட்டுந் திருப்ப வசமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (26)

இந்நிந்த வந்தோர் சிலர்க்குப் போலவாறோனல்.

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர்குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம லின்றவர்
தாம்பயனி லாதமரமாம்
வீம்பினொ டெளியவரை யெதிரிட்டு நிற்குமொரு
வெறியர்குரை ஞமலி யாவர்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாதோர்
மேன்மையில் லாதகழுதை
சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக் கடா
சூதுட னடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந்
துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யந்நாளி லீசனை
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (27)

அற்பர்வாழ்வால் குணம் வேறுபடுதல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னால்விழிக்
கியாவருரு வந்தோன் றிடா
கண்டிடின் பேசல்ல வார்த்தைக ளுரைத்தாலு
மவர்செவிக் கேறி டாது
மூப்படைகு மானபேர் * வருகினும் வாருமென
மொழியவும் வாய்வ ராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகல வைப்பார்
தப்பனை மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடிவெடித் தேசி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது நீங்கு மென்பார்
மற்புயந் தனிலணி மாலையணி வேலனே
* மார்பனே வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (28)

நல்லோர்ச் சேர்பயன்.

சந்தன விருட்சத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனை தரும்
தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுந்
சாயல்பொன் மயமே தரும்
பக்கமிகு பாலுடன் விளாவிய தண்ணீரெலாம்
பால்போ னிறங்கொடுக்கும்
படிகமணி கட்டுமேல் நிற்கின்ற வடமுமப்
படியே குணங்கொடுக்கும்
அத்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடி
லடுத்ததும் பசுமை யாகு

* யந்தாலும் என்பது பாடபேதம்.
வெப்பனை யென்றும் பாடம்.

மானபெரி யோர்களொடு சகவாச மதுசெய்யி
லவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்தரா நெடுங்கிரியின் முன்காடல் சவாசந்தவரி
மருகமெய்ஞ் ஞான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (29)

பெரியோர் வாக்யபரிபாலனஞ் செய்தோர்.

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
றசரத குமார ராமன்
றமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்
சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவ னரிச்சந் திரன்
றேகியென் றோர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் றானகன் னன்
நிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவ
னீள்பெல மிருந்த வநுமா
னிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனா
நிலத்திலு ணளாயனி செய்தாள்
மங்கைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (30)

முயற்சியின் மிக்கதுவேறிலை

வங்காள மேறுகினும் வாருகோ லொருகாசு
மட்டன்றி யதிக மாமோ
வானேறி யுயரப் பறந்தாலு மூர்க்குருவி
வல்லைப் பருந்தா குமோ
கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையா குமோ

கடலுக்கு ளாழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நானாழிதான்
ஆங்கார மோடுறுங் கன்வினைக டன்னொடே
யடையாம லிங்கு விடுமோ
வாரிடந் தொன்றாலும் வெகுதேசங்கள் சுற்றினு
மமைத்தபடி யன்றி வருமோ
மங்காத செந்தமிழ்த் தொண்டருக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (31)

இடும்பா லழிப்பு.

கூடத் தன்பெலமு மிராவணன் றீரமுந்
துடுக்கான கஞ்சன் வலியுந்
துடியான விரணியன் வரப்பிரசா தங்களுந்
தோலாத வாலி திடமும்
பாரமிகு சூரியோ தனன்ற னுவமத்து
பராக்கிரம மதுவு மடவர்
பாரிப்பு மாபலிதன் றன்மையுந் திசாமுகன்
பாங்கிலுறு வல்ல மைகளும்
மானவு கீசகன் மேன்மையுந் திரிபுரர்க்கு
மேன்மையுந் தங்க மென்றிலு
மிவர்களது சம்பத்து நின்றவோ வவரவ
ரிடும்பா லழிந்த வன்றோ
மாமனைக் கன்றா லெறிந்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (32)

நட்புநிலை

மாமதியின் முயலான துதேய் வழித்தேய்ந்து
வளருமப் போது வளரும்

வாவிதனி லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும் பெருகி லுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்
பொங்குகா லந்த ழைக்கும்
புண்டரிக மிரவிபோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகின் மலரும்
தேமுடைவி ளைக்கிலுயிர் கூடவு மிளைக்குமது
தேறிலுயி ருந்தெ ளிக்கும்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர்
அநேகமட் டடியா குவரே
வாமனசொ ரூபமா யானைமுக னுக்கிளைய
வாலகுரு பரவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (33)

தகாப்பலாபலனவை.

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாருநடு கையும்
பலமினிய வாடிதனி லாணைவால் போலவே
பயிர்கொண்டு வருகருப்பும்
கருணையொடு மிக்கநா யகமுறும்பெண்டிர் மனையினிற்
சாணிட்டு வைத்த முதலுங்
காலமது நோயிற் றனக்குதவி யாகமுன்
கற்றவர்க் கிடுகல் வியும்
விருந்தாச வரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகா ரமாம்
வீணல்ல வினையெலாங் கெட்பலன தாகவே
விர்த்தியாய் வருமென்பர் காண்
மருவுலா வியநீப மாலையுந் தண்டரள
மாலையும் புனைமார் பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (34)

சமயத்துக் குதவாதவை

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடுவித் தையுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சந்தமென்
றிருக்கின்ற குடிவாழ்க் கையு
மேறுமா ருதவியே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளை வாழ்வும்
சொல்லான தொன்றாமல் வேறான தொன்றுமாச்
சொல்லுவஞ் சகர்சே கமுமே
சமயமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
சமயத்தி லுதவா தனவாம்
வல்லானை கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காள னேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (35)

திரும்பவாராதவை.

அரவின் வாயினி லகப்பட்ட தவளையு
மானைவா யிற்கரும்பு
மரிதான வப்பனிற் பாய்மரக் காற்றினி
லகப்பட்டு மெலிகாக் கையும்
நாட்டிய வேசிதனை வார்த்துக் கொடுத்ததனு
நமன்கைக்கு போன வுயிரும்
நலமாக வேபயிர் காத்திட்ட வெள்ளமு
நாய்வாயி லகப்பட்ட முசலும்
தேடியும் பார்களுக்கு மாறாப லவுடைமையுந்
தீவாதை யானமனையுந்
திருள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளுந்
திரும்பிவா ராவென்பர்காண்

மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோலைசூழ்
 வாழவந் திடுமூர்நல் வனே
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (36)

இதனினு மிது நன்றென்பவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி னின்சொலாற்
 களிகொண் டழைத்த னன்று
 கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
 கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றதோ ராயிரங் கவியினில்
 விவேகியொரு கவிதை நன்று
 வெகுமதிக ளாயிரஞ் செய்வதின் மானமாய்
 வேளைகண் டுதவ னன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடாக்கண்டர்
 சற்றுமிலை யென்ன னன்று
 சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னொய்யதா
 தாரித்தி ரியநன் றுகாண்
மடுவினிற் கரிமோல மென்னவந் தருள்செய்த
 மான்மருக னைய முதல்வா
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (37)

பலகூடினு மொன்றுக் காகாதவை.

தாரகைக ளொருகோடி வானந் திருக்கினுஞ்
 சந்திரற் கீடா குமோ
 தாருவிற் கொடிதொணிகள் பலகூடி னாலுமொரு
 தம்பட்ட வோசை யாமோ
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
 குஞ்சரக் கன்றா குமோ
 கொட்டிமலர் வாவியிற் பலகூடி னாலுமொரு
 கோகனத மலரா குமோ

பாரமிகு மாமலைகள் பலகூடி னாலுமொரு
பைம்பொன்மக மேரு வாமோ
பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற
பன்னொருவ னுக்கு நிகரோ
வாரணக் கொடியொரு கரத்திற பிடித்தொன்றில்
வடிவே லணிந்த முருகா
மயின்மேலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (38)

அருமை யறிதல்.

மன்னவ ரருமையைப் புரப்பவர்க ளேயறிவர்
மட்டிக் குரங்க றியுமோ
மங்கைய ரருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவ துண்டோ
கணவருடை யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவள றிவளோ
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதைவருங்
களவான நாய றியுமோ
புனமான கிளியருமை தனைவளர்ந் தவரறிவர்
கொடியபூ னையுமறியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறி வரோ
மன்னவா னீயென்று குறவள்ளி பின்றொடர
வனமூடு தழுவு மழகா
மயின்மேலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (39)

நீர்பாற் பயப்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ருதவாமல்
வன்முதலை யங்கி ருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவியதில் வண்டி ருக்கும்

நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ராறாமல்
நீங்காத முள்ளி ருக்கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டாறாது
நீளரவு சூழ்ந்தி ருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டிலுறை செல்லாது
குறைநாய்க ளங்கி ருக்குங்
கொடுக்குந்தி யாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டு கண்டாய்
வடிவையுங் கொடுமையும் பொருவுமிரு கண்ணாளிகுற
வள்ளிக் குகந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (10)

கலிகாலக் கொடுமை

காப்புத்தி சொன்னான் மறுத்திடுங் காலமுயர்
தந்தையைச் சீறு காலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணாத காலம்
பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற்
பெரியர்சொல் கொளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிரு
சிறியவன் பெருகு காலஞ்
செருவில்விட் டோடினோர் வீரரெனு காலம்வா
செப்புமோ வாக் கூறு காலம்
வாய்மதம் பேசிவிடு மூரியர்க ளாயினது
வாய்த்தகலி காலமையா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (11)

அவமாங் காரியங்கள்

கல்வியொடு கனமுறச் சபையிற்பேசல் வாயாத
காணவைப் போவதி தாவாம்

கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
  காசமுறச் செய்வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வமென் றுறுதினஞ்
  சிந்தைசெய் பவள்மனைவி யாகும்
சினேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி
  செப்புமவ னேசோ தரன்
தொல்வள மிருந்ததா றுகரைதெரிந் துறுதிமொழி
  சொல்லுமவ னேகுரவ னாஞ்
சொன்னநெறி தவறாம லழிபாடு செய்துவரு
  துய்யனே யினிய சீடன்
வல்லிபக மிருபக்க குஞ்சரி யுடன்குறவர்
  வஞ்சியும் மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
  மலைமேவு குமரேசனே. (42)

சிறுமையிற் பெருமை.

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
  திருமுடியின் மேலிருக்குந்
திகழ்சிப்பி யுடனிற சனித்தமுத் தரசரது
  தேகத்தின் மேலிருக்கும்.
போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று
  பூசைக்கு மேற்க தாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள்
  புனிதமா மிரத மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
  சவாதுபுழு கனைவர்க்கு மாகுஞ்
சாதியி னாந்தரற் பிறந்திடினுங் கற்றோர்கள்
  சபையின்மேல் வாட்ட மன்றே
மாற்றிச் சுரந்தனை விரும்பியா லுடல்குளிர
  வைத்தமெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
  மலைமேவு குமரேசனே. (43)

செய்யத்தகாதவை.

தானே சரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயிலிராது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலசுடும்
ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற் கெடுதியா
யானைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாறகொன் றிடும்
நீதானு மினிதென்று மீதூண் விரும்பினாற்
றேகபீ டைகளே தருஞ்
செகராசர் தனுவென்ன வேலாத காரியஞ்
செய்தான் மனம்பொ றார்காண்
வானாடு புகழுமொரு சோணாடு தழையவே
வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (44)

நடுவுநிலைமை

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
வருமென்று நேச ரென்றும்
வன்பகைஞ ரென்றுமய லோரென் றுமிக்கோ
வானென்று மேழை யென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமா
ரெள்ளள வுரைத்திடாம
லென்னமுட னேவிசுத புத்தியாய் சாக்ஷிக்கு
மேற்கச் சபாச மதமாம்
முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன்
மொழிந்திடற் றர்ம மதுகாண்
முனைவீம னுடல்பாதி யிருகத் தலைக்கென்று
மூன்றருமர் சொன்ன தலவோ

மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (45)

பக்ஷபாதம்.

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலடராவர்
முயர்வென் றொருக்குடன் முனைகடந்துவிடு மவரில்லை
முறையுமூர் பாழ்நத்தமாம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகுரு
சமானமா வெழுபிறப்புஞ்
சந்ததியி லாதுழல்வ ரவர்முகத் தினின்மூத்த
தையலே குடியிருப்பாள்
பாரமிவ ரென்றுபுவி மங்கையு நடுங்குவாள்
பழிதத்து மரணமாவார்
பரமுடிவி லேரவு வாதிநர கத்துறு
பவிப்பரெப் போது மென்பார்
வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள்குருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (46)

அபாவுபாதகை.

வாரியா ழத்தையும் புனலெறியு மலைகளையு
மானிடர்கள் சனனத்தையும்
மன்னவர்க ணினைவையும் புருஷர்யோ கங்களையும்
வானிலுயர் நீளத்தையும்
பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும்
படியாண்ட மன்னவரையும்
பருப்பதத் தின்னிறையு மீசரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியையும்

சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ்
சித்தர்தம துள்ளத் தையுந்
தெரிவையர்கள் சிந்தையையு மிவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூ டுமோ
வாரிச மடந்தைகுடி கொண்டநெடி மாலுக்கு
மருகனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (47)

மானம் விடாமை.

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்தி டாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூர னமரின் முதுகீயான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதான்
சீவனள விற்கொ டாது
திரமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ்
செப்புமுறை தவறி டார்கள்
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரினொன் றுங்கொ டாது
வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்
மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (48)

திருவருட் சிறப்பு

திருமகள் கடாக்ஷமுண் டானெலவர்க்குஞ்
சிறப்புண்டு கனதை யுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடுஞ்
செல்லாத வார்த்தை செல்லும்

பொருளொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம்
புலியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேச மாவார்
பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்
பேரும்ப்ர திஷ்டை யுண்டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான்
பேச்சினிற் பிழைவ ராது
வருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிக
வல்லமைகண் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே.

நட்புநிலை.

கதிரவ னுதிப்பதெங் கேகளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தினட் பான தென்ன
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுத லென்ன
நிதியரச ரெங்கே யிருந்தாலு மவர்களொடு
நேசமொன் றுயிருக்கு
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர்
நிறைபக்ஷ மறவார் கள்காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்ட திபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (50)

காலமறிதல்.

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமுங்

கருதுசய காலமது கண்டந்த வேளையிற்
காரிய முடித்து விடுவார்
மேகமுங் கார்கால மதுசண்டு பயிர்விளைய
மேன்மேலு மாரி பொழியும்
மிக்கான வறிவுளோர் வருதருண காலத்திலே
மிடியாள ருக்கு தவுவார்
நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென் றுகந்து கூவு
நல்லோர் குறித்ததைப் பருவமலந்தந்த
நாளையின் முடிப்பர் கண்டாய்
வாகனைய காலை*கனை மாலைபுல் லெழுமலக
வாடிக்கை நிசமல் லவோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயலீடு
மலைமேவு குமரே சனே. (51)

இடனறிதல்.

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரிநிற் குமோ
விரைமலர் முடிப்பரமர் வேணியர விணைவெல்ல
மிகுகருட னுலா குமோ
வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
வேறொருவர் செல்ல வசமோ
துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்ன செய்யுந்
துணைகண்டு சேரிடமறிந்துசே ரென்றௌவை
சொன்னகதை பொய்யல் லவே
வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (52)

* கலை எனபதும் பாடம்.

வேட்டகத் திகழ்ச்சி.

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின்
மேன்மேலு முபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பாலுடன் பதார்த்தவகை
வேண்டுவ வெலாமமைப்பார்
ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப்பா
ரோயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
ருற்றநா ளொன்றிலோ
நாட்டமொரு படியிறங் குவதுபோன் மரியாதை
நாளுக்கு நாள்குறைவுறும்
நகைசெய்வர் மைத்துனர்க ளுளுவல்பார் போவென்று
நாணுமன் மாமி சொல்வாள்
மாட்ட மனை யாளொரு துரும்பாய் மதிப்பளவன்
மட்டியிலு மட்டியன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (53)

செல்வ நிலையாமை.

ஓடமிடு மிடமது மணற்சுடுஞ் சுடுமிடமு
மோடமிக வேநடக்கு
முற்றநக ராறதின்மடு மேடாகு மேடெலா
முழுதுபுனல்கொண்ட மடுவாயிடும்
நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு
நவில்சகடு மேல்கீ ழதாய்
நடையுடைய சந்ததிபல கூடுமுடை மேனிலையு
நன்னிலவு மிருளாய் விடும்
நீடுபகல் போயபின் னிரவாகு மிரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய்

மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவுகன வாகு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (54)

பிறந்தார் பெறும்பேறு.

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல வென்னவும்
தன்பேர் விளங்க வேண்டும்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்னவே
தரிக்கவே வேண்டு மல்லால்
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டு மல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னாமலே
செய்யவே வேண்டு மல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
னாகவே வேண்டு மல்லா
லறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ
ரதிகபூ பால ரையா
வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெரிய
மணியுரகன் முடிக ளெரிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (55)

வறுமையிற் சிறுமை.

வறுமைதான் வந்திடிற் றாய்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்று மெண்ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்து விளையும்
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையிற் றைரிய மில்லை
செய்யசபை தன்னிலே செல்லவே வெட்கமாஞ்
செல்வரைக் காணி னாணும்

உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி
னுயிருடன் செத்த பிணமா
மூலாம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்தி சொன்னால்
மறுவான முன்சொலார் தான்பின்ற னுன்பமிது
வந்தணுகி டாதருளுவாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (56)

தீச்சார்பா லாம் மையிழப்பு.

ஆனைதனை யேறினிய பார்க்கடற் குருவினை மெரன்
றாங்கிகலைந் திருக்கும்
மாயினும் பேர்கூடி விட்டுட டிழிவுநேர்
மறைகுறைந்து முடனே வரும்
மனைதரும் பெரியோர்கள் போவதை மெய்புனை
மீக்கொடுந் திசைகேடதாம்
இன்பமிகு பஞ்சமிலே சொர்ணமொன் றாட்டுதற்
கினியகோ னதுதடிக்கும்
சேனைமன் னவரென்ன தருமமிய மிக்கினுஞ்
சிறியோர்க ளாற்குறைபடுஞ்
சிங்கத்தை யும்பெரிய ருஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல் லவோ
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே யருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (57)

துணையுமுற்றும் பயன்படுபவை.

ஆயுதமன் னீர்வற்றி யிட்டாலு முற்றுநீ
ரமுதபா னங்கொடுக்கு
மாதவனை யொருபாதி கட்டெரி மறைந்தாலு
மப்போது முதவிசெய்யும்

கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினுங்
குவலயத் திருள்சி தைக்குங்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு
வீறுட னுதாரிதான் மிடியான போதினு
மிகநாடி வருப வர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையா தியன்றது
வியந்துள மகிழ்ந்து தவுவான்
மாறுபடு சூரசங் காரநம் வீரனே
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (58)

முன்னோர் கூறிய வல்லமைகள்.

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாப மேது
தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசை யுறவு
ஊரிலா தவர்தமக் கபயமேது பசிபிணிகளை
யுண்டிடார்க் குறுதி நிலையே
துணைமையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வ மேது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுடரிலார்க் காசை யேது
துர்க்குணமி லாதவர்க் கொருபகைவ ரேதுபேர்செய்
துஷ்டர்க் கிரக்க மேது
மார்புருவ வாளிமே லஸ்திரம் விடுத்தவன்
மான்மருக னான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே. (59)

நற்புலவர் கீழ்ப்புலவர் செயல்.

மிக்கான சோலையிற குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்

மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
லிருக்கின்ற தேனை நாடும்
மெத்தனை சுகந்தவகை யுற்றாலு முருள்வண்
டினந்தூர் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களங் கேயென்று
தாம்பார்த் துகந்து கொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
வள்ளியுந் தழுவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (60)

தாழ்தற் பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந்திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்ளிடைக ளுள்ளி விழலும்
மூங்கில்கள் வளைந்திடலு மேலவ ரிளைக்குதலு
முனிவர்க ளயர்ந்து கொளலும்
முதிர்படை யொதுங்குதலும் விலைமாதர்க ளடங்குதலு
முதலினர் பயந்திடுதலும்
ஆங்காவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் மூடி படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனை விளைப்பு வருமோ
மாங்கனிக் காவரனை வலமதா புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (61)

தெய்வச் செயல்.

சோடாய் மரத்திற் புறாவிரண் டிருந்திடத்
துறவுகண் டேவேடுவன்
றோலாம லவைவெய்ய வேண்டுமென் றொருகணை
தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
குலவுரா சாளி கூட
வுயரப்பறந் துகொண் டேதிரிய வப்போது
துதைந்தசிலை வேட னடியில்
சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
சிலையிற் றொடுத்த வாளி
சென்றிரா சாளிமெய் தைத்தது விழவிரு
சிறைப்புறா வாழ்ந்த வன்றோ
வாடாம லிவையெலாஞ் சிவன்செய லல்லால
மனச்செயலி னாலும் வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (62)

பாட லியல்பு.

எழுத்தசைகள் சீர்தளை களடிதொடை தட்டாத இசையா
திருக்கவே வேண்டு மப்பா
வீரம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
ளடக்கமு மிருக்க வேண்டும்
மப்பான பாவின மனைத்தையுஞ் சொல்லவே வேண்டுமு
னலங்கார முற்ற துறையில்
பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடுற சிறப்பெனப் பர்கான்

மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங் காளனருண்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (63)

விபூதி தரிக்கு முறைமை.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெ டுத்துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதி லொழுக
நித்தமு விடாமலே யன்றிநீ மையுந்து தரு
நினைவாய்த் தரிப்ப வர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமல னங்கே
சத்தியொடு நித்தம் விளையாடுவன் முத்திநிலே
தானுடைவரு செய்யுந் திரு
சருசலம் வாராதபா வறியுதவு மிவமரியே
சத்தியஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
மான்மருக னான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (64)

விபூதி வாங்கு முறைமை.

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருந்ததின் னணையிலி ருந்தும்
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கையொன் றாலுமொரு விரன் மூன்றாலும் வாங்கிவைத்
திகழ்தம் பலத்தி னேகும்

அரியதொரு பாதையி னடக்கின்ற போதினு
மசுத்தநில மான வதினு
மங்கே தரிக்கினுந் தந்திடற் றள்ளினு
மவர்க்குதவ கெம்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சகநா தனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (65)

இவ்வுறுப்பாற் பயனில்லை யால்.

தேவால யஞ்சுற்றி டாதகா லென்னகா
லெறிசியாக் கண்ணென் னகண்
தினமுமே நின்கமல பாதந்தனை நினையாத
சிந்தைதா னென்ன சிந்தை
மேவாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி யென்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னியணி
விடைசெயாக் கையென் னகை
நாவார நினையேத் திடாதவா யென்னவாய்
நற்றீர்த்த மூழ்கா வுட
றுணிலந் தென்னவுடல் பாவியா மியார் மனம்
நன்னெறிசெற் பலனோ புகான்
மாவாகி வேலைநடு வில்வருசூ ரன்மார் புருவ
வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (66)

நற்பொருளோடு தீப்பொருள் பொருந்தல்

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்ததென்ன
குலவுமா டுடன்க ணதர்தான
கூடப் பிறந்ததென்ன தண்ணீரி லுடனே
கொடும்பாசி யுற்றதென்ன

மாகருணை யமுதினொடு நஞ்சம் பிறந்தென்ன
வல்லிரும் பிறறு ருததான்
வங்கீத பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள்
வளமொடு பிறந்தென் னவுண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பண்ணுமொரு தாய்வ யிற்றிற்
புண்புரு விவேகியொடு சுயவர்கள் பிறந்தென்ன
பலனேது மிலலை யன்றோ
மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (67)

தன்னைத்தா லழிவு.

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூரிரும் புகளை வெல்லுங்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
கோத்திர மெலா மழிக்கும்
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
நண்ணுபற வைகளை யார்க்கு
நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்றுதன்
னமில்சாதி தனையி ழுக்கும்
உலவுநற் குடிதனிற் கோளர்களி ருந்துகொண்
டெற்றுரை யிட்டழிப்ப
ருளவனில் லாமலூ ரழியா தெனச்சொலது
முலகமொழி யிசமல் லவோ
வலமாக வந்தர னிடத்தினிற் கனிகொண்ட
மதயானை தம்பசோ தரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (68)

கைவிடத் தகாதவர்.

அன்னைசற் றங்களையு மற்றைநான் முதலா
வடுத்துவரு பழையோ ரையும்

மடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோ ரையும்
தன்னைநம் பினரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம் மையுந்
தருணமிது வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோ ரையும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக்கு றுதியாய்
நத்துசே வகனையுங் காப்பதல் லாதுகைந்
நழுவவிட லாகா துகாண்
மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்தசர வண்பூ பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (69)

நல்லோர் முறைமை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுத லாலுங்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலுங்
கொடும்பிதிர்க் கிடுத லாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாகங் கொடுத்த லாலுஞ்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்த லாலும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல்வார்த்தை சொல்ல லாலு
நன்மையே தருமலாற் றாழ்ச்சிகள் வாராதிவை
நல்லோர்கள் செயுமுறைமைகாண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (70)

அடைக்கலங் காத்தல்.

அஞ்சலென் றுநாயினுடன் றருமன் சுமந்துமுன்
னுறநெறிக் கடத்து வித்தா
னடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்பு ரிந்தான்
தஞ்சமென வந்திடு புறாவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொ டுத்தான்
றடமலைச் சிலகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளித் தான்
இன்சொலுட னேபூத தயையுடைய ராயினோ
ரெவருக்கு மாபத் திலே
யினியதனு சீவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கிரக்ஷிப்ப ரன்றோ
வஞ்சகிர வுஞசமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுட லிகின் டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (71)

பெரியோ ரியல்பு.

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற
லாபத்தின் வந்த பேருக்
கபயங் கொடுத்திடுத னல்வினஞ் சேர்ந்திடுத
லாசிரியின் வழிநின் றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி யருச்சனை செயல்
சோம்பலில லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியி னுட்டி யிடுதல்
மன்னவரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினுந் தாமரை யிலை
பருவு நீ பெணவுறுபு விளைவயெலா மேலவர்த
படாண்பெண் ழுவரைப்ப ரன்றோ

வன்னமயின் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில்
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (72)

நூல்பயன்.

வண்ணமயி லேறிவரு மெய்யா யுகந்தவன்
மலைமே லுகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கிசைய மேவுங் குமாரனுயர்
வானவர்கள் சேனா பதி
கன்னன்மொழி யுடையமா டுருப்புகலை மாமருகன்
கங்கைபெற றருள்புதல்வன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுளா யினன்கு டியிறைவன்
பன்னரிய புல்வயலில் வாலகுமரேசன்மேற்
பரிந்துகுரு பாததாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்துறை
பாடலொரு நூறு நாடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்ற பேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியையு மேபெறுவர்
நன்முத்தி யும்பெறுவரே. (73)

குமரேசசதகம்

முற்றிற்று.

ஸ்ரீ

குமரேச சதகவுரை.

காப்பு.

(பதவுரை) பூ-உலகத்தார் (உயர்ந்தோர்), மேவு-விரும்புகின்ற, புல்வயல்-திருப்புல்வயல் என்னும் க்ஷேத்திரத்தில், பொருந்து-திருக்கோயில் கொண்டருளியிருக்கும், குமரேசர் தம்மேல்-குமாரக் கடவுளின் மீது, தேம்-இனிமை, மேவிய-வாய்ந்த, சதகம்-சதகமென்னும் பிரபந்தத்தை, செப்ப-பாட, கோ மேவி-நாயகத் தன்மை பூண்டு, காக்கும்-(சகலாத்துமாக்களையும்) ரக்ஷிக்கின்ற, சரவணத்தான்-சரவணப் பொய்கையில் தோன்றிய காரணத்தால் சரவணபவன் என்னும் திருப்பெயர் பெற்ற சுப்பிரமணியப் பெருமானும், ஐந்துகரம்-ஐந்து கைகளையுடைய, கம்பம்-அசையுஞ் சுபாவத்தினைக் கொண்டதும், குடத்து-குடத்தை யொத்த மஸ்தகத்தைக் கொண்டதும், கா-சோலையின் கண் வசிப்பதுமான, குஞ்சரம்-யானையினது, வ(த)னத்தான்-வடிவைக் கொண்ட விநாயகப் பெருமானும், காப்பு-ரக்ஷகராவர். ஏ-அசை.

இது பாடாண்டிணையுள் கடவுள் வாழ்த்தென்னுந் துறை. அது வழிபடுகடவுள் வாழ்த்தென்றும், ஏற்புடைக்கடவுள் வாழ்த்தென்றும் இருவகைப்படும். அவற்றுள் இவ்வாழ்த்து வழிபடு கடவுள் வாழ்த்தென்க. எடுத்துக்கொண்ட விஷயம் தடையின்றி முடியும்பொருட்டு முன்னர் விநாயகக் கடவுளை வணங்குவது மரபாதலின் இந்நூலாசிரியரும் அந்த மரபை யநுசரித்து, அடைந்தாருடைய ஆபத்தைப் போக்கி அபீஷ்டத்தை யளிக்கவல்ல விநாயகப் பெருமானையும், அவருடைய இளைய சகோதரராயும் தமது உபாஸனா மூர்த்தியாயுமுள்ள முருகப் பெருமானையும் இச்செய்யுளால் வணங்குகின்றார்.

"நற்றவஞ் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்,
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள்செய்வார்க்கு மஃதிடம்"

என்கிறபடி திருப்புலவயலெல்லாவும் திருப்பதி [illegible] பார் 'பூமேவுபுலவை' என்றார் 'புலவயல்' புலவை [illegible] நின்றது. பூமேவு-அழகு வாய்ந்த எனினும் ஆம். "சாமிக்கு மேற்றகப்பன் சாமியுமாடு" என்பதைக் கருதியும், பிரமனை [illegible] யிலிட்டுச் சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை விளக்கி, திரு மால் முதலிய தேவர்களுக்கு அசுரரால் நேர்ந்த துன்பொழித்து அஞ்சலென்றஞ்சலித்தவரை யுடனே ஆதரிக்கும் [illegible] தாயிருத்தலை நோக்கியும், ஆசிரியர் முருகக்கடவுளை "[illegible] காக்குஞ் சரவணத்தான்" என்று [illegible] சேனாபதியாதலின் 'கோ' என்பதற்குத் தெய்[illegible] செய்வாருமுளர். சரவணம்-இமயமலையின் [illegible] கங்கா நதியாய பெருநதியும் நாணற்புல நிறை[illegible] பொய்கை. சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் [illegible] தீப்பொறிகளை அக்கினிபகவான் தாங்கிச் சென்று இப்பொய்கை யில் விட அப்பொறிகள் ஆறு பிள்ளைகளாயின. [illegible] உமாதேவியார் எடுத்தணைத்த அவை ஆறும் ஒருருவாய் முகங் களாறும், புயங்கள் பன்னிரண்டும், பாதங்கள் [illegible] விளங்கின. இக்காரணம் பற்றியே முருகக்கடவுளுக்கு 'சரவண பவன்' என்னுந் திருநாமமுண்டாயிற்று. கப்பன்—தாதை (தகப் பன்) எனினும் ஒக்கும். ரு-ஆகு பெயர்.

அவையடக்கம்.

(ப-ரை) மாரிக்கு-மழைக்கு, நிகர் என்று [illegible] பனி-பனியானது, சொரிதல் போலவும்-பெய்வது போலவும், [illegible] பெண்-இளம்பெண்கள், மனைக்கு-(குடியிருக்கும்) வீடுகளுக்கு, நிகர் என்று-ஒப்பாக வெண்மணி, மணல் வீடு-மணலினாலாய வீடுகள், கட்டுவது போலவும்-செய்வது போலும், [illegible] முன்-சந்திர னுக்கு எதிராக, மருவும்-பொருந்தியதாயும், [illegible] மினிமினிப் பூச்சி வெட்டுபோலும், பாருக்குள்-[illegible], [illegible] முன்-உத்தமர் முன்பாக, பித்தர்-உன்மத்தர்கள், [illegible]

னமான) பல வார்த்தைகளை, பகர்ந்திடும்-பேசுகின்ற, செயல போலவும்-செய்கையைப் போலும், பசைமயில-பசுமை நிறங் கொண்ட மயிலானது, ஆடுதற்கு-(சிறகு விரித்து) ஆடுவதற்கு, இணை என்று சரியென்று கருதி, வான்கோழி-, பாரில-பூமியில, ஆடுதல் போலவும்-(சிறகு விரித்து) ஆடுவதைப் போலும், பூரிக கும்-பெருக்கெடுக்கும், இனிய-இனிமையான, காவேரிக்கு-காவிரி நதிக்கு, நிகர் என்று-சரியென்று பாவித்து, போது-ஓடுகின்ற, வாய்க் கால் போலவும்-(சிறு நீர்) வாய்க்காலைப் போலும், புகல-(சிறப்பாகக்) கூறப்படும், சிப்பி முத்துக்கு-சிப்பியில் விளையும் முத்துக்கு, நிகராக(ச)மமாக, பளிங்கை-படிகக்கல்லை, பொருந்த வைத்தது போலவும்-சமமாக வைத்ததைப் போலும், வாரிக்கு முன்-சமுத்திரத்திற்கு முன்பாக, வாவி-குளமானது, பெருகல் போலவும்-கொந்தளிப்பது போலும், இன்சொல-இனிய சொற்களையுடைய, வாணர்முன்-கவிவாணர் முன்பு, உகந்து-மகிழ்ந்து, புலவை-திருப புல வையில் எழுந்தருளியுள்ள, வால குமரேசர்மேல-இளமை வாய்ந்த குமாரக் கடவுளின் மீது, சதகம்-சதக மென்னும் பிரபந்தத்தை, புகன்றனன்-(நான்) பாடினேன், மனம் பொறுத்து-(கவிவாணராகிய நீங்கள் என் அதிக்கிரமத்தை) க்ஷமித்து, அருள்புரிக-கிருபை செய்யவேண்டும். ஏ இரண்டும் அசை.

அவையடக்க மென்பது அவையினிடத்து அதாவது கற்றறிந்தார் கூடியுள்ள சபையினிடத்து ஒருவர் பேசவோ அல்லது பாடவோ புகுந்த புலவன் ஆரம்பத்தில் தன்னைக் கீழ்ப்படுத்திப் பேசுதலாம் இது கற்றோர்க்குரிய அடக்கத்தைக் காட்டும் முறையாம்.

நூல்.

குமரேசர் மகிமை=குமாரக்கடவுளின் பிரபாவம்.

1. (ப-ரை) மா-வண்டுகள், மிக்க-மிகுதியாக, தேன்-தேனை, பருகு-அருந்தும்படியான, கடம்பு-கடப்ப மலர் மாலையை, அணியும்-அணிந்துள்ள, மணி-அழகிய, மார்பனே-மார்பையுடையவனே, வள்ளி கணவா-வள்ளி நாயகியின் மணாளனே, மயில் ஏறும் விளையாடு குகனே-மயில் வாகனத்தின் மீது ஏறிக் கொண்டு விளையாடி வரும் குகப் பெருமானே, புல்வயல்-திருப்புல்வயலென்கிற திருப்பதியில், நீடு-நீண்ட, மலை-மலையின்கண், மேவு-எழுந்தருளிய, குமரேசனே - குமாரக கடவுளே, (நீ) புரிகுரு - இமயகிரியுச்சியில், ஒரு ஆறுதலையாய் வந்து-ஒப்பற்ற ஆறுமுகங்களையுடைய தேகமாய், சரவணம் பொய்கைதன்னில்-சரவணப்பொய்கை யென்னும் நாணல் தடாகத்தில், விளையாடியும்- திருவிளையாடல் செய்தும், புனிதாக்கு-பரிசுத்தரான சிவமூர்த்திக்கு, மந்த்ர உபதேசம் மொழிந்-பிரணவ மந்திரமான உபதேச வாக்கியத்தை, சொல்லியும்—உபதேசித்தும், போதனை-பிரமதேவனை, சிறையிலடைத்தும்-(கந்தமாதனத்தில்) சிறையிட்டும், தேமிகக-தெய்வத் தன்மை மிகுந்த, அரி அரபிரமஆதிகட்கும்-விஷ்ணு, சிவன், பிரமன் முதலிய தேவர்களாலும், செகுக்க முடியா-அழிக்கக் கூடாத, அவுணர்-அசுரர்களது மலை, தேகம் கிழித்து-(அவருடைய) உடலைப் பிளந்து, ஒப்புவமையில்லா-கூரிய வேலாயுதத்தினால், இருகூறு செய்து-இரண்டு துண்டம் ஆக்கி, அமரர்-தேவர்களுடைய, சிறை தவிர்த்து-சிறைவாசத்தை நீக்கியும், சேவிக்கும்-பூசிப்பவர் கண், தொண்டர்-அடியார்கள், இடர் உற்ற சமயம் தன்னில்-துன்பம் அடைந்த காலத்தில், நினைக்கும் முன்-(அவர்கள் உன்னை) நினைப்பதற்கு முன்பே, வந்து-பிரத்தியக்ஷமாய் வந்து, உதவியும் சகாயம் புரிந்தும், (இப்படி) நிறமும்-பிரதிதினமும், மெய்த் துணை-ஆய உண்மையான சகாயராய், விளையாடல்-விளையாடி நிற்கிறீரே, உலகம்-இப்பிரபஞ்சத்தில், உனை நிகர் ஆர்-உனக்குச் சமானமானவர், தெய்வம் உண்டோ-கடவுள் வேறும் உண்டோ (இல்லை என்பதாம்).

இப்பாடலில் குமரக் கடவுளே கடவுள் என்பதற்காதரவான விஷயங்களை வெளியிடுகின்றார். துக்கமயமான பிரபஞ்சத்தில் தோன்றி யுழலும் சகல ஜீவ ராசிகட்கும் ஆறுதலை (தணிவை) யருள்செய்ய ஆறுமுகங்களோடும் வந்து செய்தற்கரிய செயல்களால் சிருஷ்டி ஸ்திதிசங்கார மூர்த்திகள் தொடக்கமான எல்லாத் தேவர்களையும் பாதுகாத்து, ஆபத்துக் காலத்தில் அடியார்கள் தன்னை நினைக்கு முன் தரிசனந் தந்தருளும் சர்வ வல்லமை சுப்பிரமணியருக்கன்றி ஏனையோர்க்கில்லாமையால் அவரே கடவுளென்பது இச்செய்யுளால் இனிது விளங்குதல் காண்க. பூமிக்கு, உலை என்பன வேற்றுமை மயக்கம்.

அந்தணரியல்பு=பிராமணரின் ஒழுக்கம்

2. (பதவுரை) மயிலேறி.....குமரேசனே-, (அந்தணர்) குறையாத-கெடாத, காயத்ரி ஆதிசெபம்-காயத்திரி முதலிய மந்திர ஜெபங்களின், மகிமையும்-சிறப்பையும், கூறா-(புகழ்ந்து) ஓதப்படும், சுருதி பெருமையும-வேதார்த்தங்களை அறிந்த சிறப்பையும், கோது இல்லா-குற்றமற்ற, ஆகம புராணத்தின் வளமையும்-ஆகம புராணங்களை உணர்ந்த சிறப்பையும், (கொண்டு) குலவு-பொருந்திய, யாகம் ஆதியாவும்-யாகங்கள் முதலிய அநேக வைதிக கருமங்களையும், முறை ஆ(க)-ஒழுங்குபெற, நடத்தலால்-செய்து வருவதினால், சகல தீவினைகளையும்-எல்லாப்பாப கிருத்தியங்களையும், முளரிபோல-அக்கினியைப் போல, தகிப்பார்-சுட்டெரிப்பார்கள், முதன்மை பெறு-தலைமை வாய்ந்த, சிலை-கல்லுகளினாலும், செம்பு-செம்பினாலும், பிருதுவிகளில-மண்களினாலும், தெய்வ மூர்த்தம்-தெய்வ உருவங்களை, உண்டாகுவிப்பார்-செய்து வைப்பார்கள், நிறை ஆக-நேர்மைபெற, நீதிநெறி-நியாயமார்க்கங்களினின்றும், வழுவார்கள்-தப்பி நடவார்கள், ஆகையால்-ஆதலினாலே, நீள்மழை-மிக்க மழை, பொழிந்திடுவதும்-பெய்வதும், நிலம் அது, பூமியானது, செழிப்பதும்-வளம்பெறுவதும், அரசர்-வேந்தர்கள், செங்கோல் புரியும் நிலையும்-நீதியோடு ஆட்சி செய்யும் தன்மையும். மாதவர்-சிறந்த தபோதனர்கள், செய்தவமும்-செய்கின்ற தவத்தின் தன்மையும், மறையோர்களாலே-பிராமணர்களாலே, விளங்

கும்-பிரகாசியாநிற்கும், (அதனால்) இவர்-இந்த அந்தணர்கள், மானிட தெய்வம்-மனிதருள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களா வார்கள். காண-ய- அசை.

அந்தணர்-பிராமணர், எல்லாவுயிர்களிடத்தும் காருண்யம் கொண்டவராதலின். "அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வு யிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" என்றார் நாயனார். மறையோர்-வேதபாரகர் பூசுரர் (நிலத்தேவர்) என்னும் அவர்கட் கொருபெயராதலின் இங்கும் அவர்களை 'மானிடத் தெய்வம்' என்று கூறப்பட்டது.

அரசரியல்பு=மன்னவரின் ஒழுக்கம்.

3. (ப-ரை) மயிலேறி.....குமரேசனே —, குடி-குடிகளிடத் தும், படையில்-சேனைகளிடத்தும், அபிமானம்-பற்றும், மந்திர ஆலோசனை-இராஜாங்க விஷயங்களை இரகசியமாக ஆலோசித்தலும், குறிப்பு அறிதல்-குறிப்பினால் உண்மை யைத் தெரிந்துகொள்ளுதலும், சத்யவசனம்-மெய்பேசுதலும், கொடை-ஈகையும், நீதம்-அறநெறியும், அவரவர்க்கு-அவ ரவர்களுக்கு, ஏற்ற-தகுந்த, மரியாதை-மரியாதை செய்தலும், பொறை-பொறுமையும், கோடாத-வழுவாத, சதுர் உபாயம்-சாம தான தண்டபேதமாகிற நான்குவித உபாயங்களும், [illegible] ரணையோடு-தேச க்ஷேமத்தை விசாரித்தலுடன், [illegible] கர்த்தரை-மந்திரிமார், சேனாதிபதி என்பவர்களை, பண்பு அறிந்து-யோக்கியதை கண்டு, அமைத்தல்-வேலையில் அமைத்தலும், பல்லுயிர் எல்லாம்-பலவான ஜீவராசிகளை யெல்லாம், தம் உயிர்க்கு-தன்னுடைய ஆத்மாவிற்கு, நிகர் என்று-சமானமென வெண்ணி, புரத் தல்-தாங்கிக் காப்பாற்றுதலும், குற்றங்கள் கண்டு-தவறுகளைக் கண்டுபிடித்து நீக்குதலும், நாடி பெறுதற்கு-கண்டு பெறத் தக்க, உறுதி ஆன-உண்மையாகிய, நட்பு-சிநேகம் கொள்ளு தலும், அகம் இன்மை-அகங்காரம் இல்லாதிருத்தலும், குணம் ஒடு-நல்ல குணங்களுடனே, கல்வி அறிவு-படிப்பினால் ஏற்பட்ட அறிவுடைமையும், சோரா-தோல்வியடையாத, காலம் இடம் அறிதல்-காலத்தையும் இடத்தையும் தெரிந்து கொள்ளுதலும்,

வினை வலிகண்டு-செய்யப் புகுந்த வினையின் வலிமையை யுணர்ந்து, துஷ்ட நிக்ரக செளரியம்-தீயவரை யடக்கியாளும் வீரமும், இது-(ஆகிய) இவையனைத்தும், வடிவுபெறு-அழகு பொருந்திய, செங்கோல்-நீதியரசாட்சியை, நடத்திவரும்-செலுத்திக் கொண்டு வரும், அரசர்க்கு-மன்னவர்க்கு, வழுவாத-தவறாத, முறைமை-விதிகளாம். காண்-அசை.

இதுகாண்-இது என்பதனைத் தனித்தனி முடிபாக (பிரத்யேக பதார்த்தமாகக்) கொள்க. உபாயங்கள் நான்கனுள் சாமமாவது பகைவரைச் சமாதானப்படுத்தி வெல்லுதல்; தானம்-பொருளளித்து வெல்லுதல், பேதம்-வேற்றுமைப்படுத்தி வெல்லுதல், தண்டம்-தண்டித்து வெல்லுதல். வினைவலி-இது ஏனைய மூன்று வலியையும் உணர்த்தி நின்றது; அவை-தன்வலி, பகைவலி, துணைவலி என்பனவாம். தன்னுயிர்போல மன்னுயிரைக் காக்கவேண்டு மென்பார் 'பல்லுயிரெல்லாந் தன்னுயிர்க்கு நிகரென்றே பரிதல்' என்றார். குற்றங்கள் களைதல், பயிர்களுக்குக் களைபிடுங்குதல் போலாம்

வணிகரியல்பு=வைசியரின் ஒழுக்கம்.

௪. (பதவுரை) மயிலேறி ... குமரேசனே—, கொண்டபடி போலும்—(பண்டங்களை) கொள்விலைக்கே கொடுப்பது போன்று, விலைபேசி-விலையைக்கூறி, லாபம் சிறிது கூடிவர-கொஞ்ச லாபங் கைகூடி வருமாறு, நயம் உரைப்பார்-உபசார வார்த்தைகள் சொல்லுவார்கள், கொளும் ஒரு முதலுக்கு-தாங்கள் கொண்டதோர் விலை முதலுக்கு, மோசம் வாராதபடி-நஷ்டம் நேரிடாதவிதம், குறுகவே-சிக்கனமாகவே, செலவு செய்வார்-(பணத்தைச்) செலவிடுவார்கள், வண்டப் புரட்டர்தாம்-துஷ்டத்தனமுள்ள வஞ்சகர், முறிதந்து-சீட்டெழுதிக் கொடுத்து, பொன் அடகு வைக்கினும்-பொன் ஆபரணங்களாக அடகு வைத்தாலும், கடன் ஈந்திடார்-கடன் கொடுக்கமாட்டார்கள், மருவும்-பொருந்திய, நாணயம் உள்ளோர்-வாக்குப் பிசகாதவர். கேட்டு அனுப்புகினும்-(பண்டங் கொடுத்தனுப்புமாறு ஆள் மூலமாகவேனும்) கேட்டனுப்பினும், அவர் வார்த்தையில்-அவரது சொல்லில் (நம்பிக்கை வைத்து), எல்லாம் கொடுப்பார்-(அவர்கள் கேட்ட) யாவையுங் கொடுத்தனுப்புவார்

கள், கண்டு எழுது பற்று வரவினில் கணக்குப் பார்த்துப்பதிவு செய்யும் கொடுக்கல் வாங்கல்களில், மயிர்பிளந்து-மயிரையும் பிளவு செய்து (அதாவது நுண்ணியதொகையையும் கணக்கிட்டு), கணக்கில்-(அந்த) கணக்காசாரத்தில், அணு ஆகிலும் விடார்-லவலேசமும் தப்பவிட மாட்டார்கள், காசு-பணத்தை, வீணில் செலவிடார்-விருதாவில் செலவழிக்க மாட்டார்கள், உசிதம் ஆனதில்-தகுந்த விஷயத்தில், கனதிரவியங்கள் விடுவார்-மிகுந்தபணத்தைச் செலவிடுவார்கள், இது—இவையாவும், மண்தலத்து ஊர்-பூமியின்கண், கனம்-பெருமை வாய்ந்த, வர்த்தகம் செய்கின்ற-வியாபாரம் புரிகின்ற, வணிகர்க்கு-வைசியர்க்கு, முறைமை-கிரமங்களாம். காண-அமைச-வண்டத்தனம்-நீங்கிழைக்குந்தன்மை, புரட்டர்-மோசஞ்செய்பவர்

வேளாளரியல்பு=பயிரிடுங் குடிகளின் ஒழுக்கம்.

5. (ப-ரை) மயிலேறி....குமரேசனே--, நல்ல-நன்மையைத் தருவதான, தேவ ஆலயம்-தேவாலயங்களில், பூசனை-ஆராதனை, நடப்பதும்-நடைபெற்று வருவதும், நாடோறும்-பிரதிதினமும், மழை பொழிவதும்-மழை பெய்து வருவதும், நாடிய-கடவுளை விரும்பிய, தபோதனர்கள்-முனிவர்கள், மாதவம்-சிறந்த தவத்தை, புரிவதும்-செய்து வருவதும், நவில-யாவராலும் புகழ்ப்படுகின்ற, வேதவேதியர் எல்லாம்-வேதமுணர்ந்த விப்பிரரெல்லோரும், சொல்ல அரிய-சொல்லுதற் கருமையான, யாகம் ஆதிகருமங்கள்-வேள்விகள் முதலான சற்கிருத்தியங்களை, செய்வதும்-செய்துகொண்டு வருவதும், தொல்புவி-பழமையான பூதலம், செழிக்கும் நலமும்-செழிப்புறுதற்குரிய மேன்மையும், சுபசோபனங்களும்-மங்களகிரியைகளும், கொற்றவர்கள்-(ஜய சீலரான) வேந்தர்களின், செங்கோல்-செங்கோலினால் (நீதிவழுவாத ஆளுகையால்), துலங்கும்-விளங்குகின்ற, மநுநெறி முறைமையும்-மனுதர்ம சாஸ்திர வொழுங்கும், வெல்ல அரிய-வெல்லுதற்கு முடியாத (நிகரில்லாத), சுகிர்தம் ஒடு-நற்காரியங்களுடன்; வர்த்தகர்கள்-வியாபாரிகள், கொள்விலையும்-கொள் முதற்கிரயங்களும், விற்பனையும்-விற்கும் வகையும், மிக்க புகழும்-மேலான கீர்த்தியும், மிக்க அதிகாரமும்-மேலான உத்தியோகங்களும், தொழில் ஆளர்_

வேலை செய்பவரின், ஜீவனமும்-பிழைப்பின் திறமும், வீரான சூரர்-சௌரியத் தன்மையுள்ள யுத்தவீரர்களின், வலியும்-பராக்கிரமமும், வல்லமைகள் சகலமும்-மற்றுமுள்ள வீரதீரச் செயல்களெல்லாவற்றையும், வேளாளர்-உழுது பயிரிடுங்குடிகளுடைய, மேழியின் வாழ்வினால்-கலப்பையின் சம்பத்தினால், விளைவ அன்றோ-உண்டாவன அல்லவா ?

இதனால் உலகம்நிலைத்தற்கும் உயர்வடைதற்கும் ஆதாரமான உணவுப் பொருள்களை உதவும் வேளாளரின் மேம்பாடு விளக்கமாதல் காண்க. "உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம், விட்டேமென் பார்க்கு நிலை" என்று தெய்வப்புலவர் கூறியுள்ளதும் ஈண்டறிதற் பாற்று.

பிதாக்கள்=தந்தைமார்.

6. (பு-ரை) மவுலிதனில்-சடாபாரத்தில், மதி-சந்திரனையும், அரவு-பாம்பையும், புனை-அணிந்துள்ள, விமலா-மலரகிதராகிய சிவ பெருமான், உதவு-தந்த, சிறுமதலையை-இளங்குழந்தைபோன்று, வரு குருபரா-வந்தருளும் முருகக்கடவுளே, மயிலேறி . . .குமரேசனே—, தவம் அது செய்தே-தவத்தையியற்றியே, பெற்று எடுத்தவன்-ஈன்றவன், முதல்பிதா-முதல்தந்தை, தனைவளர்த்தவன்-தன்னை வளர்த்துச்செய்து பாதுகாத்தவன், ஒருபிதா-, தயை ஆக-கிருபையுடனே, வித்தையை-கல்வியை, சாற்றினவன்-கற்பித்தவன், ஒருபிதா-, சார்ந்த-(நாம் தஞ்சமாக) அடைந்த, சற்குரு-உத்தமகுரு, ஒருபிதா-, அவம் அறுத்து-பிரயோசனமில்லாத விஷயங்களைநீக்கி, ஆளுகின்ற அரசு-(தன தேசத்தை ஒழுங்கு பெற) ஆட்சி செய்கின்ற அரசன், ஒருபிதா-, நல்ல ஆபத்து வேளைதனனில் - ஆவசியகமான ஆபத்துக் காலத்தில், அஞ்சல் என்று-பயப்படாதே என்று சொல்லி, உற்ற துயர் தீர்த்து உளோன்-நேர்ந்த துன்பத்தை யொழித்தவன், ஒருபிதா—, அன்பு உள்ள-பட்சமுடைய, முன்னோன்-தமையன், ஒருபிதா-, கவளம் இடும்-அன்னமிடுகின்ற, மனைவியை பெற்றுளோன்-மனையாளை ஈன்றவனாகிய மாமன், ஒருபிதா-, கலிதவிர்த்தவன்-தரித்திரத்தைப் போக்கியவன், ஒருபிதா-, காசினியில்-பூமியில், இவரை-இந்த ஒன்

யது பேரையும், நித்தம்-அநுதினமும், பிதாஎன்று-தந்தைமாரென்று, கருதுவது-நினைப்பது, நீதி ஆகும்-நியாயமாம்.

சிறுமதலை-இளையமகன். மதலை-தூண், கட்டிடத்தை வீழவொட்டாது தாங்கவல்ல தூண்போன்று குடும்பத்தைப் பாதுகாத்தற்குரியவன் புத்திரனாதலின் அவனை மதலை என்றார். முருகக்கடவுள் சிவபிரானுக்குப் பிரணவப்பொருளை உபதேசித்தது மன்றி, அகஸ்திய முனிவருக்குத் தமிழையும் தத்துவ ஞானத்தையும் உபதேசித்திருத்தலால் ஆசிரியர் அவரைக் 'குருபரா' வென்று கூறினர். இகபர இன்பங்கட்கு ஏற்ற துணைவியான மனைவியை அளித்தவனாதலின், மாமனையும் ஒரு பிதாவென்றார். தயை-தயா வென்னும் வடமொழி "ஆவீறையும்" என்ற விதியால் ஆகாரவீறு ஐகாரமாய்த் தயை யென்றாயிற்று குரு-அஞ்ஞானத்தை யொழிப்பவன், 'கு'—அஞ்ஞானம், 'ரு' அதன் நிவர்த்தி. கவளம்-பிடியளவு கொண்டசாதம். குகனே-அடியவரின் இருதயமாகிற குகையில் வாழ்பவனே.

ஒன்றையொன்று பற்றியிருப்பன—இன்னது இருந்தால் இன்னது கூடியிருக்குமெனல்.

7. (பரை) மயிலேறி ....குமரேசனே--, சத்தியம்-உண்மை, தவறாது-பிசகாமல், இருப்பவர் இடத்தினில்-உள்ளவரிடத்தில், சார்ந்து-பொருந்தி, திருமாது-இலக்ஷ்மி, இருக்கும்-இருப்பாள், சந்ததம்-அனுதினமும், திருமாது-இலக்ஷ்மி, இருக்கும்-உள்ள, அஇடந்தனில்-அந்த இடத்தில், தனது-தன்னுடைய, பாக்கியம்-செல்வம், இருக்கும்-உண்டு, அஇடம் தன்னில்-அவ்விடத்தில், விண்டுவின்-விஷ்ணுவின், கலை-அம்சம், இருக்கும்-உண்டு, விண்டுவின்கலை-திருமாலின் அம்சமானது, பூண்டு இருக்கும், அஇடந் தன்னில்-பொருந்தி உள்ள அவ்விடத்தில், மிக்கான-மேலான, தயை-அருள், இருக்கும்-உண்டு, பக்தி உடன்-அன்புடனே, இனிய-இனிமையான, தயை உள்ளவர் இடம் தன்னில்-கிருபையுள்ளவரிடத்தில், பகர்-சிறப்பித்துச் சொல்லப்பட்ட, தருமம்-தருமமானது, மிக-மிகுதியும், இருக்கும்-உண்டு, பகர்-அவ்விதம் சொல்லிய, தருமம் உள்ளவரிடம் தன்னில்-தருமத்தை யுடைய

வரிடத்தில, சத்துரு-பகைவர்களை, பலாயனம்-மூதுகிடச் செய்யும் திறல-வல்லமை. இருக்கும்-உணடு, இசைவைத்து-புகழை நிலை நிறுத்தி, மிகுந்த-மிகுதியாகிய,திறல-வலலமையை, உளளவரிடத்தில-உடையவரிடம், வெகு-பலவான, மன்-நிலைபெற்ற, உயிர்-ஜீவ ராசிகள், சிறக்கும் அனறே-சிறந்து வாழும்அலலவா.

இவர்க்கு இவர்தெய்வம் எனல்=இன்னவர்க்கு இன்னவர் கடவுள் எனல்.

8. (ப-ரை) மயிலேறி .. ..குமரேசனே—, ஆதுலாக்கு-தரித்திராக்கு, அ்ன்னம்-உணவுபபொருளை, கொடுததவர்களே-அளித்தவரே, தெய்வம்-கடவுள, அன்புஆன-பிரியமான, மாணுககருக்கு-சிஷயர்களுககு, அரிய-அருமையாகிய, குருவே-ஆசிரியனே, தெய்வம்—, அஞ்சினோக்கு-துன்பத்தால பயநது வநதவர்களுக்கு, ஆபதது-அநதத துனபததை, அகற்றினோனே-போககியவனே, தெயவம் ஆம்—,காதலஉறு-அனபு கொணட, கற்பு உடைய-கற்பினை உடைததா யிருககும, மங்கையாதமககு எலலாம்-பெணடுகள் அனைவருககும், கணவனே-புருஷனே, மிகக-மேலான, தெய்வம்—, காசினியில-உலகததில, மன்னு உயிர் தமககு எலலாம்-பொருநதிய ஜீவராசிகளுககு எலலாம், குடிமரபு-பிரஜைகளின் வமிசததை, காககும்-பாதுகாககும், மனனவா-அரசாகள, தெய்வம் ஆம்—, ஓதுஅரிய-சொலலுதறகு அருமையாகிய, பிள்ளைகட்கு-மககளககளுககுஅன்னை தந்தையார்-தாய்தகபபன்மாரே,தெய்வம்-,உயர்-உயாநத, ஜாதி-வகுப்பையுடைய, மாநதாயார்க்கும்-மனிதர்கள் எலலோருக்கும், உறவின் முறையார்-பநதுககளே, தெயவம்—, விசுவாசம்-நம்பிககை, உளளபோககு-உடையவர்க்கு, உறற-பொருநதிய, சிவபக்தா-சிவனடியார்கள், தெய்வம்-மாதயையினால-மிகக கிருபையினுலே, சூததிரர்ககு-நான்காவது வகுப்பினர்ககு மறையோா-பிராமணர்களே, தெய்வம்-,வானவாககு-தேவர்களுககு, நீ தெயவம்-,

"குலமகட்குத தெயவம் கொழுநனே" ஆதலின் 'மஙகையர் தமக்கு எலாம் கணவனே மிகக தெயவ'மென்று கூறினர். "பெறுமவற்றுள் யாமறிவதிலலை அறிவறிநத மக்கடபே றலலபிற"என்ப

தைக் குறிப்பிக்க 'ஓதரிய பிள்ளைகட்கு' என்றார். கறபு-புல்விகுதி பெற்ற தொழிற் பெயர். ஓதரிய-(ஓத அரிய) நிலைமொழியில் அகரம் தொக்கி நின்றது. மாநதா-பலர் பால பன்மையிலமாததிரம் வரும் ஒருபெயர்ச்சொல.

இப்படிப்பட்டவர் இவரெனல்=இத்தன்மையானவர் இன்னவரெனல்.

9, (பரை) மாயவா-திருமாலின், சகோதரி-உடன் பிறநதாளான, மனோன்மணிககு-பார்வதி தேவியாருக்கு, அன்பான-பிரியமாகிய, வரபுத்ர-சிரெஷ்ட குமாரனே, வடிவேலவா-கூரிய வேலாயுததலதயுடைய கடவுளே, மயிலேறி .. .குமரேசனே—, ஞாய நெறி நீதி முறைமைகள், தவறுமல-வழுவாமல, உலக பரிபாலனம், உலகத்தின் பாதுகாப்பை, நடத்தும் அவனே-செயது வருபவனே அரசன் ஆம்-மன்னவனாவான், ராசயோசனை தெரிநது-அரசனது கருத்தை யுணாந்து, உறுதி ஆகிய செய்தி-நலததைதக கொடுப்பதாகிய விஷயத்தை, நவிலும் அவனே-சொலலுபவனே, மந்திரி-அமைசசன், நேயம் உடனே-அபிமானத்துடன், தனது சரீரததைத-தன்னுடைய உடலை, எணணாத-பொரிதென்று மதியாத, சிர்வாகியே-போாத்தொழில நடததவலலசமர்ததனே, சூரன் ஆம்-வீரனாவான், நிலைபெறும்-சாசுவதமான, இலக்கணம் இலக்கியம்-இலக்கண இலககிய நூலகளை, அறிநது சொல்லும்-வரன முறையாகக கற்று வெளியிடும், நிபுணகவியே-பாண்டித்தியமுளள புலவனே, கவிஞன் ஆம்-புலவனாவான், 'ஆயது ஒரு வாகடம்-பொருத்தமுள்ளதொரு வைத்திய நூலையும், தாதுவின் நிதானமும்-நாடியின் நிலைமையையும், அறியும்-தெரிநத, முதியோன்-அனுபவ முதிாசசியுள்ளவனே, வைதத்தியன்-வைத்தியனாவான், அகம இன்றி-அகங்காரம் இலலாமல, மெய் உணாநது-(தத்துவ விசாரத்தால) பொருள்களின் யதார்த்த நிலையை அறிநது, ஐமபுலன் ஒழித்து விட்டவனே-பஞ்சேநதிரியங்களையும தன் வழி யடககியவனே, மெய் ஞானி எனல ஆம்-உணமையான ஞானி என்று சொலலக்கூடும.

"அறனிழுககா தலலவை நீககி மறனிழுககா, மானமுடைய தாசு" என்கிறபடி ஆட்சி புரிய வலலவனே அரசனாவான் என்பார் 'நியாய நெறி . . . யாசனும்' எனறாா. இவ்வாறே மந்திரி, போர்

வீரன், வித்துவான, வைத்தியன், மெய்ஞ்ஞானி என போரும் அவ ரவர்க்குரிய லக்ஷணங்களை யுள்ளபடி பெற்றிருந்தாலொழிய அவ் வாறு அழைத்தற்குரியவராக மாட்டார்கள். மாயவர்-மாயையை யுடையவர் (கிருஷ்ண மூர்த்தி)

விரைந்து அடக்கத் தகுவன இவையெனல்=உடனே கண்டிக்கத் தகுந்தவை இன்னவை எனல்.

10. (ப-ரை) மைக்கு-மையிடுவதற்கு, இனிய-போக்கியதை யான, கணணி-கணகளை யுடையவளாகிய, குறவள்ளி-குறமாதென் னும் வள்ளி நாயகியையும், தெயவானையை-தெய்வயானையையும், மணமசெய்த-பாணிககிரகணம் செயதுகொண்ட, பெரு அழகனே-மிகக அழகையுடையவனே, மயிலேறி .....குமரேசனே—, அக கினியை-நெருப்பையும், வாய்மூறந்து-வாய்பதற்றமுளள, துர்ச் சனரை-துஷ்டரையும, வஞ்சம் மனையாளை-கபடததனமையுளள மனையாட்டியையும, வளா-வளர்நதுவரும், பயிர்கொள-பயிர்கள் கொணட, களையை-களையையும், அஞசாவிரோதிகளை-(பழிபாவங கடகுப) பயப்படாத பகைவர்களையும், அநியாயம் உடையோரை-நியாய நெறியைக கடநதவாகளையும, அகிருததியம்பெணகள-தகாத செயகையுளள பெணடுகளின, ஆபபை ஆரவாரததையும, கைககு இனிய-கைககு கநத (பயனபடததகக), தொழிலாளியை-பணி யாளனையும, கொணட-(தம்) வசமாகிய, அடிமையை-அடிமையை யும், களவுசெய்யும் திருடரை-திருடடுத தொழிலபுரியும் சோரர் களையும, கருதிய-எணணிய, விசாரததை-கவலையையும, அடக்கம் இல-அடககமிலலாத, பலிசையை-இளம் பெணணையும, கடிது ஆன கோபமதனை-கொடிய கோபததையும, மெயககு-சரீரத்திற்கு, இனிது அலா-இனிமை யாகாத, பிணியை-வியாதியையும், அவை உதாசீனததை-சபையினகண வரும், நிநதையையும், வினை மூண டிடும சணடையை-கெடுதி விளையககூடிய சண்டையையும், விஷமவுறு கோரததை-வஞ்சகம் பொருநதிய குதிரையையும், அன்று அடக்குவது அலலால-அபபோதைககபபோது அடக்கிக கொண்டுவர வேணடுமேயலலாமல, மிஞசவிடல ஆகாது (பிறகாகட் டும் எனறு) மிஞச விடுதல கூடாது. காண-அசை.

மைகலினிய கண்ணி-வசியஞ் செய்யும் மையினுஞ் சிறந்த கண்களையுடையவள் எனினும் ஒக்கும் "தூர்ச்சனரும் பொன்னூசி துடியுந் துரகதமும், அச்சமற முன்னிறக்கு மாயிழையும்-நச்சரவும், கண்டித்த எள்ளுங் கரும்பு மிளநீரும், தண்டித்தாற் கன்றோ சயம்" என்னும் பாடலும் இங்கறியத்தக்கதாம்.

இதனை விளக்குவது இதுவெனல்=இன்னதைப் பிரகாசப்படுத்துவது இன்னதெனல்

11. (ப-ரை) மயிலேறி . . குமரேசனே—, பகல்-பகற்காலத்தை, விளக்குவது-விளங்கச் செய்வது, இரவி-சூரியன், நிசி-இராக்காலத்தை, விளக்குவது-, மதி-சந்திரன், பார்-பூமியை, விளக்குவது-, மேகம்-மழை, பதி-கணவனை, விளக்குவது-மேம்பாடுறச் செய்வது, பெண்-மனைவி, குடி-குடிமரபை, விளக்குவது-, அரசு-அரசன், பரி-குதிரையை, விளக்குவது-சிறப்பிப்பது, வேகம்-தீவிர நடை, இகல்-சண்டையை, விளக்குவது—, வலி-வல்லமை, நிரை-கறவை, விளக்குவது-, நலம்-நற்குண நற்செயல்கள், இசை-இராகத்தை, விளக்குவது-, சுதி-சுருதி கூட்டல். ஊர் இடம்-நாட்டின் தலத்தை. விளக்குவது—, குடி-பிரஜைகள், உடல்-சரீரத்தை, விளக்குவது-போஷிப்பது, உண்டி-உணவு, இனியசொல்-இனிமையாகிய சொல்லை, விளக்குவது-சிறக்கவைப்பது, அருள்-கருணை, புகழ்-கீர்த்தியை விளக்குவது-, கொடை-உதார குணம், தவம்-தவஞ்செய்தலை, விளக்குவது-, அறிவு-, பூ-புஷ்பத்தை, விளக்குவது-, வாசம்-வாசனை, பொருள்-மணிமுதலிய பொருள்களை, விளக்குவது-, திரு-இலக்ஷ்மி, முகம்-முகத்தை விளக்குவது-, நகை-சிரிப்பு, புத்தியை விளக்குவது—, நூல்-கல்வி நூல்கள், மகம்-யாகத்தை, விளக்குவது—, மறை-வேதம், சொல்-வாக்கை விளக்குவது—, நிசம்-பொய்பேசாமை (சத்தியம்), வாவியை-தடாகத்தை, விளக்குவது-, நீர்-ஜலம்.

"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை", "பசும்புற்றலை காண்பரிது" என்னும் ஆன்றோர் கூற்றை யநுசரித்து இங்கும் 'பார் விளக்குவது மேகம்' என்றும், "கண்டன மொழியாள் செய்த கன்மமுங் கணவர்க்காமே" என்றபடி 'பதிவிளக்குவது பெண்' என்றும் கூறினார். "பாழே மடக்கொடியில்லா மனை" என்றும் வழங்கு

குவதால், பதி என்பதற்கு வீடு எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். புகல விளக்குவது என்று பாடம். புகல்-அடைக்கலம் புகுந்தவரை, விளக்குவது-மேம்படுத்துவது.

பிறப்பிட நன்மையால் நன்மை பெறுமை=பிறந்த இடம் சிறந்தாலும் அதனுல் சிறப்படையாமை இவை எனல்.

12 (ப-ரை) மங்காத-கெடாத, செந்தமிழ்-இனிய தமிழை விரித்த, குறுமுனிக்கு-அகஸ்திய முனிவருக்கு, உபதேசம் வைத்த-தத்துவோபதேசஞ் செய்தருளிய, மெய்ஞ்ஞான குருவே-உண்மையான ஞானசாரியனே, மயிலேறி.....குமரேசனே-, சிங்கார வனம் அதில-பூந்தோட்டத்தில; உதிப்பினும்-பிறந்தாலும், காகம் அது-காக்கையானது, தீம்சொலபுகல-இனிமையான குரலகொண்டு கூவும், குயில ஆகுமோ-குயிலாகுமா (ஆகாது), திரை-அலையானது, எறியும்-வீசப்பெற்ற, வாவியில-தடாகத்தில, பூத்தாலும்-மலர்ந்தபோதிலும, கொட்டி-கொட்டிப் பூவானது, செம்கஞ்சமலர் ஆகுமோ-செந்தாமரை மலராகுமா? அம்-அழகிய, கான் அகத்தில-காட்டில, பிறந்தாலும்-உற்பத்தியானுலும, முயல ஆனது-முசலானது, ஆனையின் கன்று ஆகுமோ-ஆனைக குட்டியாகுமா?, ஆண்மை ஆகிய-பராக்கிரமம் பொருந்திய, நலல குடியில பிறந்தாலும்-உத்தம குலத்தில ஜனித்தாலும், அசடர்-கீழ் மக்கள், பெரியோர் ஆவரோ-மேன்மக்களாவார்களா?, சங்கு-சங்குகள், ஆடு-தவழப் பெற்ற, பாற்கடல பிறந்தாலும்-திருப்பாற்கடலில உண்டானுலும், நத்தை தான்-நத்தையானது, சாலக்கிராமம் ஆமோ-சாலக்கிராமமாகுமா? தடம் மேவு-விசாலம் பொருந்திய, கடல நீரிலே-சமுத்திர ஜலத்திலே, உப்பு விளையினும்-உப்பானது பயிரானுலும், சாரம்-இனிப்பையுடைய, சர்க்கரை ஆகுமோ-சருக்கரை ஆமா?.

குறுமுனி-அங்குட்டப் பிரமாணமுள்ள ரிஷி (குள்ளவுருவினர்). இவர் மட்கலயத்திலுதித்துக் குமாரக் கடவுளை நோக்கித் தவம்புரிந்து அப்பெருமானுல் தமிழும் தத்துவோபதேசமும் அருளப் பெற்றவர். அதுபற்றி ஆசிரியர் முருகக் கடவுளை 'மங்காத.....குருவே' என்று கூறினுர். பூ-நான்கு வகைப்படும். அவை

கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என்பன. இவற்றுடன் நிலப்பூவையுஞ் சேர்த்து ஐந்தென்பாருமுளர். கோட்டி-நீர்ப்பூவைச் சேர்ந்தது.

பலர்க்கும் பயன் படுவன = எல்லோருக்கும் உபயோகமானவை இவை எனல்.

13. (ப-ரை) வண்டு-வண்டுகள், இமிர்-ரீங்காரஞ் செய்கின்ற, கடப்பமலர் மாலை-கடப்பமலரால் தொடுக்கப்பட்ட மாலையை, அணி-அணிந்துள்ள, செம்களபம் மார்பனே-சிவந்த கலவைச் சந்தனம் பொருந்திய மார்பை யுடையவனே, வடிவேலவா-, மயிலேறி... குமரேசனே—, கொண்டல்-மேகமானது, பொழி-பெய்கின்ற, மாரியும்-மழையும், உதார சற்குணம் உடைய-ஈகைத்தன்மையான நல்குணத்தைக்கொண்ட, கோவும்-பிரபுவும், ஊருணியின் நீரும்-(ஊராரால் உண்ணப்படும்) கிணற்று ஜலமும், கூட்டம் இடு-பலர் கூடுமிடமான, அம்பலத்து-பொது வெளியிடத்தில், உறு-பொருந்திய, தருவின்-மரத்தின், நீழலும்-நிழலும், குடியாளர்-குடிஜனங்கள் (செய்யும்), விவசாயமும்-வேளாண்மையும், கண்டவர்கள் எல்லாம்-எவர்களும், வரும்-வந்து சேருகின்ற, சந்தியில்-பலவழி கூடுமிடத்தில், பலகனி-அதிக பழங்களை, பழுத்த பழுத்துள்ள, மரமும்-, கருணை உடனே-கிருபையோடும், வைத்திடும்-வைக்கின்ற, தண்ணீர்ப்பந்தலும்-, காவேரி போல ஊற்றமும்-காவேரி நதியைப்போன்ற நீர்ப்பெருக்கும், விண்தலத்து உறை-ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற, சந்திர ஆதித்த கிரணமும்-சந்திர சூரியர்களின் கிரணங்களும், வீசு-வீசுகின்ற, மாருத சீதமும்-காற்றின் குளிர்ச்சியும், விவேகி என்னும் நல்லோர் இடத்தில்-அறிவாளர் என்கிற உத்தமரிடத்தில், உறு-பொருந்திய, செல்வமும்-சம்பத்தும், வெகுசனர்க்கு-பல ஜனங்களுக்கும், உபகாரம் ஆம்-பிரயோசனமாகும்.

தாம் அழியினும் குணம் அழியாதவை = இன்னவை கெட்டாலும் அவற்றின் குணம் கெடாதெனல்.

14. (ப-ரை.) மங்களம் - சுபகரமாகிய, கல்யாணி - உத்தம குணங்களும் வடிவமும் உள்ளவளான, குறமங்கை-வள்ளி நாயகியையும், சுரகுஞ்சரி-தெய்வ யானையையும், மருவு-தழுவிய, திண்

புயவாசனே - பராக்கிரமம் பொருந்திய புஜங்களில் கலவை மணம் வீசப்பெற்றவனே, மயிலேறி......குமரேசனே—, தங்கம் ஆனது—, தழலில் நின்று உருகி - அக்கினியிற்படிந்து உருகி, மறுகினும் - தத்தளித்தாலும், தன் ஒளி மழுங்கிடாது - தனது பிரகாசத்தில் குறைவடையாது, சந்தனக்குறடுதான் - சந்தனக்கட்டையானது, மெலிந்து - கனங்குறைந்து, தேய்ந்தாலும் - தேய்ந்துவிட்டபோதி லும், தன்மணம் குன்றிடாது - தனது வாசனையில் குறைவடை யாது, பொங்கம்மிகு - மிக்க பொலிவினையுடைய (உயர்ந்த), சங்கு- சங்கானது, செம்தழலில் வெந்தாலும் - சிவந்த நெருப்பில் வெந்த போதிலும், பொலி-விளங்கும்படியான, வெண்மை குறைவுஉறாது- வெண்ணிறத்தில் குறைவடையாது, நல்பால் - நல்ல பாலானது, போத - மிகுதியும், காய்ந்து குறுகினாலும் - காய்ந்து சுண்டினாலும், பொருந்து சுவை - அதினுடைய பொருந்திய சுவையானது, போய்விடாது - போகாது, துங்கம் - உயர்ந்த, மணி - இரத்தின மானது, சாணையில் - சாணை பிடிக்கும் கல்லில், தேய்ந்துவிட்டா லும் - தேய்ந்தபோதிலும், பின் - பிறகு, துலங்கு - பிரகாசிக்கும், குணம் - (அதன்) குணமானது, ஒழியாது - நீங்காது, தொன்மை தரு - தொன்றுதொட்டுவரும் மேன்மையுள்ள, பெரியோர் - மிக் கோர்கள், மடிந்தாலும் - இறந்தபோதிலும், அவர்களது - அவர்க ளுடைய, தூய - பரிசுத்தமான, நிறை - மாட்சிமையானது, தவறு ஆகுமோ - பழுதடையுமோ (அடையாது).

நரகில் வீழ்வோர்=நரகத்தில் வீழத்தக்க கவர்கள் இவர்கள் எனல்

15. (ப - ரை.) மயிலேறி......குமரேசனே—, மன்னரை - அரசரை, சமரில்விட்டு - போர்க்களத்தில் விட்டுவிட்டு, ஓடினவர் - ஓடிப்போனவர்களும், குருமொழி - குருவின் வாக்கை, மறந்தவர் - அனாதரித்தவர்களும், கொலைபாதகர் - கொலைப்பழி செய்தவர்க ளும், மாதா பிதாவை - தாய் தந்தையரை, நிந்தித்தவர்கள் - பழித்த வர்களும், பரதாரம் - பிறர் மனைவியரை, மருவி - கூடி, திரிந்த பேர்கள்-அலைந்தவர்களும், அன்னம் கொடுத்த பேருக்கு - போஜன மளித்தவர்க்கு (அன்னமிட்டவர்க்கு), அழிவை எண்ணினோர் -

கெடுதி நினைத்தவர்களும் (கன்னமிட்டவரும்), அரசு அடக்கிய - அரசனைக் கீழ்ப்படுத்திய, அமைச்சர் - மந்திரிமார்களும், ஆலயம் - தேவாலயங்களை, இகழ்ந்தவர்கள் - இகழ்ந்து பேசியவர்களும், விசுவாச காதகர் - நம்பிக்கைத் துரோகிகளும், அருந்தவர்தமை பழித்தோர் - அரிய தபோதனரை நிந்தனை செய்தவர்களும், முன் - முன்பு, உதவியாய் செய்த - (ஒருவர்) ஒத்தாசையாகப் பண்ணிய, நன்றியை - நன்மையை, மறந்தவர் - மறந்தவர்களும், வழக்கு - விவகாரத்தில், முகஸ்துதி உரைப்போர் - முகஸ்துதியாக (அதாவது பாரபட்சமாகப் பேசுவோர்களும், முற்று - முதிர்ந்த, சிவபத்தரை - சிவனடியவரை, நடுங்க - நடுங்கும்படி, சினத்தவர்கள் - கோபித்தவர்களும், முழுதும் - முழுமையும், பொய்உரை சொல்லுவோர் - அசத்தியப் பேச்சைப் பேசுபவரும், மன்-நிலையாக, ஒருவர் வைத்த பொருள் - ஒருவர் அடைக்கலம் வைத்துப்போன பொருளை, அபகரித்தோர் - மோசஞ்செய்த பேரும், (ஆகிய) இவர்கள்—, மா - கொடிய, நரகில் - நரகத்தில், வீழ்வார் அன்றே - விழுவார்கள் அல்லவா?

யாருக்கும் அநுபோகம் விடாமை=அவரவர் அநுபோகத்தை அவரவர் அநுபவித்தே தீரவேண்டும்

16. (ப-ரை.) வாசவனும்-இந்திரனும், உமபர் அனைவரும்-மற்ற தேவர்களெல்லோரும், வந்து - ஒன்றுகூடி வந்து, விசய சய என்று-ஜெய கோஷ்டம் செய்து, தொழுது ஏத்து - வணங்கித் துதிக்கும், சரண்-திருவடிகளையுடையவனே, மயிலேறி.........குமரேசனே—, தேசுபெறு-ஒளிபெற்ற, மேரு-மேருமலையை, ப்ரதக்ஷணம் செய்தும்-வலம் வந்தும், மதி-சந்திரனானவன், தேக வடு-தன் சரீரத்திலுள்ள களங்கம், நீங்க இல்லை-நீங்கப் பெற்றானில்லை, திருமால்-விஷ்ணுமூர்த்தி, உறங்கிடும் - சயனங்கொள்ளும், சேடனுக்கு-ஆதிசேடனுக்கு, உவணன்-கருடனது, செறும்பகை-கோபித்தழிக்கும் விரோதபாவம், ஒழிந்தது இல்லை-நீங்கவில்லை, ஈசன் - சிவபிரானது, கழுத்தில் உறு-கண்டத்தில் பொருந்திய, பாம்பினுக்கு-சர்ப்பத்திற்கு, இரை-ஆகாரம், வேறு இலாமலே-மற்றெதுவுமின்றியே வாயு ஆகும்-காற்றே (பக்ஷணம்) ஆகும், இனிய கண் ஆகி வரு-

(பூமிக்கு) சிறந்த கண் போன்றவரும், பரிதி ஆனவனுக்கு-சூரியனுக்கு, இராகு - இராகு வென்பவன், கன விரோதி-பெரிய பகைவன், ஆசு இலா-தோஷமற்ற, பெரியோர் இடத்தினில்-அறிவுடையோரிடம், அடுக்கினும்-போய்ச் சேர்ந்தாலும், அமைத்தபடி-முன்னரே விதித்தபடி, அன்றி-அல்லாமல், வருமோ-வேறேதேனும் பயன் கிடைக்குமோ (கிடைக்காது), அவர் அவர்கள் அநுபோகம் - அவரவரது அநுபோகத்தையே, அனுபவித்திடல் வேண்டும் அல்லால் - அவரவர் அனுபவிக்கவேண்டியதன்றி, எவரை வெறுப்பது - யாரை வெறுக்கக்கூடும்? ஒருவரையும் வெறுக்கலாகாது என்றபடி.

பாம்பு காற்றைப் பக்ஷணமாகக் கொண்டிருப்பது பற்றி அதற்கு 'வாதாசனம்' என்னுமொரு பெயர் உண்டாயிருக்கின்றது-அநுபவம்-பூர்வவினையடியாக ஏற்பட்டுள்ள பயன். "செய்தவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால், எய்த வருமோ இருநிதியம்-வையத்து, அறம்பாவம் என்ன அறிந்தன்றிடார்க்கின்று வெறும் பானை பொங்குமோ மேல" என்பது இங்குணர்தற்பாலதாம்.

இதுவின்றி இதுசிறவாதெனல்=இன்னது இல்லாமல் இன்னது பிரகாசியாதெனல்

17. (ப-ரை.) மயிலேறி........ குமரேசனே—, குரு இலா வித்தை-குருவில்லாத படிப்பும், கூர் அறிவு இலாவாணிபம்-நுட்பமான புத்தியில்லாத வர்த்தகத் தொழிலும், குணம் இலா மனைவி — ஆசை நற்குணங்களில்லாத மனையவளின் அன்பும், குடி நலம் இலா நாடு-குடிவளம் இல்லாத தேசமும், நீதி இல்லா அரசு-நியாய முறைமையில்லாத அரசாட்சியும், குஞ்சரம் இலாத வெம்போர்-யானைப் படையில்லாத கொடுஞ்சமரும், திரு இலா மெய்த்திறமை-சம்பத்தில்லாத சரீர பலமும், பொறை இலா மாதவம்-பொறுமையில்லாத பெரிய தவமும், தியானம் இல்லாத நிஷ்டை-சிந்தனையில்லாத சமாதியும், தீபம் இலலாத மனை-விளக்கிலலாத வீடும், சோதரம் இலாத உடல் - உடன்பிறப்பில்லாத சரீரமும், சேகரம்-தலையணி (தலைப் பாகை), இலாத - இல்லாத, சென்னி - சிரசும், உரு இலா மெய்வளமை-அழகில்லாத தேகச் சிறப்பும், பசி இலா உண்டி-பசியில்லா

துன்னும் உணவும், புகல்-கூறும்படியான, உண்மை இல்லாத-மெய்ம்மையில்லாத, வசனம்-வார்த்தையும், யோசனை இலா மந்திரி - யோசித்தறியும் புத்தி இல்லாத அமைச்சனும், தைரியம் இலா வீரம்-ஆண்மையில்லாத வீரத்துவமும், உதவி இல்லாத நட்பு-ஒத்தாசையில்லாத சிநேகமும், மரு இலா வண்ணம்மலர்-வாசனையில்லாத அழகிய புஷ்பமும், பெரியோர் இலாத சபை-அறிவில் முதிர்ந்தவரில்லாத சபையும், வையத்து-பூமியில், இருந்து என்பயன்-இருந்து யாது பயனைத்தரக்கூடியவை (ஒன்றுமில்லை என்றபடி).

நிஷ்டை - மனம் ஒருமுகப்பட்டு நிற்பது, இதுவே சமாதி "…. …….மூளையிலா வரசன் வீரம், காப்பிலாதிருந்தபூமி கரையிலா திருந்த வேரி, கோப்பிலான் கொண்டகோலம் குருவிலான் கொண்ட ஞானம், ஆப்பிலாச் சகடுபோல அழியுமென்றுரைக்கலாமே" என்பது இவ்விடம் கவனிக்கத்தக்கது.

பகைக்கப்படாதவர் இவரோனல்=இன்னவர் பகைத்தற்குக் கூடாதவரோனல்

18. (ப • ரை.) வர நதியின் - கங்கா நதியின், மதலை என - குமாரன் என்று கூறும்படி, இனிய - இனிதான, சரவணம் மிசை - சரவணப் பொய்கையில், வரு-தோன்றிய, தருணம்-இளம் பருவம் (நீங்காத), சிறு குழவியே - சிறிய குழந்தையே, மயிலேறி…குமரேசனே-, அரசர் பகையும் - மன்னவர்களின் விரோதமும், தவம் புரி தபோதனர் - தவத்தை மேற்கொண்ட ரிஷிகளின், பகையும் - விரோதமும், அரிய கருணீகர் பகையும் - அருமையான கணக்குப் பிள்ளைகளின் விரோதமும், அடுத்து கெடுப்போர் கொடும் பகையும்-(சிநேகம் பாராட்டி) நெருங்கிக் கெடுப்பவரது கொடிய விரோதமும், உள்பகையும்-(தனக்கு அந்தரங்கமாயிருந்துகொண்டே) பகைவர்க்கு இடந்தரும் பங்காளிகள் முதலிய உள்ளாய் நிற்கும் பகைவரது விரோதமும், அருள் இலா கொலைஞர் பகையும் - இரக்கமில்லாத கொலையாளரின் விரோதமும், வீரகு மிகும் - வல்லமை மிகுந்த, ஊரில் உள்ளோருடன் பகையும்-ஊரிலிருப்பவரோடு விரோதமும், மிகு விகடப்பிரசங்கி பகையும் - மிகவும் வேடிக்கையாகப் பேசவல்ல விகடன் விரோதமும், வெகுசன பகையும்-பல ஜனங்களின் விரோ

தமும், மந்திரவாதியின் பகையும் - மாந்திரீகனது விரோதமும், விழை - விரும்பும், மருத்துவர்சள் பகையும் - வைத்தியரின் விரோதமும், உரம் மருவு-அறிவைக்கொண்ட, கவிவாணர் பகையும்-வித்துவான்களின் விரோதமும், ஆசான் பகையும் - குருவின் விரோதமும், உறவின் முறையார்கள் பகையும்-சுற்றத்தாரின் விரோதமும், உற்ற - பொருந்திய, திரவியம் உள்ளார் பகையும்-ஐசுவரியம் உடையவரின் விரோதமும், மந்திரி பகையும்-மந்திரிகளின் விரோதமும்; ஒரு சிறிதும் ஆகாது - லவலேசமும் கூடாது, காண் - அசை.

கங்கையிற் பிறந்த பீஷ்மாச்சாரியர் போன்று சுப்பிரமணியரும் அவதரித்துக் காங்கேய ரென்னும் பெயரைப் பூண்டமையின், அவரை ‘வர நதியின் மதலை’ என்றார் - முருகக்கடவுள் சரவணப் பொய்கையில் வந்த வரலாறு முன்னம் கூறப்பட்டது. ஆங்கதைக் கண்டுணர்க. “அருமையுடைய அரண்சேர்ந்தும் உய்யார், பெருமையுடையார் செறின்” என்பதனால் மன்னர் பகையும், “குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்தலரிது” என்றதினால் முனிவர் பகையும், “ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்” என்பதால் ஊரார் பகையும், இவ்வ போன்றே ஏனையவர் பகையும் கூடாவென்பது மேலோர் துணிபு. அக்கருத்தையே இங்கு விரித்துக் கூறப்பட்டது.

அவ்வவ்வினத்தில் உயர்ந்தவை — இன்ன இன்ன இனத்தில் இன்ன இன்னவை சிறந்தவை எனல்

19. (ப - ரை.) மயிலேறி......குமரேசனே-, தாருவில் - விருக்ஷங்களுக்குள், சந்தானம் - சந்தானமென்னும் கற்பக விருக்ஷமும், நதியினில்-நதிகளில், கங்கை-கங்கா நதியும், விரதத்தினில் - விரதங்களில், சோமவாரம்-திங்கட்கிழமை விரதமும், தகைபெறு நிலத்தினில்-பெருமைபெற்ற பூமியில், காச்மீரகண்டம்-காச்மீர தேசமும், தலத்தில்-ஸ்தலங்களில, சிதம்பரதலம்-சிதம்பர க்ஷேத்திரமும், சீர் உலவு-சிறப்புவாய்ந்த, ருஷிகளில்-மகரிஷிகளில், வசிட்டர்-வசிட்டரும், பசுவில்-பசுக்களில், காமதேனு-காமதேனுவும், முனிவரில்-, நாரதன்-நாரதரும், செல்வம் நவமணிகளில்-சிறந்த ஒன்பதுவித இரத்தினங்களில், திகழ்-விளங்கும்படியான, பதுமராகமணி-பதும

ராக ரத்தினமும், தேம் மலரில்-தேனுள்ள புஷ்பங்களில், அம்போருகம்-தாமரைப்பூவும், பேர் உலவு கற்பினில்-புகழ் நிறைந்த பதிவிரதையரில், அருந்ததி - அருந்ததியும், கதிதநிடுபெலத்தில்-மேலான வல்லமையில், மாருதம்-காற்றும், யானையில்-, பேசில் - சொல்லுமிடத்து,-ஐராவதமும்—, தமிழினில்-தமிழில், அகத்தியம்-அகத்திய நூலும், மந்திரத்தில்-, பிரணவம்-பிரணவமும், வாரிதியில்-சமுத்திரத்தில், திருப்பால் கடல்-திருப்பாற் கடலும், குவட்டினில்-மலைகளில், மகாமேரு ஆகும் அன்றோ - மகாமேருவும் மேலானவையல்லவா?

தரு என்பது தாருவென முதல் நீண்டது. சந்தானம்-பஞ்ச தருக்களில் ஒன்று; அவை-அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம் மந்தாரம், என்பன. இவை தேவலோகத்திலுளளவை சோமவாரம்-ஆகு பெயராய் விரதத்தை யுணர்த்திநின்றது. காச்மீரம்-இது பாதகண்டத்தின் வடபாரிசத்தில் உளளது. நவமணிகள்-கோமேதகம், நீலம், பவளம், புஷபராகம், மரகதம், மாணிககம, முத்து, வைடூரியம், வைரம். கற்பு-ஆகுபெயா; அதனையுடைய மகளிரைக்குறித்து நின்றது. காமதேனு-வசிஷ்டருடைய யாகப் பசு. அருந்ததி-வசிஷ்டர் மனைவி; மகா பதிவிரதை; உலகத்தார் விவாகம் செய்துகொள்ளும்போது கற்பிற்கு அறிகுறியாகத் தங்கள் மனைவியர்க்கு இவளைக் காட்டுதல்மரபு. துருவமண்டலத்தின் சமீபத்திலுள்ள சப்தரிஷி மண்டலத்தில் எழுநக்ஷத்திரங்களுக் கிடையிலிருககும் வசிட்டரின் அருகே யிருப்பவள். பலம்-பெல மெனத திரிந்தது.

அவரவர்க்குப் பெலமாவன=அவரவர்களுக்கு உறுதி ஆதுமவை இவையெனல்

20. (ப - ரை.) வால வடிவு ஆனவேலா-இளங்குழந்தையின் உருவத்தைக் கொண்ட வேலவனே, மயிலேறி.....குமரேசனே-, அந்தணர்க்கு - பிராமணர்க்கு, உயர்வேதமே - சிறந்த வேதபாராயணமே, பெலம் - உறுதி, கொற்றவர்க்கு-அரசர்களுக்கு, அரிய-அருமையான, சௌரியமே — வீரத்தன்மையே, பெலம்-, ஆன-நல்ல, வணிகர்க்கு-வைசியர்க்கு, நிதியே-செல்வமே, பெலம-, சூத்திரர்க்கு-பயிரிடுங்குடிகளுக்கு, ஆயின்-ஆராய்ந்துபார்க்குமிடத்து, ஏர்உழவே-

எருழுதலே, பெலம்-, மந்திரிக்கு அமைச்சர்களுக்கு, சதுர் உபாயமே - சாமதானதண்டபேதமென்னும் நால்வகை உபாயங்களே, பெலம்-,நீதிமானுக்கு-நியாயநெறியை உடையவனுக்கு, நடுவே-நடுவு நிலைமையே, பெலம்-, மாதவர்க்கு-சிறந்த தபோதனர்களுக்கு, தவசு-தவம் செய்தலே, பெலம்-, மடவியர்க்கு-பெண்களுக்கு, நிறை மானம் - பெருமை பொருந்திய மானத்தைக் காத்துக்கொள்ளும், மிகு - மேலான, கற்பே - பதிவிரதாதருமமே, பெலம-, தந்திரம் மிகுத்த-உபாயத்தில் மிகுந்த, கனம்-வல்லமையுடைய, சேவகர் தமக்கு எல்லாம்-பணிவிடைக்காரர்களனைவர்க்கும், சாமிகாரியமே-எஜமானது காரியததைக கவனிததிருத்தலே, பெலம்-, சான்றவர்கது-பெரியோர்களுககு, பொறுமையே-பொறுதியே, பெலம்-, புலவோர்தமக்கு-விதவான்களுககு, நிறை கலவி-பூரணமான கல்வி நூல்களைக்கற்றலே, பெலம் ஆம்-உறுதியாகும், வநதனைசெய்யும்-வணக்கத்தைச் செய்கின்ற, பூசை செய்பவர்க்கு-ஆராதனை புரிபவர்களுக்கு, அன்பு-அன்பே, பெலம்—.

உபகாரமில்லாதவை=பயன்படாதவைகள் இவையெனல்

21. (ப - ரை.) மயிலேறி .....குமரேசனே-, கடலநீர்-சமுத்திர ஜலமானது, மிகுந்து என்ன-அதிகமானல்தான் என்னபிரயோஜனம், ஒதிதான் - ஒதியமரந்தான், பெருதது என்ன-வடிவத்தில் பெரிதாக இருந்து தான் யாது பயன், காட்டு இலவு-முள்முருக்கின், மலரில் - புஷ்பத்தினுல், என்ன - யாதுபயன், கருவேல்-கருவேலமரமானது பழுதது என்ன-பழுத்திருநதால தான் என்ன, நாய் - நாயினது, பால சுரநது என்ன - பாலசுரநததான் என்ன, கானில்-காட்டில், மழைபெய்தும் என்ன-மழை பெய்தால்தான் என்ன, அடர்-நெருங்கிய, கழுதைலத்தி-கழுதையின மலமானது, நிலமெலலாம - பூமிமுழுதும், குவிநது என்ன - குவிநதாலதான் என்ன, அரியகுணம் இல்லாத பெண்-அருமையான குணங்கள் வாய்த்திராத பெண்மகள், அழகாய் இருநது என்ன-, ஆஸ்தான கோழை-சபையினிடம் பேசமாட்டாதவன், பல அரிய நூல் ஒதி என்ன-அநேகமான அருமைவாயநத நூலகளைக் கற்றிருநதால்தான் என்ன, திடம் இனிய-பராககிரமத்திற்சிறநத பூதம் பூதமானது

வெகு பொன்காத்து இருந்து என்ன-மிக்க திரவியத்தைக் காத்திருந்தால்தான் என்ன, திறல்மிகும்-வல்லமைமிகுந்த, காடிமயிர் தான்-காடியின் மயிரானது, செறிவுஆகி. அடர்ந்து, நீண்டு என்ன-நீளமாயிருந்தால்தான் என்ன, வஸ்திரபூஷணம் எல்லாம்-ஆடையாபரணங்கள் யாவும், சித்திரத்து - சித்திரப்பதுமையினிடம், உற்றும் என்ன - பொருந்தியிருந்தால்தான் என்ன, (இவையாவும்) மடம் மிகுந்து-அறிவின்மை மிகுதியாய், எவருக்கும் உபகாரமில்லாத-ஒருவருக்கும் பயன்படாத, வம்பர் வாழ்வுக்கு நிகர் ஆம் - வீணர்களுடைய வாழ்வுக்கு ஒப்பாகும்.

சேத்தும் சாகாதவர்=இறந்தும் இறவாதவர்களென்று கருதப்படுமவர்கள் இவர் எனல்

22. (ப - ரை) மயிலேறி...குமரேசனே-, அனைவர்க்கும்—எல்லோருக்கும, உபகாரம் ஆம்-பயன் படுமபடியாகிய, வாவி - தடாகங்களையும், கூவம்-கிணறுகளையும், உண்டாக்கினோர்-உண்டு பண்ணினவரும், நீதி மன்னர்-செங்கோலரசரும், அழியாத-சாஸவதமான, தேவாலயம் - கோயில்களை, கட்டிவைத்து உள்ளோர் - கட்டிவைத்திருப்பவரும், அகரங்கள் - அகரஹாரங்களை, செய்த - ஏற்படுத்திய, பெரியோர்-மிக்கோர்களும், தன்னை ஒப்பு இலா - தனக்குச் சமானமாகாத (அதாவது அறிவில் தனக்குமேலான), புதல்வனை-புத்திரனை, பெற்றபேர் - பெற்றவர்களுமு, பொருது - சண்டையிட்டு, சமர் - யுத்தத்தில், வென்ற-ஜெயித்த, சுத்தவீரர்-முதுகுகொடாத வீரரும், தரணிதனில்-பூமியில், நிலைநிறக-நிலைபெறும்படி, எநாளும் எத்தினமும், மாறாத - கெடாத, தருமங்கள் செய்தபேர்கள் - தருமங்களைச் செய்தபோகளுமு, கனம்விஞ்சிந்த-பெருமை பொருந்திய படிப்பை, கொண்டவர்கள-கொணடவரும், ஓயாத-தளராத, கொடையாளர்-உதாரகுணம் உடையோரும், காவியம்-இலக்கிய நூல்களை, செய்த-இயற்றிய, கவிஞர்-கவிவாணரும், கற்பினில்-பதிவிரதா தர்மத்தில், மிகுந்த - சிறநத, ஒரு பதினி மடநதையை - ஒரு பத்மினிமாதை, கடிமணம்-கலியாணம், செய்தோர்கள் - செய்துகொண்டவர்களான, இ மனிதர்கள்-இந்த மனிதாகளும், (ஆகிய) இவர்-இவர்கள், சரீரங்கள் போகினும்-உடலை இழந்தாலும், சாகாத - இறவாத, மனிதர்-மக்கள், ஆகும் அன்றே - ஆவார்கள் அல்லவா ?

சிறிதும் பயன்படாதவர்=கொஞ்சமும் உபயோகப் படாதவர் இவர் எனல்

23. (ப-ரை) மயிலேறி...குமரேசனே-, பதர் ஆகிலும்-உமி யாகிலும், கனம்-பெருமை பொருந்திய, விபூதி விளைவிக்கும்-திரு நீற்றை உண்டுபண்ண உதவும், பழமை பெறுசுவர் ஆகிலும்-பழமை யான சுவரும், பலருக்கு-அநேகருக்கு, மறைவு ஆகும்-மறைவைத் தரும், (அன்றியும்) மாடு உரிஞ்சிடும் - மாடுகள் தமது உடலைத் தேய்த்துக்கொள்ளவும் உதவும், மலம் - மலமானது, பன்றிகட்கு - பன்றிகளுக்கு, உபயோகம் ஆம்-பிரயோஜனம் ஆகும்,கதம்-கோபம், மிகு-மிகுந்த, கடா என்னில் - கடாமாடு ஆனாலும், உழுது - உழவுத் தொழிலைச் செய்து, புவி - பூமியை, காக்கும் - இரக்ஷிக்கும், வன் கழுதையும்-வலிய கழுதையும், பொதி சுமக்கும் - பாரமாகிய சுமை களைத் தாங்கும, கல் எனில் - கல் ஆகிலோ, தேவர்களும் - தெய்வ மூர்த்தங்களும், ஆலயமும் - கோயில்களும், ஆம் - செய்ய உதவும், பெரு கான் புற்றும் - பெரிய காட்டிலுள்ள புற்றுகளும், அரவம் மனை ஆம்-பாம்புகளுக்கு வீடு ஆகும், இதம் இலா - நலம் இல்லாத, சவம் ஆகிலும் - பிணமானாலும், சிலர்க்கு - சில ஜீவர்களுககு, உதவி செய்யும்-பயன்படும், இழிவு உறுகுரங்கு ஆயினும்-இழிந்த தன்மை யைக்கொண்ட குரங்கானாலும், இரக்க - (ஆடவைத்து) யாசிக்க, பிடித்தவர்க்கு - அதைக் கைப்பற்றியவர்க்கு, உதவிசெய்யும்-, வாரு கோல்-விளக்குமாறும் (துடைப்பமும்), எற்ற - தகுந்த, மாளிகை விளக்கும் - வீடுகளைச் சுத்திசெய்யும், மதம் அது-அகங்காரமானது, மிகும் - அதிகரித்த, பாமலோபரால் - கொடிய லோபிகளால், மற் றொருவருக்கும் - பிறரெவருக்கும், உபகாரம் உண்டோ - பயன் ஆவது உண்டோ (இல்லையென்றபடி). லோபம் - ஈயாத்தன்மை.

திருவாழ் இடங்கள்=இலட்சுமி நிலைத்து வசிக்கும் இடங்கள் இவையெனல்

24. (ப-ரை) மயிலேறி.........குமரேசனே—, கடம் வாரணத்திலும்-மதத்தையுடைய யானையினிடத்தும், கங்காசலத்திலும்- கங்கையிலும், கமல ஆசனம் தன்னிலும்-தாமரை மலராகிய பீடத் திலும், காகுத்தன் மார்பிலும்-விஷ்ணுவின் மார்பிலும், கொற்றவர்

இடத்திலும்-அரசர்களிடத்தும், காலியின் கூட்டததிலும்-பசுமந் தையிலும், நடம் ஆடு பரியிலும்-நடனஞ் செய்கின்ற குதிரையினி டததும், பொய்வார்த்தை சொல்லாத-பொய் பேசாத, நல்லோர் இடம் தன்னிலும் - உத்தமரிடத்திலும், நல்ல சுபலக்ஷணம்-சிறந்த மங்களகரமும் அழகும், மிகுந்த-மிகுந்துள்ள, மனை தன்னிலும்-வீட்டிலும், ரணம்-போர் செய்கின்ற, சுத்தவீரர் பாலும்-மேலான வீரர்களிடத்தும், அடர்-நெருங்கிய, கேதனததிலும்-கொடிகளிலும், சுயமவரம் தன்னிலும்-சுயம்வரக் கலியாணததிலும், அருந்துளசி வில்வத்திலும் - அருமையாகிய துளபமலரிலும் வில்வமலரிலும், அலர்தரு - மலர்கின்ற, கடபபமலர்தன்னிலும் - கடப்பமலரிலும், இரதத்திலும் - தேர்களிலும், அதிக குணம்மானம் ரூபம்-மிக்க நற் குணங்களும் மானமும் வடிவுமுள்ள, மடவாரிடத்திலும்-பெண்க ளிடததும், திருமாது - இலட்சுமியானவள், மாறுது-நீங்காமல், குடி கொண்டிருப்பள்-வாசஞ்செய்திருப்பாள், அன்றோ-அல்லவா?

இட்சுவாகுவின் பேரனுகிய ககுஸ்தன் என்னும் இராஜனு டைய மரபில் திருமால் ஸ்ரீராமனுக அவதரித்தமையால் அவருககுக் காகுத்தன் என்னும் பேர் வழஙகலாயிற்று. துளசி திருமாலுககும் வில்வம் சிவபெருமானுககும கடப்பமலர் சுப்பிரமணியருக்கும் உரியவை. சுயம்வரம்——ஒரு கன்னிகையானவள் பலமேதாவி யர் கூடிய சபையின்கண் தனககுப் பிரியமான ஒருவரைத்தானே கணவனுகத் தெரிந்தெடுத்துக்கொள்ளுதல்.

குறிப்பறிதல்=குறிப்பிஞல் ஒன்றைத் தெரிந்துகொள்ளுதல்

25. (ப-ரை). வனச விகசித வதன-தாமரை மலர்போலும் மலர்ந்துள்ள திருமுகத்தையுடையவனே, பரிபூரண ஆனந்த-நிறைந்த ஆனந்தமயமாகிய சொரூபனே, வாலவடிவான வேலா-சிறு குழந்தை வடிவுகொண்ட வேலனே, மயிலேறி.....குமரேசனே—, மனதில்-உள்ளத்திலுள்ள, கடும்பகை-கொடிய பகை மைத்தன்மையை, முகத்தினல் - முகததைப் பார்த்து, அறியலாம்-தெரிந்துகொள்ளலாம், பூடுகள்-பூண்டுகள் முளைக்கின்ற, மாநிலம் எல்லாம்-பெரிய நிலத்தின் தன்மை முற்றும், மழையினல்-மழை

யைக் கொண்டு, அறியலாம்—, நல்லார் பொல்லார்தமை-நல்லவர்களையும் கெட்டவர்களையும், மக்களால் - அவரவருடைய பிள்ளைகளால், அறியலாகும்—, கனம் மருவு-பெருமை பொருந்திய, சூரரை-போர்வீரரை, சமரினால்-யுத்தகளத்தில், அறியலாம்—, கற்ற ஒரு வித்துவானை-படித்தறிந்த ஒரு புலவனை, கல்விபிரசங்கத்தினால்-கல்விநூல் பிரசங்கத்தினாலே, அறியலாம்—, குணங்களை-ஒருவருடைய குணாதிசயங்களை, நடையினால்-ஒழுக்கத்தினால், அறியலாம்-, பளிங்கினால்-கண்ணாடியால, தனது அகம் அடுத்தது-அதனிடத்துப் பொருந்திய பொருளை, அறியலாம்—, சாதி-வருண தருமத்தை, சொல்லால் - பேச்சினால், அறியலாம்—, தருநீதி=சாஸ்திரங்கள் வெளியிடும்படியாகிய நீதிமார்க்கங்களை, கேள்வியால்-(பெரியோர்களிடம்) கேட்டலினாலே, அறியாலாம்—, பிணிகளை-வியாதிகளை, நாதுக்களால்-நாடிகளால், அறியலாம்—,

" அகத்தினழகு முகத்தில் தெரியும் " என்பதினால் ' மனதிற் கடும்பகை முகத்தினாலறியலாம் ' என்றும் " நிலத்தியல்பு வானமுரைத்துவிடும் " என்பதால் ' மாநிலம்... ..மழையினாலறியலாம்,' என்றும், " மகனுரைக்கும் தந்தை நலத்தை, ", " பழியின்மை மக்களாற் காண்க " என்பனவற்றால் ' நல்லார்.....மக்களால் அறியலாகும் ' என்றும், அடுத்தது காட்டும் பளிங்கு " என்பதால் ' தனதக ....பளிங்கினாலறியலாம் ' என்றும் கூறினார்.

குணமாறமை=குணத்தைமாற்ற முடியாமை

26. (ப - ரை) மயிலேறி.....குமரேசனே-, குணம்இலா - இலட்சணம் இல்லாத, துஷ்டமிருகங்களையும் - கொடிய மிருகங்களையும், நயம் குணம்கொண்டு - சாந்த தன்மையைக்கொண்டு, உட்படுத்திவிடலாம்-வசப்படுத்தலாம், கொடிய - கடுமையான பல விட நோய்கள் யாவும் - அநேக விஷப்பிணிகளையெல்லாம், ஔஷதம அது கொடுத்து-மருந்துகளைப் பிரயோகித்து, திருப்பிவிடலாம் - குணமாக்கலாம், உணர்வு இலா - ஞானம் இல்லாத, பிரமராட்சசி முதல் பேய்களை - பிரமராட்சசி முதலான பிசாசுகளை, உகந்து - விரும்பி, கூத்தாட்டிவிடலாம் - கூத்தாடச்செய்யலாம், உபாயத்தினால் - தந்திரத்தினால், பெரும்பறவைக்கு-பெரியபட்சிக்கு, நல்புத்தி

உண்டாக்கலாம் - நல்ல அறிவைப் பெறும்படி செய்யலாம், உயிர் பெற - மீண்டும் உயிரை அடைய, பிணமதை - பிணத்தை, எழுப்ப லாம்-எழுப்பிவிடலாம், அக்கினி-நெருப்பை, சுடாமல்-சுடாமலிருக் கும்படி, பெரும்புனல் என - பெரிய ஜலம்போல் குளிர்ந்திருக்கு மாறு, செய்யலாம் - செய்துவிடலாம், பிணியையும்-வியாதியையும், அகற்றலாம் - நீக்கலாம், காலதூதுவரையும் - எம தூதர்களையும், பின்புவருக என்று சொல்லலாம் - பின்னர் வரலாமென்று சொல்லி யனுப்பிவிடலாம், மணலையும்-, கயிறு ஆ - கயிறாக, திரிக்கலாம்-, கயவர் குணம்மட்டும் - கீழ்மக்களுடைய குணத்தை மாத்திரம், திருப்ப வசமோ - மாற்ற முடியுமோ (முடியாது என்றபடி).

விஷநோய்-வைசூரி, பேதி, மஹாமாரி முதலியகொள்ளை நோய்கள்.

இத்தீக்குணத்தோர் இவ்விலங்கு போல்வர் எனல்=இன்ன தீயகுணங்களை யுடையார் இன்ன மிருகத்தை ஒப்பார் எனல்

• 27. (ப - ரை.) மாம்பழம் தனைவேண்டி - மாம்பழத்தை விரும்பி, அநநாளில்-முற்காலத்தில், ஈசனை-சிவபெருமானை, வலமாக வந்த-பிரதக்ஷணம் செய்த, முருகா-முருகனே, மயிலேறி......குமரேசனே-, தாம் பிடித்தது பிடிப்பு என்று-தாம் பிடித்ததே பிடி யென்னும் பிடிவாதத்தைக் கொண்டு, மேலவர் - பெரியோர்களது, புத்தி-புத்திமதியை, தள்ளி-ஒழித்து, செய்வோர்-தாங்கள் நினைத்த தைச செய்பவர்கள், குரங்கு-குரங்கை ஒப்பர், சபையில்-கல்விச் சபையில், குறிப்பு அறியமாட்டாமல் நின்றவர் தாம்-கருத்துரைக்கக் கூடாமல் நிற்பவரே, பயன் இலாத-உபயோகமற்ற, மரம்ஆம்-மரத் துக்கு ஒப்பாவர், வீம்பினால்-குறும்பினால், எளியவரை-ஏழையரை, எதிர்பண்ணி நிற்கும் ஒரு வெறியர் - பகையாக்கிக்கொண்டுள்ள உன்மத்தர்கள், குரைஞமலி ஆவார்-குரைக்கும்படியான நாய்க்குச் சமானமாவர், மிக-மிகுதியும், நாடிவருவோர் - தேடிவந்தவர்களு டைய, முகம் பார்த்திடா-முகத்தைப்பாராத, லோபர்-லோபிகளே- மேன்மையில்லாத-சிறப்பற்ற, கழுதை - கழுதைகளுக்கு ஒப்பாவர், சோம்பலொடு-சோம்பேறித்தனத்துடன், பெரியோர் சபைக்குள் -

அறிவுள்ளோர் கூடியுள்ள சபையின்கண், படுத்திடும் - படுத்து நித்திரைசெய்யும், தூங்கவே - தூங்குமூஞ்சியே - சண்டிக்கடா-முரட்டுக்கடா, அடுத்தோர்க்கு - அடைக்கலமானவர்க்கு, சூதுடன் - வஞ்சனையுடனே, இடுக்கண் - துன்பத்தை, செய்திடும்-செய்கின்ற, துஷ்டனே-துன்மார்க்கனே, கொட்டுதேளாம்-கொட்டும்படியான தேளுக்குச் சமானம், வெறியர் - ஒப்பற்ற வெறியர், அதாவது தங்களுக்குத் தாங்களே சரியாவதன்றி வேறு எவரும் தங்களுக்குச் சரியாகாத வெறியர்கள். "சபை நடுவே நீட்டோலை வாசியாநின்றான், குறிப்பறியமாட்டாதவன் நல்மரம்" என்பதை 'சபையிற் குறிப்பறிய...மரமாம்' என்பதனோடு ஒப்பிட்டறிக. மாம்பழத்தின் பொருட்டு சிவபிரானை வலம் வந்தகதை—: ஒருகாலத்தில் சிவமூர்த்தியானவர் உன்னதமானதோர் மாங்கனியைக் கரத்தில் வைத்திருந்தனர். அது தெரிந்த விநாயகரும் சுப்பிரமணியரும் அதனைக் கொடுக்குமாறு தந்தையைக் கேட்டனர். அதற்கவர் உங்கள் இருவரில் முன்னதாக எவன் இப்பூதலததை வலம் வருகிறானோ அவனுக்கே இப்பழம் உரியதென்றனர். உடனே முருகவேள் மயிலின் மீதேறிக்கொண்டு வெகுவேகமாக பூமியைச் சுற்றிவரலானார். விநாயகரோ அவசரப்படாமல் சிவபெருமானையே வலம் வந்து பழத்தை வேண்டினர். அப்போது சிவபெருமான் நீ பூமியை வலமாகச் சுற்றி வந்தனையோவென அவர் எல்லாம் நீரேயாதலால் உம்மை வலம் வந்தமையே பூவலம் வந்ததை யொக்குமென அதற்குச் சிவபிரான் மகிழ்ந்து அந்த மாம்பழத்தை அவற்குத் தந்தனர் என்பது. அம்பழத்தின் பொருட்டு சுப்பிரமணியர் பூமியை வலஞ்செய்து வந்தபடியால் அதனை யுணர்த்த ஆசிரியர் இப்பாடலில் 'மாம்பழந்தனை வேண்டி......வந்த முருகா' என்றார்.

அற்பர் வாழ்வால் குணம் வேறுபடுதல்=கீழ்மக்களுக்கு ஐச்வரியம் வந்தால் பழைய குணத்தினின்றும் மாறுபடுவர் எனல்

28. (ப-ரை) மல்புயம்தனில்-வல்லமை பொருந்திய தோள்களில், நீபமாலை அணி-கடப்பமலர்மாலையை அணிந்த, லோலனே-உற்சாகனாகிய, மார்பனே - மார்பை யுடையவனே, வடிவேலா-,

மயிலேறி...குமரேசனே-, அற்பாக்கு — கீழோர்க்கு, வாழ்வு சற்று அதிகம் ஆனால - சம்பத்து சிறிது உயர்ந்தால், விழிக்கு - அவர்களுடைய கண்களுக்கு, யாவர் உருவும்-எவர்களுடைய ரூபமும், தோன்றிடாது-தெரியாது, அண்டி நின்று - அடுத்து இருந்து, நல்ல வார்த்தைகள-, உரைத்தாலும் - சொன்னாலும், அவர் செவிக்கு - அவர்களுடைய காதுக்கு, ஏறிடாது - கேளாது, முன் பக்ஷமானபேர் வந்தாலும் - முன் நேசமாக இருநதவர் நெருங்கிவந்தாலும், வாரும் என - வாருங்கள் என்று, மொழியவும் - சொல்லவும், வாய்வாராது-, வாதப்பிடிப்பு-வாதநோயினால் ஆகிய, காலபிடிபபு மோதியே - வருத்தப்படுத்தியே, வநததுபோல-, முன்காலே-முன்னங்காலே, அகல வைப்பார்-தூரவைபபார்கள் (பின்னுக்குச் செல்வார்கள்), விற்பனம் மிகுத்த-கலவி யறிவு மிகுந்த, பெரியோர்-, செய்தி சொன்னாலும்-நல்ல சங்கதிகளைச் சொன்னபோதிலும், வெடுவெடுத்து-கடுகடுதது, எசிகிற்பார்-பரிகசிதது நிற்பார்கள, விருதா - வீணில், மகத்துவம பேய் அது - பெருமை பாராட்டிக்கொள்ளும் தங்கள் பேய்த்தனமானது, சவுக்கடி விழும்போது - சவுக்கினால் அடிக்கும் அடிகள் மேல் விழும்போது, தீரும் என்பார-நீங்கும் என்று சொல்வாரகள்.

"அற்பர்க்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பர்" என்னும் பழமொழி இங்கு அறியத்தக்கது. 'மார்பனே' என்பதற்குப் பதிலாக வள்ளலே என்றும் பாடம். வள்ளல் - வரையாது கொடுப்போன்.

நல்லினஞ் சேர்பயன் = நல்ல இனத்தைச் சேர்தலினால் வரும் பயன்

29. (ப - ரை.) மந்தரம் நெடும்கிரியில் - மந்தர மென்னும் பெயரையுடைய உயர்ந்த மலையினாலே, முன்-முற்காலத்தில், கடல் கடைந்த - திருப்பாற்கடலைக் கடைந்தருளிய, அரிமருக - திருமாலின் மருமகனே, மெய்ஞ்ஞான முருகா-, மயிலேறி...குமரேசனே-, சந்தன விருக்ஷத்தை - சந்தனமரத்தை, அண்டி நிற்கின்ற - சேர்ந்து நிற்கும், பல தருவும்-பல விருக்ஷங்களும், அவ்வாசனை - அந்த சந்தனத்தின் வாசனையையே, தரும்-கொடுக்கும், தங்கம் மகமேருவை-பொன்மயமான மகாமேரு மலையை, அடுத்திடும்-சேரும், காக்கை

யும்-காகமும், பொன்மயம் சாயலே - பொன்மயமான ஒளியையே, தரும்-கொடுக்கும், பாந்தம் மிகு பாலுடன்-கலக்கும் தன்மை மிகுந்த பாலுடனே, விளாவிய-சேர்த்த, தண்ணீரெல்லாம்-ஜலம் முழுதும், பால்போல் நிறம் கொடுக்கும்-, படி மணிகட்டு உள்ளே-படிகக்கற்களுக்கு மத்தியிலே, நிற்கின்ற-தங்கியிருக்கின்ற, வடமும்-கயிறும், அப்படியே - அந்தப் படிகக்கல்லைப்போலவே, குணம் கொடுக்கும்-குணத்தைக் கொடுக்கும், அந்தம் மிகு-அழகு மிகுந்த, மாகதக்கல்லை-மாகதமென்னும் பச்சை ரத்தினத்தை, தரித்திடில் - அணிந்துகொண்டால், அடுத்ததும் - அதைச் சார்ந்துள்ளதும், பசுமையாகும் - பசைசநிறத்தைக் கொடுக்கும், (அதுபோல) ஆன - நல்ல, பெரியோர்களோடு - பெரியவர்களுடனே, சகவாசமது செய்யில் - சிநேகஞ் செய்தால், (செய்தவர்களுக்கு) அவர்கள் குணம் - அந்த பெரியவர்களின் நல்ல குணங்களே, வரும் என்பர் - வரும் என்று சொல்லுவார்கள் காண - அதை.

"பூவொடு சேர்ந்த நாறும் மணம் பெறும்" என்னும் பழமொழி இங்கு அறிதற் பாற்றும்.

பெரியோர் வாக்யபரிபாலனஞ் செய்தோர்=பெரியோர் கட்டளைகளை நிறைவேற்றினவர் இவர் எனல்

30. (ப-ரை) மந்தைவழி - ஆடுமாடுகளின் கூட்டத்திலும், கோயில-கோயில்களிலும், குளமும் - குளக்கரைகளிலும், குலவு - விளங்குகின்ற, தும்பிமுகன் - யானை முகத்தையுடைய விநாயக மூர்த்தி, மகிழ்தர-சந்தோஷிக்க, உகந்த துணைவா-அவரை விரும்பிய சகோதரனாகிய முருகனே, மயிலேறி ..குமரேசனே-, தந்தை தாய் வாக்யம்-பெற்றோர்களின் வாக்கை, பரிபாலனம் செய்தவன்-நிறை வேற்றினவன், தசரத குமாரராமன் - தசரதருக்குப் புத்திரனான ஸ்ரீ ராமனும், தமையன் அருள்வாக்யம் - மூத்த சகோதரன் சொல்லிய வாக்கை, பரிபாலனம் செய்தோர் - நிறை வேற்றியவர்கள், தருமனுக்கு இளைய நால்வர் - தருமராஜருக்குத் தம்பியரான நால்வரும், குருவாக்யம் - வசிஷ்டராகிய தனது குருவின் வாக்கை, சிந்தையில் உணர்ந்து - மனத்தில் அறிந்து, பரிபாலனம் செய்தவன் அரிச்சந்திரன் -, தேகி என்றோர்க்கு - கொடு என்று யாசித்தோர்க்கு, இலை

என்ன - இல்லை என்று சொல்லாத, வாக்யபாலனம் செய்தவன் - வாக்கைப் பாதுகாத்தவன், தான கன்னன் - தானம் செய்த கர்ன னும், நிந்தைதவிர்-பழிப்பில்லாத, வாக்ய பரிபாலனம் செய்தவன்-வாக்கைப் பாதுகாத்தவன், நீள் பெலம் மிகுந்த அநுமான் - சிறந்த பலத்தால் உயர்ந்த அநுமானும், நிறையுடன் - கற்புடனே, பர்த்தா வின் வாக்யம்-கணவன் வாக்கை, நிலததில் - பூமியில், நாளாயனி-நளாயனி என்பவள், பரிபாலனம் செய்தாள்-நிறைவேற்றினள்.

ஸ்ரீராமன் தந்தைதாய் வாக்யபரிபாலனம் புரிந்த கதை

ஸ்ரீராமபிரானுககுப் பட்டம் சூட்டுதற்கு எல்லாம் சித்தமான பின்பு, கூனியின் கலகத்திற்கு சம்மதித்த கைகேசி தசாதனைப் பார்த்து முன்பு தனக்குக் கொடுத்த இரண்டுவரங்களில், ஒன்றினல் ராமனைப் பதினன்கு வருடம் காட்டுக்கு அனுப்பும்படியும், மற் றென்றினல் தன் மகன் பரதனுக்கு முடிசூட்டும் படியும் அவரைப் பலவந்தப்படுத்தினள். அதற்கு அவர் ஒருவாறு சம்மதிக்க, அவள் ஸ்ரீராமனை வரவழைத்து "நீ பதினன்கு வருஷம் காட்டுக்குப்போ. அதுவரையில் உன் தம்பி பரதன் நாட்டை ஆளுவான்" என அவர் அப்பொழுதே தன் பெறரோ சொல்லை மீறல் கூடாது என் றெண்ணி காட்டுக்குப் போயினர் எனபது.

வீமன் முதல் நால்வரும் தமையன் வாக்ய பரிபாலனம் செய்த கதை

தருமர் துரியோதன னுடன் சூதாடித் தன் நாடு நகரங்கள் எல் லாம் இழந்ததுடன் வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என் னும் தன் தம்பிமார் நால்வரையும் துரௌபதியையும் தன்னையும் இழந்தனர். அப்போது துரியாதனனுதியோர் துரௌபதியை ராஜ சபைக்கு வரவழைத்து அவளை அவமானப் படுத்தினர். அதைக் கண்ட வீமன் முதலிய நால்வரும் துரியோதனனையும் அவனைச் சேர்ந்தோரையும் கொல்ல முயன்றனர். அப்போது தருமர் அவ் வாறு செய்தல் நீதியல்ல என்று அவர்களைத் தடுத்தனர். உடனே அவர்கள் தமது அண்ணன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். இவ்வாறே அவர்கள் அவர்க்கு அடங்கி நடந்துகொண்டதைப் பார த்தில் அநேக விடங்களில் பார்க்கலாம்.

அரிச்சந்திரன் துருவாக்ய பரிபாலனம் செய்த கதை

ஒரு காலத்தில் இந்திரன் வசிஷ்டரைப் பார்த்து, பூலோகத்தில் சத்தியவான் யாரென, அவர் தமது சீடனாகிய அரிச்சநதிர ராஜன் ஒருவனே உளன் என்றறைந்தனர். அப்போது அங்கிருந்த விஸ்வாமித்திரர் அரிச்சந்திரன் பெரிய பொய்யன். அவன் இவருக்குச் சீடனாகையால் இவர் அவனைப் புகழ்ந்து பேசினார் என்று சொல்லி அவரையும் நிந்தித்தனன். அதற்குமேல் இநதிரன் அவன் பொய்யன் என்பதை நீர் ரூபிக்கவேண்டும் என்று விஸ்வாமித்திரரைக் கேட்க அவர் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி அஙகிருந்து பூலோகத்திலுள்ள அயோத்தியில அரசு செய்துகொண்டிருந்த அரிச்சந்திரனிடம் வந்து சேர்ந்து. அவனது நாடு நகரங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு அவனைப் பலவிதத் துன்பத்திற்குள்ளாக்கியும், அவன் தனது உண்மை நெறியினின்று விலகாதிருந்தனன் என்பது. இதனை அரிசசந்திர புராணத்தில் விரிவாகக் கண்டுகொள்க.

கர்ணன் தானத்தைப் பரிபாலனம் செய்த கதை

(1) கர்ணன் அர்ச்சுனனைக் கொல்லும் பொருட்டு நாகாஸ்திரம் ஒன்று வைத்திருந்தான். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் ஏவுதலினால் குந்தி அவனிடம் சென்று தான் அவனைப் பெற்றதாய் என்பதை மெய்ப்பித்தாள். அப்போது கர்ணன் மிகவும் சந்தோஷங்கொண்டு இவ்விடம் வந்தகாரணம் என்னையென, அதற்கவள் நீ அர்ச்சுனனுடன் போரிடும்போது உன்னிடமிருக்கும் நாகாஸ்திரத்தை ஒருமுறைக்கு மேல் பிரயோகிக்க வேண்டாம் என, அவன் அவ்வாறே இணங்கினான்.

(2) கர்ணன் கவசகுண்டலத்தோடு பிறந்தவன். அவற்றை அவன் அணிந்திருக்கும் வரையில் அவனை வெல்ல ஒருவராலும் ஆகாது. அதனால் கண்ணபிரான் இந்திரனைத் தூண்ட அவனோர் வயோதிகப் பிராமணனாய்ச் சென்று அவன் தரித்திருந்த குண்டலங்களைத் தனக்குக் கொடுக்குமாறு வேண்ட அவன் அவ்வாறே அவைகளை அந்தப் பிராமணனுக்குத் தந்தனன்.

(3) கர்ணன் அர்ச்சுனனோடே போராடிக் களைப்படைந்தனன். அச்சமயம் அர்ச்சுனன் செலுத்தும் அம்புகள் அவன்மேல்

படாவண்ணம் தருமதேவதைகள் அவன் தேசைச சூழ்ந்துகொண்டு அவனைப் பாதுகாத்தன. இதை அறிந்த கண்ணன், அவனை களைப்பு நீங்கினதும் ஒரு கிழப்பிராமணவேடந் தரித்து அவன் அதுவரையில் செய்திருந்த தருமத்தின் பயனைத் தனக்குத் தத்தம்செய்யுமாறு வேண்ட அவனவ்வாறே செய்தான். இம் மூன்றையும் கவனிக்குங்கால் அவனது தானத்தின் தன்மை நன்கு விளங்கும்

அநுமான் பிரமசாரிகளில் மேலானவன் ஆதலால 'நிந்தை தவிர் வாகய பரிபாலனம் .. ..அனுமான்' என்றார்

நளாயினி கதை

இவள் மௌதகல்ய முனிவரை விவாகம் செய்துகொண்டாள். அவர் இவளுடைய கற்பைப் பரிசோதிக்கக் கருதிற்கொண்டு குட்டநோயால் வருந்துபவர்போல நடித்து வந்தனர். இவள் சற்றும் வெறுப்பின்றி அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளில் குற்றமிலாது செய்து வந்தனள். ஒருநாள் அவர் இவளைப் பார்த்து, தான் ஒரு வேசியை விரும்பியிருப்பதாகவும் அவளை எப்படியாகிலும் தனக்கு இணங்குவிக்க வேண்டுமென்றும் சொன்னார். அதற்கு இவள் அவ்வேசி சந்தோஷம அடையுமாறு அவளுக்கு வேலைகள் செய்துவந்து கடைசியில் அவளைத் தன் கணவன் கொண்ட கருத்திற்கிணங்கும்படி செய்வித்து, ஒருநாள் அர்த்தராத்திரியில் தன் புருஷனை ஒரு கூடையில் வைத்து அவளிடம் கொண்டுபோயினள். திரும்புங்காலையில் வழியில் தவம்செய்துகொண்டிருந்த மாண்டவ்யர் என்னும் ரிஷியின்மேல் இவள் கால்பட அவர் மிகவும் கோபம் கொண்டு "பொழுது விடிவதற்குள் நீ தாலியிழக்கக்கடவாய்" என இவளைச் சபித்தனர். அதுகேட்டு அவள் நடுங்கி நான் உத்தமியாயிருப்பது உண்மையாயின் பொழுது விடியாதிருக்கக்கடவது என்றாள். அவ்வாறு பொழுது விடியாதிருக்கவே தேவர் முதலாயினோர் பயந்து இவளைவேண்டினர். பின்னர் அம்முனிவர் தமது சாபத்தை மீட்க இவளும் தன் சாபத்தை நிவர்த்தித்தனள். இதைக் கண்ட அவள் கணவன் மிகவும் அகமகிழ்ந்து தனது உருவத்தை மாற்றிக்கொண்டு மன்மதனிலும் அழகுமிககானாகி, அவளோடு வாழ்ந்திருந்தனன். இவளே மறுபிறப்பில் துரௌபதியாகப் பிறந்தாள்.

முயற்சியின் மிக்கது ஊழெனல் = முயற்சியினும் மேலானது ஊழ் எனல்

31. (ப - ரை.) மங்காத - அழியாத, செந்தமிழ்கொண்டு - இனிய தமிழினாலாகிய பாமாலையை ஏற்றுக்கொண்டு, நக்கீரர்கரு - நக்கீரரென்னும் சிறந்த புலவர் பெருமானுக்கு, வந்த - சேர்ந்த, துயர் - துன்பத்தை, தீர்த்த - நீக்கியருளிய, முருகா - முருகனே, மயிலேறி........குமரேசனே, வங்காளம் ஏறினும் - வங்காள தேசத்திற்குப் போனாலும், வாகுகோல் - துடைப்பம், ஒரு காசு மட்டுஅன்றி - விலையின் அளவு ஒரு காசே அல்லாமல், அதிகம் ஆமோ - அதிக விலையாகுமோ (ஆகாது), வான்எறி - ஆகாயத்திற் சென்று, உயரபறந்தாலும், உயர்ந்த தூரத்தில் பறந்தபோதிலும், ஊர்குருவி - ஊர்க்குருவி (சிட்டுக்குருவி)யானது, வண்ணம் - அழகையுடைய, பருந்து ஆகுமோ - பருந்தாய்விடுமோ, கங்காஜலம் தன்னில் மூழ்கினும் - கங்காநதியில் நீராடினாலும், பேய்ச்சுரைக் காய்—, நல்ல சுரை ஆகுமோ - நல்ல சுரைக்காயாக மாறுமோ, கடலுக்குள் - சமுத்திரத்தினுள்ளே, நாழியை - நாழி என்னும் அளவு கருவியொன்றை, அமுக்கியே மொண்டில் - அமுக்கி அமுக்கி மொண்டாலும், நால் நாழிதான் காணுமோ - அது நான்கு நாழி ஜலத்தை மொள்ளக்கூடுமோ, ஐ காதம் ஓடினும் - ஐந்து காததூரம் ஓடிச்சென்றாலும் தன் வினைகள் தன்னோடு அடையாமல் — தான் செய்த வினைகள் தன்னையே சேராமல், நீங்கிவிடுமோ - ஒழிந்து போகுமோ, ஆர்இடம் சென்றாலும் - எப்படிப்பட்டவரிடம் போனாலும், வெகு தொலைகள் சுற்றினும் - வெகுதூரம் சுற்றியலைந்தாலும், அமைத்தபடி அன்றிவருமோ - (அவரவர் வினைக்கீடாக முன்னமே கடவுளால்) அமைக்கப்பட்டுள்ள முறைப்படி அல்லாமல் வேறு விதமாக உண்டாகுமோ (உண்டாகாது என்றபடி).

"செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலையா ரருங்கருணை சிறிதுண்டானால், எங்காகில் என்ன? அவர் எண்ணியவெல்லாம் முடியும் இல்லையாகில், பொங்காழி சூழுலகில் உள்ளங்கால் வெள்ளெலும்பாய்ப் பொலிய ஓடி, ஐங்காதம் போனாலும் தன்பாவந் தன்னுடனே ஆகுந்தானே" என்னும் பழமொழி ஈண்டுணர்தற்பாலது.

நக்கீரர் முருகக்கடவுளின் அருள்பெற்ற கதை

ஒருகாலத்தில் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு மலைக்குகையில் அடைத்து வைத்துவிட்டு அத்தன்மையான மற்றொருவரை தேடித்திரிந்த பூதம் ஒன்று, நக்கீரர் ஒரு தடாகத்தின் சமீபத்தில் பூசை புரிவதைப் பார்த்து அவர் முன்னே விழுந்த ஆலிலையைப் பாதி மீனாகவும் பாதி பறவையாகவும் செய்தது. அந்த அற்புதத்தைக் கண்ட நக்கீரர் மனங்கலங்கின மாத்திரத்தில் பூதமானது அவரையும் தூக்கிக்கொண்டுபோய் தன்குகையில் சேர்த்துவிட்டு நீராடிவந்து ஆயிரம்பேரையும் ஒருமிக்கப் புசிப்போமென்று தடாகத்துக்குப் போயிற்று. அவ்வேளையில் நக்கீரர் திருமுருகாற்றுப்படையைப் பாடி முருகக்கடவுளின் அருளைப் பெற்று அவரருளால் தம்மையும மற்றவரையும் காத்தனா என்பது

32. (ப - ரை) மாரனை - மன்மதனை, கண்ணால் எரித்தருள் - நெற்றிக்கண்ணால் எரித்தருளிய, சிவன்தந்த வரபுத்ர - சிவபெருமான் உதவிய சிரேஷ்ட குமாரனே, மயிலேறி. ....குமரேசனே—சூரபத்மன் - சூரபத்மனுடைய, பெலமும் - பராக்கிரமும், இராவணன் - இராவணனது, தீரமும - சௌரியமும், துடுக்கான - துஷ்டத்தனமுள்ள, கஞ்சன்வலியும் - கஞ்சனது வல்லமையும், துடியான - கிலாக்கியமுள்ள, இரணியன் - இரணியனது, வரப்ரசாதங்களும் - வரத்தின் அனுக்கிரகங்களும், தொலையாத - நீங்காத, வாலி திடமும்—வாலியினது தைரியமும், பாரம் மிகு - பூமிக்குச் சுமையாக மிகுந்த, துரியோதனாதி நூற்றுவரது பராக்கிரமும் - துரியோதனன் முதலிய நூறுபேர்களின், பராக்கிரமம் - ஆண்மையும், மதுகைடவர் - மதுகைடவர்களின், பாரிப்பும் - பெருமையும், மாபலிதன் ஆண்மையும் - மஹாபலிசக்கிரவர்த்தியின் வீரமும், சோமுகன் பாங்கில் உறுவல்லமைகளும் - சோமுகாசுரனிடத்தில் பொருந்திய ஆற்றல்களும், எர்அணவு - அழகுவாய்ந்த, கீசகன் கனதையும் - கீசகனுடைய பெருந்தன்மையும், திரிபுரர்தம் எண்ணமும் - திரிபுரத்து அசுரர்களின் கருத்தும், தக்கன் எழிலும் - தக்ஷபிரஜாபதியின் யோக்யதையும், (ஆகிய) இவர்களது சம்பத்து - இப்படிப் பட்டவர்களது ஐஸ்வரியங்கள், நின்றவோ - நிலையுற்றனவா

(இல்லை), அவா அவர் இடும்பால் - அவர் அவர்களது தீச்செயலால், அழிந்த அன்றோ - அழிந்துபோயின அல்லவா.

சூரபத்மன் :—காசிபருக்கு மாயையினிடம் பிறந்து அவனிடம் உபதேசம் பெற்று அரியயாகம செய்து சிவமூர்த்தியின் தரிசனம்கொண்டு வஜ்ஜிரயாக்கையும், இந்திரஜாலம் என்னும் தேரும், விஷ்ணு முதலாகிய தேவர்களுக்கும் பின்னிடாவல்லமையும் பெற்றவன். இவன் மாயையின் தூண்டுகோலால் தேவர்களை வருத்தத் தொடங்கியபோது அவாகள் குகப்பெருமானிடம் முறையிட அவர் அவன் தந்திரத்தையும் வலிமையும அடக்கி தேவர்களைக் காத்தனர் இவன் பட்டணம் வீரமஹேந்திரம். தேவி - பதுமகோமளை, குமாரா - பானுகோபன் முதலானோர்.

இராவணன் :—விசிரவசுவிற்கு கேகசியிடம் பிறந்தவன். தவம்செய்து அரிய வரஙகள் பெறறவன். தேவர்களையும் முனிவர்களையும் பெரிதும வருத்தியவன். முடிவில ஸ்ரீராமபிரானால் கொல்லப்பட்டவன். இவனுடன் பிறநதவர்கள் கும்பகர்ணன், சூர்ப்பனகை, விபீஷணன். கஞ்சன் - யதுவம்சதது உக்ரசேனனுக்குப் பிறநதவன். இவன் முற்பிறப்பில் காலநேமி என்னும் அசுரன். கிருஷ்ணனுக்கு நல்லம்மான். கிருஷ்ணனைப் பகைத்துக் கொண்டு முடிவில அப்பிரானால் இறுதியடைந்தவன்.

இரணியன் :—காசிபருக்குத் திதியிடம் பிறந்தவன். இவன் சகோதரன் இரணியகசிபு. இவர்கள் அருமையான தவஞ்செய்து அநேக வரஙகளைப் பெற்றுத் தேவரையும் சாதுக்களையும் வருத்திவந்து முடிவில் திருமாலால் கொல்லப்பட்டனர்.

வாலி :—இந்திரன் குமரன். இவன் உடன் பிறந்தவன் சுக்ரீவன். மிக்க பராக்ரமசாலி. இராவணனையும் தன் வாலால் பிணித்தவன். கடலகடைந்து தேவர்க்கு உதவிபுரிநதவன். தன்னை எதிர்த்தவர்களின் பலத்தில பாதி தன்னைச் சார வரம்பெற்றவன். முடிவில் ஸ்ரீராமனால் உயிர் துறந்தான்.

துரியோதனாதி நூற்றுவர் :—இவர்கள் திருதராஷ்டிரனுக்குக் காந்தாரியிடம் பிறந்தவர்கள். தாயாதிகளான பாண்டுபுத்திரர்களை வருத்தி முடிவில் அவர்களிடம் போரிட்டு மாண்டனர்.

மதுகைடவர் :—இவர்கள் விஷ்ணுமூர்த்தியின் காதின் வழி யாகப் பிறந்து விட்ணுசிட்ணுவால் சங்கரிக்கப்பட்டவர்கள்.

மாபலி :—விரோசனன் என்னும் அசுரனுக்குத் தேவி என் பவளிடம் பிறந்தவன். பிரகலாதன் பேரன். மகாவீரன். திரிலோ கத்தையும் ஆண்டவன். திருமால் வாமனவதாரங்கொண்டு இவ னிடம் சென்று மூன்றடிமண் வேண்டி அவன் கொடுக்கப்பெற்று, திருவிக்கிரமராய் மேலுலகும் கீழுலகும் ஈரடியால் அளந்து ஓர டிக்கு இடங்காணது மகாபலியின் சிரசையே அதற்கு இடமாகக் கொண்டு அவனைப் பாதாளத்திருத்தினர்.

சோமுகன் :—ஓர் அசுரன். பிரமன் உறங்குகையில் வேதங்க ளைத் திருடிச்சென்று விஷ்ணுவால் கொல்லப்பட்டவன்.

கீசகன் :—விராடராஜன் மனைவியான சுதட்சணையின் சகோ தரருள் மூத்தவன். இவன் வண்ணமாதாயிருந்த துரோபதையின் மீது காதல்கொண்டு வீமனல் கொல்லப்பட்டவன்.

திரிபுரர் :—தாரகாசூரன் குமரராகிய வித்துன்மாலினி, கம லாட்சன், தாரகாட்சன் என்பவர். இவர்கள் சிவபிரானது அருள் பெற்று இரும்பு, வெள்ளி, பொன் என்னும் மூன்று லோகங்களால் அமைக்கப்பட்ட மூன்று கோட்டைகளைக்கொண்டு திரிலோகத் திற்கும் கெடுதி விளைத்து வந்தனர். முடிவில் சிவபிரானது புன் னகையால் மாய்ந்தனர்.

தக்கன் :—இவன் நவப்பிரஜாபதியருள் ஒருவன். உமாதேவி யைப் பெற்றவன். சிவமூர்த்தியை மருகனகக் கொண்டவன். யாகஞ் செய்தபோது உமாதேவியாரையும் சிவபிரானையும் அவமதித் தமையால் வீரபத்திரரால் சங்கரிக்கப்பட்டவன்.

மாரன் :—மன்மதன். விஷ்ணுவின் புத்திரன். ஒரு காலத்தில் சிவமூர்த்தியானவர் யோகத்திலிருந்தபோது தேவர்களின் வேண்டு கோளின்படி இவன் அவரிடம் சென்று தனது புஷ்பக்கணைகளால் அவரது யோகத்தை கலைக்க முயன்றனன். அப்போது சிவபிரா னது நெற்றிக்கண்ணல் சாம்பராயினன்.

மேற் சொன்னவர்களின் வரலாறுகள் முற்றும் பலர் நன்கறிந் திருத்தலால் விரித்தெழுதுவது அனுவசியமென்று குறிப்பிக்க லாயிற்று.

நட்பு நிலை=சிநேகித தருமம்

33. (ப-ரை.) வாமன சொரூப - குள்ளமான வடிவத்தையுடைய, மதயானை முகனுக்கு - மதம் பொழியும்படியாகிய ஆனை முகத்தையுடைய விநாயக மூர்த்திக்கு, இளைய-தம்பியாகிய, வால-இளம் பருவத்தையுடையவனே, குருபர - சிறந்த குருவே, வேலவா-வேலவனே, மயிலேறி... ..குமரேசனே-, மாமதியில் - சிறந்த சந்திரனிடத்து, முயலானது - முயல்வடிவம் போன்று தோன்றுகின்ற களங்கமானது, அது - சந்திரன், தேய்வுழி - குறையும்போது, தேய்ந்து-குறைந்து, வளரும் அப்போது-பெருகும்படியான அக்காலத்தில், வளரும்-தானும் பெருகும், வாவிதனில்-தடாகத்திலுள்ள, ஆம்பல் கொட்டிகள்-ஆம்பலும் கொட்டியும், அதனில் - அந்த தடாகத்தில், நீர் வற்றில்-ஜலமானது வற்றிப்போனால், வற்றிடும்-தானும் வற்றிப்போம், பெருகில்-ஜலமானது பெருகினால், உயரும்-தானும் வளரும், பூ மருவு-பூமியிற் பொருந்திய, புதல் பூடு-புதற்களும் பூண்டுகளும், கோடையில் - வெயிற்காலத்தில், தீய்ந்திடும் - தீய்ந்துபோம், பொங்குகாலம் - மழைகாலத்தில், தழைக்கும் - செழித்து வளரும், புண்டரிகம்-தாமரையானது, இரவிபோம் அளவில்-சூரியன் அஸ்தமிக்கும்போது, குவிந்திடும்-குவிந்து விடும் (வாய்மூடிக்கொள்ளும்), உதயமாகில் - சூரியன் உதயமாகும்போது, போது - அந்த தாமரை மலரானது, மலரும்-விரிந்து விளங்கும், தேம் - இனிய, உடல்-சரீரமானது, இளைக்கில் - இளைத்துவிட்டால், உயிர் - பிராணனானது, கூடவும் இளைக்கும்-தானும் கூடவே தளர்வடையும், அது தேறில்-அந்த சரீரமானது செழிப்புற்றால், உயிரும்-, சிறக்கும் - சிறந்து விளங்கும், சேர்ந்தோர்க்கு - அடைந்தவர்க்கு, இடுக்கண் அது-, துன்பமானது, வந்தாலும் - சம்பவித்தாலும், நல்லோர் சிநேகம் அப்படி ஆகும்-நல்லவர்களது சிநேகமானது அவ்விதமாகும், (அதாவது, நல்லவர் தம்மை அடுத்தவர்கள் இன்பமடைய தாமும இன்பமடைந்து அவர்கள் துன்பமடையும்போது தாமும் துன்பமடைவர் என்பதாம்.

"அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி யுறுவாருறவு" எனவருவதும் இங்கு உணர்தற்குரியது. உட

லானது உயிரிருத்தற்கு ஆதாரமாதலின் அதனை 'தேம் உடல்' என்றார்.

கைப்பலனுமவை=உடனே கைகூட் (சிந்திக்க)த் தருந்தவை

34. (ப - ரை) மரு உலாவிய - வாசனை வீசும்படியாகிய, நீப மாலேயும்-கடப்ப மலர் மாலையையும், தண் - குளிர்ந்த, தார மாலேயும்-, முதலா மாலையையும்—, புனை-பூண்டுள்ள, மார்பனே - திருமார்பை உடையவனே, மயிலேறி......குமரேசனே -, பருவத்திலே - தகுந்த வயதிலே, பெற்ற - பெற்றெடுத்த, சேயும்-புத்திரனும், புரட்டாசி பாதி-புரட்டாசி மாதத்தின் மத்தியில, சம்பா நடுகையும்-சம்பா நெல்லைப் பயிரிடுதலும், இனிய பலம் - சிறந்த பலத்தைத் தரும்படியாகிய, ஆடிதனில் - ஆடிமாதத்தில, ஆனைவால்போலவே - ஆனையினது வாலைப்போல, பயிர் கொண்டுவரும - வளருமபடியாகிய, கரும்பும்-, கருணையோடு - கிருபையுடனே, மிக்க நாணயம் உள்ளோர் கையினில் - மேலான நாணயத்தை உடையவர்களிடத்தில், கடன் இட்டுவைத்த முதலும் - கடன் கொடுத்து வைத்த அசல் தொகையும்; காலம் அது நேரில - சமயம் நேரிட்டபோது, தனக்கு உறுதி ஆக - தனக்கு நன்மையைத் தரும்பொருட்டு, முன் - இளம்வயதிலேயே, கற்று உணர்ந்திடு கல்வியும்-படித்தறிந்த படிப்பும், விருது-விருதுகளையுடைய, அரசரைக் கண்டு-ராஜாக்களை நேரில் பார்த்து, பழகிய சிநேகமும் - பழக்கம் பெற்ற நட்பும், விவேகிகட்கு - பகுத்தறிவாளர்க்கு, உபகாரமாம் - உபகாரமாகும், இவையெலாம் - இவைகள் யாவும், வீண அல்ல-வீண் போகா, கைப்பலன் அது ஆக - கைகூடிய பலனாகவே, அபிவிர்த்தியாய் வரும் என்பர் - மேன்மேலும் விர்த்தியடைந்து வரும் என்று சொல்லுவார்கள், காண் - அசை.

நாணயம்-வாக்குப் பிசகாமை. விருது-குடை, கொடி, பட்டப் பெயர் முதலியன.

சமயத்துக்கு உதவாதவை=ஆபத்துக்குப் பயன் படாதவை

35. •(ப - ரை.) வல்லுனை - சூதாடு கருவிபோன்ற, கொங்கை ஸ்தனபாரங்களையுடைய, மடமாது - இளம்பெண்களாகிய, தெய்

வானை, குறவள்ளிபங்காள - தெய்வயானை, வள்ளிநாயகி என்னும் இருவரையும் இருபாரிசத்திலும் உடையவனே, நேயா - அன்புள்ளவனே, மயிலேறி.....குமரேசனே—, கல்லாது - படிக்காமல், புத்தகம் தன்னில் எழுதி - ஏட்டில் எழுதிவைத்து, வீட்டினில் - வீட்டுக்குள், கட்டிவைத்திடு - கட்டிவைத்திருக்கும்படியாகிய, வித்தையும் - படிப்பும், காலங்களுக்கு - சமயங்கள் நேர்ந்தபோது, உதவ வேண்டுமென்று - பிரயோஜனமாகவேண்டுமென்று நினைத்து, அன்னியன் கையில கொடுத்த பொருளும் - பிறரிடம் கொடுத்துவைத்த திரவியமும், இல்லானை - சொந்தமனைவியை, நீங்கியே - பிரிந்து, பிறர்பாரி - அயலாரது மனைவியா, சதம் என்று இருக்கின்ற - நிலையான சகாயமென்று நம்பியிருக்கிற, குடிவாழ்க்கையும், பிழைப்பும், ஏறுமாறு ஆகவே - ஏடாகூடமாக, தேசாந்தரம்போய் இருக்கின்ற - வேறு தேசத்திற்குச் சென்றுள்ள, பிள்ளைவாழ்வும் - புத்திரனது வாழ்க்கையும், சொல் ஆனது ஒன்றும் - சொல்வது ஒன்றும், அவர் மனமானது ஒன்றுமஆ - அவர்களுடைய மனதில் ஒன்றும் (சிந்திப்பது ஒன்றும்) ஆக, சொல்லு - பேசப்பட்ட, வஞ்சகா - கபடர்களுடைய, நேசமும் - சிநேகமும், சுகியமஆய் உண்டென்று இருப்பது எல்லாம் - சௌகரியமாக இருக்குமென்று எண்ணியுள்ளது அனைத்தும், தருணதுரிதத்தில - அவசரமான சமயத்தில், உதவாது - பயன்படாது, காண - அசை

வல் - கச்சு, ஆன - பொருந்திய, எனினும் ஒக்கும். ஏறுமாறு- மனக்கலக்கம். 'தருண துரிதத்தில்' என்பதை துரிததருணத்தில் என்று மாற்றிப் பொருள்கொள்க.

திரும்ப மாட்டாதவை=மீண்டும் அடையக் கூடாதவை

36. (ப-ரை.) மாடம் மிசை-உப்பரிகைகளின் மீது, அன்னக்கொடி - அன்ன மிடும்படியாகிய இடத்தைக் குறிப்பிக்கும்படி கட்டியுள்ள கொடிகளின், திரள்கொள் - கூட்டத்தைக் கொண்ட சோணாடு - சோழ தேசமானது, வாழவந்திடும் முதல்வனே - சுகமடைய எழுந்தருளிய நாயகனே, மயிலேறி......குமரேசனே-, ஆடு அரவின் வாயினில - படத்தை எடுத்துக்கொண்டு ஆடுகின்ற பாம்பினது வாயில், அகப்பட்ட - சிக்கிய, தவளையும்-, ஆனைவாயில் -

ஆனையினது வாயில் சிககிய, கரும்பும்-, அரிதான - அருமையாகிய, கப்பலின்-மரக்கலத்தினுடைய, பாய்மரம் - பாய்மரத்திற் தங்கி, காற்றினில் அகப்பட்டு-சுழல் காற்றில் அகப்பட்டு, மெலி-வருந்து கின்ற, காக்கையும்-காகமும், நாடு அறிய-பூமியிலுள்ளார் யாவரும் அறியும்படி, தாரைவார்த்துக் கொடுத்ததும் - தாரைவார்த்துக் கொடுத்த பொருளும், நமன் கைக்குள் ஆன உயிரும் - எமன் வசப் பட்ட பிராணனும், நலமாக-பூரணமாக, அணை கடந்திட்ட - கரை யைப் பெயர்தது கொண்டுபோன, வெள்ளமும் - நீர்ப்பெருக்கும், நாய்வேட்டை பட்ட முசலும் - நாயினது வேட்டையில் சிக்கிய முயலும், தேடி உண்பார் - திருடி யுண்பவர்களுடைய, கைக்குள் ஆன-கைவசமான, பல உடமையும்-பல சொததும், தீவாதை ஆன மனையும்-நெருப்பின் கொடுமைக்கு உட்பட்ட வீடும், கொடுங்கோல் அரசர் - அநீதமாக ராஜரீகம் செய்யும அரசர்களின, கைககு எறு - கையிற் சிக்கிய, திரள் - கூட்டமான பொருள்களும், திரும்பிவாரா என்பர்-மீண்டும் அடையப்படாதனவாகும என்று சொலலுவார்கள்.

'ஆனைவாயிற் கரும்பும்'- ஆலைவாயிற் கரும்பும் என்றும் பாடம். ஆலை-கரும்பு ஆலை. பாய்மரம்-கூம்பு.

'எங்கும் போய்க் கரைகாணு தெரிகடல் வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே'

என்கிறபடி 'அரிதான.. . காகையும்' என்றார். நாடு - ஆகு பெயர். தாரைவார்த்தல்-தத்தம் பண்ணி நீர் விடுதல். "மேதக்க சோழவளநாடு சோறுடைத்து" என்பதை ஒட்டி இங்கும் 'மாட மிசை.....சோணாடு' என்றார். காண-அசை.

இதனினும் இது நன்று எனல்=இன்னாதை காட்டிலும் இன்னாது மேலானது எனல்

37 (ப - வை.) மருவினில் - குளத்தினில், கரி-முதலையினால் பிடிக்கப்பட்டு வருத்தமுற்ற கஜேந்திரன் என்னும் யானையானது, ஓலம் என்ன-"ஓ! ஆதிமூலமே, அபயம்" என்று கதறி அழைக்க, வந்து அருள்செய்த - ஓடிவந்து அபாயத்தைத் தீர்த்து இரக்ஷித்து அருளிய, மால்மருகனை முதலவா-மகாவிஷ்ணுவுக்கு மருமகனை தலைவனே, மயிலேறி......குமரேசனே-, கடுகடுத்து-முகம் சுளுக்கி,

ஆயிரம் செய்குவதின்-அநேக உபசாரஙகள் செய்வதைப் பார்க்கிலும், இன்சொலால் - நல்ல வார்த்தையால், களிகொணடு அழைத்தல் நன்று-சந்தோஷத்துடன் கூப்பிடுதல் நல்லது, கனவேள்வி ஆயிரம் செய்வதின்-மேன்மையான யாகங்கள் அநேகம் செய்வதைப் பார்க்கிலும், பொய் உரை-பொய் வார்த்தையை, கருத்தோடு சொலாமை நன்று-மனது ஆர சொல்லாதிருப்பது நல்லது, வெடுவெடுக்கின்றது ஓர் அவிவேகி-கடிந்து பேசுகின்ற ஒரு மூடனது, உறவினின்-சிநேகத்தைப் பார்க்கிலும், விவேகி ஒடு பகைமை-அறிவுடையவனுடன் விரோதம் கொள்ளுதல், நன்று-நல்லது, வெகுமதிகள ஆயிரம் செய்வதின்-பரிசுகள் அதிகமாய் வழங்குவதைப் பார்க்கிலும், அரைக்காசு-அரைக்காசாகிலும், வேளைகண்டு உதவல் - சமயம் அறிந்து உதவி செய்தல், நன்று-நல்லது, சடுதியில்-சீக்கிரத்தில், பக்குவம் சொல்லும் கொடைக்கு - இரப்பவனிடம் பகருவமான பசப்புவார்த்தைகளைப் பேசி அனுப்பிவிடுகின்ற தருமததைக்காட்டிலும், இஙகு சற்றும் இலை எனல் நன்று-இவ்விடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்று வரும்போதே சொல்லிவிடுதல் நல்லது, சமபததுடன்-எல்லா ஐஸ்வரியத்துடனிருந்து, பிணியின் மெலிகுவதின் - வியாதியால் நலிந்து வருந்துவதைப் பார்க்கிலும், நோய் அற்ற-நோய் இல்லாத, தாரித்திரியம் நன்று-வறுமை மேலானது. காண் அசை.

"இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம், வன்சொலாலென்று மகிழாதே" என்கிறபடி இவ்வாசிரியரும் கடுகடுத்......அழைத்தனன்று' என்றார்.

திருமால் மடுவில் கஜேந்திரனைக் காத்தகதை.

இந்திரத்துய்மன என்னும் அரசன் ஒருவன் வனத்தில் தனித்துத் தவம்புரியும்போது அவ்வழியே வந்த அகஸ்திய முனிவரை அவன் அவமதிகக அதனுல் அவர் அவனை மதஙகொண்ட யானையாகுமாறு சபித்தனர். இவ்வாறே ஊஊ என்னும் கந்தர்வன் ஒருவனும் ஒரு தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தபோது அங்கு நீர்க்குள் மூழ்கி செபம் செய்துகொண்டிருந்த ஒரு முனிவரின் காலைப் பற்றி யிழுக்க, அதனுல் அவனை முதலையாகுமாறு சபித்தனர். சாபம் பூண்ட இந்திரத்துய்மன் கஜேந்திரன் என்னும் பெயர்கொண்ட

யானையாய் திரிந்திருந்து முதலையாகச் சபிக்கப்பட்ட ஊகூ என்பவன் வசித்திருந்த தடாகத்திற்கு நீர் அருந்த வர அப்போது முதலையானது யானையின் காலை பற்றிக்கொள்ள அத்துன்பஞ் சகியாத யானை "ஆதிமூலமே" என்று ஓலமிட்டழைக்க திருமால் தரிசனம் தந்தருளி முதலையைக்கொன்று யானையைக் காத்தனர் என்பது. "கடுத்த கராம் கதுவநிமிர்கை யெடுத்த மெய்கலங்கி, உடுத்த திசை அனைத்தினுஞ் சென்றொலிகொள்ள உனுதுயரால், அடுத்த பெருந்தனி மூலத் தரும் பரமே பரமே யென்றழைத்தொருவா ரணமழைப்ப நீயோவன றேனென்றாய்" என்றார் கம்பர்.

பலகூடினும் ஒன்றற்கு ஈடாகாதவை=அநேகம் ஒன்று சேர்ந்தாலும் ஒன்றுக்குச் சமானமாகாதவை

38 (ப-ரை). வாரணக் கொடி-சேவற்கொடியை, ஒரு காத்தில் பிடித்து-ஒரு கையில் பிடித்துக்கொண்டு, ஒன்றில்-மற்றொரு கையில், வடிவேல் அணிந்த-கூரிய வேலாயுதத்தை ஏந்திய, முருகா-முருகனே, மயிலேறி.....குமரேசனே—, தாரகைகள - நட்சத்திரங்கள், ஒரு கோடி - பல, வானத்து இருக்கினும் - ஆகாயத்தில் இருந்த போதிலும், சந்திரற்கு ஈடு ஆகுமோ-சந்திரனுக்கு ஒப்பாகுமோ, (ஆகா), தாருவில்-மரத்தில், கொடி-காகங்களின், தொனிகள்-சப்தங்கள், பல கூடினாலும்-அநேகம் ஒன்று சேர்ந்தாலும், ஒரு தம்பட்ட ஓசை ஆமோ-ஒரு தப்பட்டையின் சத்தத்திற்கு சமானமாகுமா, கோரம் மிகு-கொடுமை மிகுந்த, பன்றியின் குட்டி-பன்றிக் குட்டிகள், பல கூடின்-பல ஒன்றுசேர்ந்தாலும், ஒரு குஞ்சரம் கன்று ஆகுமோ-ஒரு யானையின் குட்டிக்கு நேராகுமா, கொட்டி மலர்-கொட்டிப்பூக்கள், வாவியில்-தடாகத்தில், பல கூடினாலும்-பல ஒன்று சேர்ந்தாலும், ஒரு கோகநதம் மலர் ஆகுமோ - ஒரு தாமரை மலருக்கு நிகர் ஆகுமா, பாரம் மிகு-கனம் மிக்க, மாமலைகள்-பெரியமலைகள், பலகூடினாலும்—, ஒரு பைம்பொன் மகமேரு ஆமோ-ஒரு பசும்பொன்மயமான மகம் மேருமலைக்கு ஒப்பாகுமோ, பலன் இலா-பயன்படாத, பிள்ளைகள-புத்திரர்கள், அநேகம் பிறந்தும்-பல பிறந்தபோதிலும், விற்பன்னன் ஒருவனுக்கு-கல்வியறிவு உடையவனான ஒருவனுக்கு, நிகரோ-ஒப்பாகுமோ.

"நன்றி தரும் பிள்ளையொன்று பெற்றாலுங்
குலமெழுது நன்மையுண்டாம்,
அன்றி அறிவில்லாத பிள்ளை யொருநூறு
பெற்று மாவதுண்டோ,
மன்றி கடம் புரிவாரோ தண்டலையாரே
சொன்னேன் வருடந்தோறும்,
பன்றி பலவீன்றுமென்ன குஞ்சர
மொன்றீன்றதனால் பலனுண்டாமே."

என்னும் பழமொழி இங்கு அறிதற்பாலதாம்.

அருமை அறிதல்=அருமையின் தன்மையை உணர்தல்

39. (ப - ரை). மணவாளன் நீ என்று-ஏற்ற கணவன் நீயே என்று, குறவள்ளி பின் தொடர-வள்ளிநாயகி அம்மையார் பின் தொடர்ந்து செல்ல, வனம் ஊடு தழுவும்-வனத்தின் கண் தழுவிய, அழகா-அழகனே, மயிலேறி......குமரேசனே—, மணம்மாலை அருமையை-வாசனைபொருந்திய பூமாலையினது மேன்மையை, புனைபவர்களே அறிவர்-அதை அணிந்துகொள்பவர்களே தெரிவர், மட்டிகுரங்கு-புத்தியில்லாத குரங்கு, அறியுமோ-தெரிந்துகொள்ளுமோ (தெரிந்து கொள்ளாது), மககளுடைய அருமையை-பிள்ளைகளினுடைய சிறப்பை, பெற்றவர்களே அறிவர்-அப்பிள்ளைகளைப் பெற்ற தாய் தந்தையர்களே அறிவார், மலடிதான்-பிள்ளை பெறாதவள், அறிவது உண்டோ-தெரிந்துகொள்ளுதல் கூடுமோ, கணவருடை அருமையை-புருஷனுடைய பெருமையை, கற்பு ஆனமாது அறிவள்-கற்புக்குணங்கள் வாய்ந்த பெண்ணே அறிவாள், கணிகை ஆனவள்-தாசி ஆனவள், அறிவளோ—, கருதும்-கருதத் தக்க ஒரு சந்தியின் பாண்டம்-சந்தியின்கணுள்ள தோர்பானை, என்பதை,— வரும் களவான நாய்-திருடுவதற்கு வரும் நாயானது, அறியுமோ,— குணமான கிளி அருமைதனை-நல்ல இலட்சணம் உடைய கிளியினது மேன்மையை, வளர்த்தவர் அறிவர்-அதை வளர்த்தவர் அறிவார், கொடிய பூனையும்-துஷ்டபூனையும், அறியுமோ—, குலவு பெரியோர் அருமை - விளங்கும்படியான அறிவுடையவர்களது பெருமையை, நல்லோர்களே அறிவர்-நன்மைவாய்ந்தவர்களே அறி

வார், கொடுமூடர்தாம்-தீயகுணம் வாய்ந்த மூடர்கள், அறிவரோ—, பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை பெருப்பேதை யறி வாளோ ?" என்பது இங்கு கவனிக்கத்தக்கது,

தீச்சார்பால் பயன்படாதவை=கெட்ட சேர்க்கையால் பிரயோஜனமாகாதவை.

40. (ப-ரை). வடுவையும்-வாளையும், கடுவையும் விஷத்தைபும், பொருவும-ஒத்திருக்கும், இரு கண்ணி குறவள்ளிக்கு-இரண்டு கண்களையுடைய வள்ளி நாயகிக்கு, உகந்த-விருப்பமாயுள்ள, கணவா-நாயகனே, மயிலேறி......குமரேசனே—, மடுவினில்-தடாகத்தில், கஞ்சமலர் உண்டு-தாமரைப் புஷ்பம் உண்டு, (ஆனால்) அங்கு-அவ்விடத்தில், ஒருவா அணுகாமல-ஒருவரும போய் நெருங்காதபடி, வல் முதலை இருக்கும்-கொடிய முதலை வாசஞ்செய்து கொண்டிருக்கும, மலையினில் தேன் உண்டு-மலையின் உச்சியில் தேன்கூடு உண்டு, (ஆனால்) சென்று ஒருவர் கிட்டாமல-அவ்விடத்து ஒருவரும் சேராதபடி, அதில்-அந்த கூட்டில், வண்டு மருவி இருக்கும்-வண்டுகள் பொருந்தியிருக்கும், நெடுமை திகழ் - நீட்சியால் விளங்கும், தாழைமலர் உண்டு-தாழம் பூக்கள புதரில் இருக்கின்றன, (ஆனால்), அங்கு ஒருவர் அணுகாமல்-ஒருவம நெருங்காதவண்ணம், நீங்காத முள்ளிருக்கும்-அந்தச் செடியில் எப்பொழுதும் ஒழியாத முட்கள் பொருந்தியிருக்கும், நீடு பல சந்தன விருக்ஷம் உண்டு - நீண்டு வளர்ந்த அநேக சந்தன மரங்கள் இருக்கின்றன, (ஆனால்), அணுகாது - அவ்விடத்திற்கு போகக்கூடாதபடி, நீள் அரவு சூழ்ந்திருக்கும் - பெரிய சர்ப்பங்கள் அம்மரத்தி னடியில் சூழ்ந்துகொண்டிருக்கும், குடிமல்கி வாழ்கின்ற வீட்டினில்-குடிகள் பெருத்து க்ஷேமமாக வாழ்ந்துகொண்டிருக்கிற வீடுகளில், செல்லாது - போகவிடாதபடி, குரைநாய்கள் - குரைக்கின்ற நாய்கள், அங்கு இருக்கும்-அவ்விடத்தில் தங்கியிருக்கும், கொடுக்கும் தியாகி உண்டு - இரப்பவர்களுக்கு ஒளிக்காமல் கொடுக்கும் கொடையாளர் இருக்கின்றனர், (ஆனால்), இடையூறு பேசும் - கொடுக்க வொட்டாமல் தடுத்துப் பேசுகின்ற, கொடும் பாவி உண்டு-கொடிய பாவி அவ்விடத்தில் உண்டு. கண்டாய்-அசை.

வடு-மாவடு எனினும் ஆம். வடு-வாள், "வாளன கண்மடவாளை வள் வாடி வருந்தாமே" என வருவதுங் காண்க.

கலிகாலக் கொடுமை = கலிகாலத்து நடக்கும் படியான விபரீதங்கள்

41 (ப - வை.) ஐயா-சுவாமியே, மயிலேறி..... குமரேசனே-, தாய் புத்திசொன்னால்-தாயானவள் தான் பெற்ற பிள்ளைக்குப் புத்தி மதி சொன்னால், மறுத்திடும் - அதைக் கேளாது தடுத்துப்பேசும், காலம்-காலமாகும், தந்தையை-தகப்பனை, சீறு-கோபிக்கும், காலம்-, சற்குருவை - தனக்கு நல்லொழுக்கம் முதலியவைகளைப் போதித்த ஆசாரியரை, நிந்தைசெய்-இகழ்ந்து பேசும்படியான, காலம்-, மெய் கடவுளை - உண்மையான கடவுளை, சற்றும் - சிறிதளவேனும், எண்ணாத-சிந்தனை செய்யாத, காலம்-, பேய்-பிசாசை, தெய்வம் என்று-கடவுள் என்று, உபசரித்திடும் - வழிபாடு செய்யும், காலம்-, புரட்டருக்கு-மோசக்காரருக்கு, ஏற்ற - தகுந்த, காலம்-, பெண்டாட்டி-தான் கொண்ட மனைவி, வையினும் - திட்டினாலும், கேட்கின்ற - கேட்டுக்கொண்டு சும்மா இருக்கின்ற, காலம்-, நல் பெரியர்-கல்வி கேள்விகளால் நிறைந்த பெரியவர்களின், சொல் - வார்த்தையை, கொளாத - செவியில் கொள்ளாத, காலம்-, பெரியவன் - வயதில் பெரியவன், தேய்வு உடன்-குறைவுடன், சிறுமை உறு-கஷ்டத்தை, அனுபவிக்கும், காலம்-, மிகு சிறியவன்-மிகவும் வயதில் சிறியவன், பெருகு காலம்-அதிக கண்ணியத்தை அடையும் காலம், செருவில்-போரில், விட்டு ஓடினோர்-போரில் முதுகு காட்டி ஓடிப்போவோர், வரிசை பெறும் - மரியாதை அடையும், காலம்-, வசை செப்புவோர்க்கு-தூஷணைச்சொல் சொல்பவர்க்கு, உதவும்-ஒத்தாசை செய்யும், காலம்-, (இத்தகைய காலம்), வாய்மதம் பேசிவிடும் - அகங்காரத்தினால் வாயில்வந்தபடி பிதற்றுகிற, அநியாயகாரர்க்கு-அநீதியுள்ளவர்களுக்கு, வாய்த்த - பொருந்திய, கலிகாலம் - கலிகாலமாம்.

அவரவர்க்கு உரியவை = அவர் அவர்களுக்கு உரித்தான தொழில்கள் இவை எனல்

42. (ப - வை.) வல்விரகம்-கொடிய (அதிக) ஆசை, மிஞ்ச-மிகுந்த, சுரகுஞ்சரி உடன்-தெய்வயானை உடன், குறவர் வஞ்சியை-,

குறவர் பெண்ணை (வள்ளி நாயகியை) மணந்த-கலியாணஞ் செய்து கொண்ட, கணவா-நாயகனே, மயிலேறி.....குமரேசனே-, சபை யில் - கல்விச் சங்கத்தில், கல்வி ஒடு - வித்தையுடன், கனம் உற - கௌரவமும் பொருந்தும்படி, மேல்வட்டமாக - உன்னத நிலைமை யில், காண - விளங்கும்படி, வைப்போன் - வைப்பவன், பிதாவாம்- சரியான தந்தையாவன், கற்று உணர்ந்து - சாஸ்திரங்களைப் படித் தறிந்து, தனது புகழால-தனது கீர்த்தியினுல், பிதாவை-தகப்பனை. பிரகாசஞ் செய்வோன்-பிரசித்தப் படுத்துபவன், புத்திரன்-சரியான மகனுவன், செல்வம் மிகு கணவனே - சிறப்பு மிகுந்த புருஷனே, தெய்வம் என்று-கடவுள் என்று, அநுதினம்-நாள்தோறும், சிந்தை செய்பவள - அவனைத தொழுது எழுந்திருப்பவள், மனைவியாம் - சரியான மனைவியாவாள், சிநேகிதன் போலவே - சிநேகிதனைப் போலவே, அன்பு வைத்து-ஆசை வைத்து, உண்மை மொழி செப்பு மவனே - மெய் வார்த்தையைப் பேசுபவனே, சோதரன் - உண்மை யான சகோதரன் ஆவான், வளம் மிகுந்த - சொல் நயம், பொருள் நயம் முதலியவைகள் அதிகரித்துள்ள, தொல்நூல்-பழைய சாஸ்தி ரங்களினது, கரை தெரிந்து - முடிவை அறிந்து, உறுதி மொழி சொல்லும் அவனே - கடைப் பிடிதற்குரிய முக்கிய அர்த்தத்தை விளக்கி வைப்பவனே, குரவன் ஆம்-ஆசாரியனும், சொன்ன நெறி- ஆசாரியா காட்டிய மார்க்கத்திலிருந்து, தவருமல் - நீங்காமல், வழி பாடு செய்துவரும் - தொண்டு பூண்டுவரும், தூய்யனே - சுத்த சீல முடையவனே, இனிய சீடன்-நல்ல சீடனுவான்.

சிறுமையிற் பெருமை = தாரித்திர தசையிலும் செல்வாக்கைக் காட்டுதல்

43. (ப - ரை). விபூதியால்-திருநீற்ருல், சுரத்தினை—சுரப் பிணியை, மாற்றி-ஒழித்து, உடல் குளிரவைத்த-தேகமானது குளி ரும்படிவைத்த மெய்ஞ்ஞான முதலே-தத்துவஞானத் தலைவனே, மயிலேறி......குமரேசனே—, சேற்றில்—, பிறந்திடும்-முளைக்கும் படியான, கமல மலர்-தாமரைப் புஷ்பமானது, கடவுளது-சுவாமியி னுடைய, திருமுடியின்மேல் இருக்கும்-பெருமை பொருந்திய சிர சின்மேல் பொருந்தியிருக்கும், திகழ்-பிரகாசமுள்ள, சிப்பி உட

வில் - சிப்பியினிடமாக ஜனித்தமுத்து - உண்டாகிய முத்தானது, அரசரது-ராஜாக்களின், மேல் இருக்கும்-(ஆபரணமாக) உடம்பின் மேல் இருக்கும், போற்றியிரு-(ஜனங்களால்) கொண்டாடப்படு கிற, பூச்சியின் வாயில்-பட்டுப்பூச்சியின் வாயிலிருந்து வரும்படியான, நூல்-நூலானது, பட்டு என்று - பட்டு என்று கருதப்பட்டு, பூசைக்கு-ஆராதனைக்கு, நேசம் ஆகும்-பிரியமாகும், புகலரிய-சொல்லுதற்குக் கூடாத, வண்டு எச்சில் ஆன—வண்டின் எச்சிலாகிய, தேன் - தேனானது, தேவர் கொள—தேவர்கள் அங்கீகரிக்கும்படியான, புனித—பரிசுத்தமாகிய, அபிடேகம் ஆகும்-அபிஷேகஞ் செய்ய உதவும், சாற்றிய—சொல்லப்பட்ட, புலால் ஒடு - மாமிசத்துடன், பிறந்த—உதித்த, கோராஜனை—கோராஜனையும், சவ்வாது - ஜவ்வாதும், புழுகு-புனுகும், அனைவாக்கும் ஆம்—எல்லோருக்கும் பயன்படும், ஜாதி ஈனத்தில்—இழிந்த குலத்தில், பிறக்கினும்—பிறந்தாலும், கற்றோர்கள்—படித்தறிந்தவர்கள், சபையின்—கல்விச் சபையினிடத்து, மேல்வட்டம் அன்றோ—மேலான ஆசனத்தில் இருப்பரல்லவா

கடை நிலத்தோராயினும் கற்றுணர்ந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும். என்னும் பொய்யாமொழி இவ்விடத்தில் கருதத்தக்கது. ஆசிரியர் தமக்கு நேர்ந்த சுரப்பிணியை ஒழித்தருளிய முருகக் கடவுளின் திருவருளை வியந்து மாற்றிச்சுரத்தினை...... ஞானமுதலே என்றார்.

செயத்தகாதவை=செய்தற்குத் தகுதியாகாதவை

44 (ப — ரை.) வாணாடு — தேவலோகமானது, புகழும் புகழும்படியாகிய, ஒரு—ஒப்பற்ற, சோணாடு—சோழதேசமானது, தழைய இவண் வந்து அவதரித்த—செழிக்கும்படி இவ்விடத்தில் வந்து அவதரித்தருளிய, முதலே—சுவாமியே, மயிலேறி......குமரேசனே—, தான் ஆசரித்து வரு—தான் வழிபட்டு வருகின்ற, தெய்வம் இது என்று—கடவுள் இதுதானென்று, பொய் சத்தியம்—, செயில்—செய்தால், விடாது—பொய் சத்தியம் செய்தவனை சும்மா விடாது, தன் வீட்டில்-தன்னுடைய வீட்டில், ஏற்றிய—ஏற்றி வைத்த, விளக்கு என்று—விளக்கு தானே என்று, முத்தந்தனை

கொடுத்தால்-மூதாதமிட்டால், அது சுடும்-, ஆனாலும்-ஆகிலும், மேலவர்கண் – பெரியோர்களிடம், மெத்தவும் - மிகுதியும், தனது என்று-தனக்கு உரியதென்று நினைத்து, அடாதது செயல்-தகாததைச் செய்தால், கெடுதி ஆம்-கெடுதியாகும், ஆனை தான்-ஆனையானது, மெத்த-மிகுதியும், பழக்கமானாலும்-பழக்கப்பட்டதாயிருந்தாலும், செயாது செய்தால்-கெடுதியைச் செய்தால், கொன்றிடும்-அது செய்தவனைக் கொல்லும், தீன் ஆனது-உணவானது, இனிது என்று-இனிமையாயிருக்கிறதென்று, மீதூண விரும்பினால்-மிகுதியும் விரும்பி உண்டால், தேக பீடைகளே-சரீர வியாதிகளையே, தரும்-அது கொடுக்கும், சனு சன்ன-சுகிதம் என்று, வலாத-தகாத, காரியம்-காரியங்களை, செய்தால்-, ஜெகராஜர்-உலகையாளும் அரசர்கள், மனம்பொறார்-மனம் பொறுக்கமாட்டார்கள், காண-அசை.

'நிற்கும் கழியான் பேர் இரையான் கண் நோய்.' என்றும் 'மீதூண் விரும்பேல்' என்றும் வருகிறபடி இங்கும் 'தீனை .... பீடைகளே தரும்' என்றார். துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து அரசர்க்கு முறைமையாதலின், 'ஜெகராஜர்.... ..மனம் பொறார்' என்று கூறினார்.

நடுவுநிலைமை—ஒரு தலைச்சார்பின்றி நடத்தல்

45. (ப – ரை). அன்று—அக்காலத்தில், மைந்தன் என—புத்திரன் என்று, உமை-உமாதேவி, முலைப்பால் கொடுத்திட—ஸ்தனப் பால் கொடுக்க, வளர்ந்து அருள்—வளர்ந்து அருள் செய்த, குழந்தை வடிவே—குழந்தை உருவத்தைக் கொண்டவனே, மயிலேறி...... குமரேசனே—, வந்த விவகாரத்தில்-தீர்ப்பு செய்யும்பொருட்டு கொண்டு வந்த வழக்கில், இனிய பரிதானங்கள் வரும் என்றும்—நல்ல வெகுமதி கிடைக்கும் என்றும், நேசர் என்றும்—ஆப்தர் என்றும், வல் பகைஞர் என்றும்—கொடிய விரோதி என்றும், அயலோர் என்றும்—அந்நியர் என்றும், மிக்க தனவான் என்றும் - அதிக பணக்காரன் என்றும், ஏழை என்றும்—தரித்திரன் என்றும், (ஆகிய) இந்த வகையைக் குறித்து-இந்தத் தன்மைகளை எண்ணி, ஒரு பட்சபாதம்-ஒருதலைச் சார்பாக (ஒருவர் பக்கமாக நியாயத்தீர்ப்பு செய்ய)

ஞர் எள் அளவும் — ஒரு சிறிதும், உரைததிடாமல் — சொல்லாமல் (தீர்ப்பு செய்யாமல்), எண்ணம் உடனே — வாதி பிரதிவாதிகளின் நோக்கத்திற்கும், லிகிதபுத்தி ஒடு - தஸ்தாவேஜின் ஆதாரங்களால் அறியப்படும் விஷயத்திறதும், சாக்ஷிக்கும் — சாக்ஷிகள் சொன்ன வாக்கு மூலத்திற்கும், ஏற்க — பொருந்த, சபா — நியாய சபையில், சமதமா - (இருக்கின்ற எல்லோர்க்கும்) சம்மதமாகும்படி, முந்த முன்னதாக, இருதலேயும் சமன் செய்த கோல்போல — (தான் ஒ (பக்கதறிலும் சாயாமல பின்புறம் வைக்கும் பாரத்திற்கு உள்ளபடி நிறையைக் காட்ட) சமமாய் நின்ற தராசுக்கோல்போல, மொழிந்திடில் — தீர்ப்புச் சொன்னால், தர்மம் அது — அதுதான் தர்மமாகும், மூலி—பராக்கிரமமுடைய, வீமன் — வீமசேனனது, உடல்—சரீரத்தில், பாதி—பாதிபாகம், மிருகத்தனகது என்று—புருஷா மிருகத்திற்குரியது என்று, முன்னே-முற்காலத்தில், தருமர்—தரும புத்திரர், சொன்னது அலவோ — சொன்னது நியாயம் அல்லவா. "சமன் செய்து சீர்தூக்குங்கோல்போ லமைந்தொருபால், கோடாமை சான்றோர்க்கணி" என்னும் திருக்குறள் இங்கு கவனிக்கத்தக்கது.

வீமன் உடல் பாதி மிருகந்தனக்கென்று தருமர் சொன்ன கதை

தருமர் செய்த அச்வமேததிற்குப் புருஷா மிருகததைப் போய் அழைததபோது அது காதம் முன்னே சென்றால் வருகிறதாகவும் அல்லாவிடில் அவனையே கொன்று தின்பதாகவும் சொன்னது. அதற்கு உடன்பட்டு, அவன் கல்விட்டெறிந்து சிவாலயம் தீர்ததம் முதலிய உண்டாக்கி முன்செல்ல மீண்டும் புருஷா மிருகம் சமீபத்தில் வந்துவிட்டதைக் கண்டு அநேக கற்கள் எறிந்து முன் சென்று தம் நாட்டில் ஒருகாலும் புருஷா மிருகதெல்லேயில் ஒருகாலும் வைக்கையில் மிருகம் பிடித்துக்கொண்டது. இதை தருமர் முன் நியாயம் கூறி அவர் தீர்ப்பின்படி புருஷா மிருகத்திற்கு பாதி சரீரம் அளித்து, தருமருக்கு முன் சுவர்ககமடைந்தான்.

பக்ஷபாதம்—ஒரு தலைச்சார்பு

46. (ப - ரை.) வாரம் உடன் — அன்போடு, அருணகிரி நாதருக்கு, அநுபூதிவைத்து எழுதி—கந்தர் அநுபூதி என்னுஞ் செய்யுளை எழுதிவைதது, அருள் — அருள்செய்த, குருபரா — குருபரனே

மயிலேறி..... குமரேசனே—, வந்தவர் முகம் — தீர்ப்புக்காக வந்தவருடைய முகத்தைப் பார்த்து (தாரதரத்தை நோக்கி), ஓரம் விவகாரமா(ய்)—வழக்கை ஒருதலைச் சார்பாக, உரைப்போர்—தீர்ப்பு சொல்லுவோர், மலைக்குரங்காம்—மலையில் வாசஞ்செய்யும் குரங்குக்கு ஒப்பாவர், அவர் இல்லம் — அவர் குடியிருக்கும் வீட்டில், உயர்வெள் எருக்கு — ஓங்கிவளரும் வெள்ளெருக்கஞ்செடி, உடன் — உடனே, முளைத்து விடும்-, உறையும் - வாசஞ்செய்யும்படியான, ஊர்-, பாழ்நத்தம் - பாழான கிராமதத்திற்கு, ஆம் - ஒப்பாகும, தாரணியில் - பூமியில், இவாகள்கிளை-இவாகளது சுற்றததார், நெல்லி இலைபோல்-நெல்லி மரத்தினது இலைகள் உதிர்ந்துபோவதுபோல, உகும் - அழிந்துபோவார், சமானம் ஆ(க)-ஒரே மாதிரியாக, எழுபிறப்பும் - எழுவகைப்பட்ட பிறப்பில், சந்ததிஇலாது - புத்திரசந்தானம் இல்லாமல், உழல்வர் - சுழன்றுதிரிவர், அவர் முகத்தினில் - அவரது முகததில், மூத்த தையலே - மூதேவியே, குடியிருப்பாள் - வாசஞ்செய்வாள், புவிமங்கையும் - பூதேவியும், இவர்பாரம் என்று - இவர் தாங்கமுடியாத பெரிய சுமை என்று, நடுங்குவாள் - அஞ்சுவாள், பழித்த - பழிததற்கான, துரமரணம் ஆவார் - அகால மரணத்தை அடைவர், பகர் - சொல்லப்படும், முடிவிலே - கடைசி காலத்திலே, (மறுமையிலே) ரவுரவாதி நரகத்து - ரௌரவாதி நரகத்தில், எப்போதும் - எக்காலத்திலும், அனுபவிப்பர் - துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள், என்பார் - என்று சொல்லுவார்கள் பெரியோர்.

"வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலிபடருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன்குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை"

என்னும் செய்யுளினது கருத்து இங்கு அமைந்திருத்தல் காண்க.

அருணகிரி நாதர் கந்தர் அநுபூதி பாடிய கதை

பட்டினத்தடிகளின் புத்திரராய் உதித்து தமக்கையிடம் வளர்ந்து வருகையில் விஷய இச்சையில் சிக்குண்டு திரிந்ததை

தமக்கையார் கண்டித்தது கண்டு, திருவண்ணாமலையில் வல்லாள ராஜனால் கட்டப்பட்டுள்ள கோபுரத்தின்மீது ஏறி கீழ்விழுந்து உயிர் போக்கிக்கொள்ளத் துணிந்தனர். அப்போது குமாரக் கடவுள் ஒரு துறவிபோல் அவருக்குத் தரிசனம் தந்து சடாக்ஷர மந்திரத்தை உபதேசித்து கந்தர் அனுபூதி என்னும் ஒரு பிரபந்தத்தை பாடவைத்து அருள் செய்து போயினர் என்பது.

அளவுபடாதவை = அளவிட்டுச்சொல்ல முடியாதவை

47. (ப-ரை.) வாரிசமடைந்தை - தாமரை மலரில் உதித்த லட்சுமியானவள், குடிகொண்ட - வாசஞ்செய்யும (மார்பையுடைய), நெடுமாலுக்கு - விஷ்ணுமூர்த்திக்கு, மருகன் எனவந்த முருகா - மருமகனென்று சொல்லும்படிவந்த முருகனே, மயிலேறி ......குமரேசனே-, வாரி - கடலின் ஆழத்தையும், புனல்எரியும் - அருவி நீரைச் சொரிகின்ற, மலைகளையும்-, மானிடர்கள் - மனிதர்களின், ஜனனத்தையும் - பிறப்பையும், மன்னவர்கள் - அரசர்களது, நினைவையும் - எண்ணத்தையும், புருஷா யோகங்களையும் - ஆண் மககளின் யோக பலன்களையும், வானின்-ஆகாயததின், உயர் நீளத்தையும - உயாந்துள்ள நீட்சியையும், பாரில - பூமியில், எழு - உண்டாகிய, மணலையும்-, பல ஜந்துக்களையும - அநேக வகையான ஜீவராசிகளையும், படி ஆண்ட மன்னவரையும் - உலகத்தை ஆண்ட அரசர்களையும், பருப்பதத்தின் - மலையின், நிறையும் - இடையையும், ஈசுர செயலையும் - கடவுளின் சிருஷ்டியையும், பனி - பனியும், மாரி - மழையும், பொழி - சொரியும்படியாகிய, துளியையும் - நீர்த் துளிகளையும், சீரிய - மேலான, தமிழ்புலவர் - தமிழ் வித்துவான்களது, வாகிலஎழு - வாக்கினின்றும் வருகின்ற, கவியையும் - பாடல்களையும், சிததர்தமது உள்ளத்தையும் - சித்துப்புருஷர்களின் மனதையும், தெரிவையர்கள் - பெண்களது, சிநதையையும் - கருத்தையும், இவ்வளவு எனும்படி - இந்த அளவைக்கொண்டதென்று சொல்லும்படி தெரிந்து - உணர்ந்து, அளவிடக்கூடுமோ - அளவு ஏற்படுத்த முடியுமோ (முடியாது)

‘ஈசன் மேனியை ஈரைந்து திசைகளை யீண்டிவ்
வாசில் சேனையை ஐம்பெரும் பூதத்தை அறிவைப்

பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை
வாசமாலையா யாவரே முடிவு எண்ணவல்லார் '

என்னும் இராமாயணச் செய்யுள் அறிதற் பாலதாம்.

மானம் விடாமை - மானத்தைக் காப்பாற்றுதல்

48. (ப-ரை.) மனதார-முழுமனதுடனே, உனது அடைக்கலம் என்ற - நீயே தஞ்சமென்று அடைந்த, கீரற்கு - நக்கீரருக்கு, வன்சிறை-வலிய சிறை வாசத்தை, தவிர்த்த-நீக்கிய, முருகா-முருகப் பெருமானே, மயிலேறி.....குமரேசனே-, கற்றூண் - கல் ஸ்தம்பமானது, கனபாரம் எறில - மிகுந்த பளுவானது எறினால், பிளந்திடுவது அன்றியே - (இரண்டாய்) உடைந்து போகுமே 'யல்லாமல், வளைந்திடாது - வளைந்து கொடுக்காது, கருதலர்களால் - பகைவர்களால், உடைந்தாலும் - தோற்கடிக்கப் பட்டாலும், உயிர் அளவிலே-உயிருள்ள பரியந்தம், கனசூரன் நல்ல போர் வீரன், அமரில்-யுத்தத்தில, முறியான்-பின்வாங்கான், தினம்-பிரதி தினமும், ஒரு இடுக்கண் வந்து உற்றாலும்-கொடிய ஆபத்து வந்து நேர்ந்தாலும், ஜீவன் அளவில்-பிராணன் உள்ளவரையில், வேங்கை-வேங்கைப் புலியானது, தோல் கொடாது - தன்னுடைய தோலைத் தராது, திறம் ஆன-நிலையான, பெரியோர்-பெரியவர்கள், சரீரங்கள் போகினும் - தங்கள் தேகங்கள் அழிந்தாலும், செப்பும் - சொலலப் பட்ட, முறை-நியாய நெறியினின்றும், தவறிடார்கள்-தப்பி நடவார்கள், வனம் எறு - காட்டில் சஞ்சரிக்கின்ற, கவரி மா - கவரி மானானது, உயிர் போகும் அளவும் - தன் உயிர்போகு மட்டும், தன் மயிரின் ஒன்றும் கொடாது - தன் மயிரில் ஒன்றையும் தராது, வாராத-சம்பவிக்கக் கூடாத, ஆபத்து - துன்பமானது, வருகினும் - வந்தாலும், கற்புடைய மாது - பதிவிரதா தர்மத்தைக் கொண்ட பெண் மகள், நிறைதவறி நடவாள் - தனது கற்பினின்றும் பிசகி ஒழுக மாட்டாள்.

"கற்றூண் பிளந்திறுவதல்லாற் பெரும்பாரந் தாங்கின் தளர்ந்து வளையுமோ," "கவரிமான் மயிரின் கற்றை, வெற்புறு வேங்கையின்றோல் - வீரன்கை வெய்ய கூர்வேல் அற்பர்தம் பொருள் கடாமும். அவரவரிறந்தபின்னே பற்பலர்கொள்வாரிந்தப் பாரினி லுண்மைதானே." இப்பாடல்கள் இங்கு உணரத்தக்கவை.

வனம் ஏறு - அழகுநிறைந்த எனினும் ஒக்கும். ஒரு பூதத்தால் கவர்ந்தேகப்பட்டு மலைக்குகை ஒன்றில் சிறைவைக்கப்பட்ட நக்கீரர் முருகப்பெருமானது திருவருளால் அச்சிறைவாசம் தவிர்ந்து பாதுகாக்கப்பட்டமையின் 'மனதார தவிர்த்த முருகா' என்றார்.

திருஅருள் மகிமை=இலட்சுமி கடாட்சத்தினால் வரும் சிறப்பு

49. (ப - ரை) மயிலேறி........குமரேசனே—, திருமகள் கடாட்சம் உண்டானால் - இலட்சுமியினது கடைக்கண் பார்வை கிடைக்கப்பெற்றால், சிறப்பு உண்டு - மேன்மை உண்டு, கனதை - பெருமை, உண்டு - உண்டாகும், சென்றவழி எல்லாம் - போன இடம் எல்லாம், பெரும் பாதைஆய்விடும் பெரிய மார்க்கம் ஆகிவிடும், செல்லாத வார்த்தை-அங்கீகரிக்கப்படாத சொல்லும், செல்லும் - அங்கீகரிக்கப்படும், பொருள் - எந்த வஸ்துவும், ஒரு துரும்பு - ஒரு துரும்புக்கு சமானமாகும், மரியாதைஆம் - எவ்விடத்தும் மரியாதை கிடைக்கும் - செல்வமோ, ஐஸ்வரியங்களோ, புகல் - மேலாகச் சொல்லப்படும், பெருக்கு ஆறுபோலாம் - ஆற்று வெள்ளத்தைப்போல அதிகரிக்கும், புவியில - பூமியில, முன்கண்டு மதியாதபேர் - (இலட்சுமியினது கடாட்சம் உண்டாவதற்கு) முன்பு பார்த்து மதிக்காதவர்களும், பழகினவர்போலவே - பழகினவர்களைப்போலவே, நேசம் ஆவார் — சிநேகம ஆவார், சாதியில் - குலாசாரத்தில, பெருமையொடு - சிறப்புடனே, உயர்ச்சிதரும் - மேன்மையைக் கொடுக்கும், அனுதினம் - நாள்தோறும, பேரும் - கீர்த்தியும், ப்ரதிஷ்டையும் - உலகப் பிரசித்தமும், உறும் - உண்டாகும், பிரியம்ஓடு - அன்புடனே, பகையாளிகூட-விரோதியும், உறவாகுவான்—, பேச்சினில் - பேசும் வார்த்தைகளில், பிழை வராது—, வரும் என - சித்திக்கும் என்று, நினைத்தபொருள்-எண்ணியபொருள்கள், கை கூடிவரும்—, அதிக-மிக்க, வல்லமைகள்-சக்திகள், மிகவும்-விசேஷமாக, உண்டாம்-உண்டாகும்.

நட்பு நிலை=சிநேக நிலைமை

50. (ப-ரை). மதிலுடன்-பிரகாரங்களுடனே, கோபுரமும்-மேற்கோபுரங்களும், வாவியும்-தடாகமும், புடைசூழ பக்கங்களில்

சூழ்ந்து நிற்க, மருவு-பொருந்திய, சோணாட்டு அதிபனே-சோழ தேசத்துக்கு அதிபனே, மயிலேறி.....குமரேசனே-, கதிரவன்-சூரியன், உதிப்பது-உதயமாவது, எங்கே-எவ்விடத்தில், நளினம் எங்கே-தாமரை மலர் இருப்பது எவ்விடத்தில் (வெகுதூரம் இருந்தும் தாமரையானது சூரியனைக்கண்டவுடன) உளம் களித்து-மனம் சந்தோஷித்து, மலர்ந்தது என்ன-என் மலரவேண்டும், கார் மேகம் - கரியமேகமானது, எங்கே - எவ்விடத்து உளது, பசுந் தோகை - பச்சைமயில், எங்கே - எங்கிருக்கிறது (தூரமிருந்தும் மேகத்தைக் கண்டவுடன் மயிலானது) கருத்தில-மனதில், நட்பு ஆனது என்ன-நேசங்கொண்டு ஆடுவது யாது காரணம, மதியம்-சந்திரன், எங்கே-எங்கிருப்பது, பெருங்குமுதம் - பெரியகுமுதமலரானது, எங்கே-எங்குண்டு (மிக்க தூரத்தில் இருந்தும சந்திரனைக் கண்டவுடன் குமுதமானது) முகம் மலர்ந்து-, மகிழ்கொண்டது என்ன-சந்தோஷம் அடைந்தது எக்காரணம் பற்றி, வல் இரவு, வலிய இராக்காலமானது, விடிவது எங்கே-கழிவது எப்போது, கோழி எங்கே-சேவல் இருப்பது எவ்விடம (அவ்வாறு இருந்தும் பொழுது விடியும் ஜாமத்தைக் கண்டு சேவலானது) மகிழ்ந்து-சந்தோஷித்து, கூவிடுதல என்ன-என் கூவவேண்டும், (இவையாவும் ஒன்றுக்கொன்றுள்ள நிலையான சிநேகத்தினால் அன்று; அது போல), நிதி அரசர்-ஐஸ்வரியங்களையுடைய அரசர்கள, எங்கே இருந்தாலும்-எவ்விடத்தில இருந்தபோதிலும், அவர்கள் ஒடு - அவர்கள் உடனே கொண்ட, நேசம்-சிநேகமானது, ஒன்றாய் இருக்கும-ஒரு தன்மைப் பட்டிருக்கும், நீதி மிகு-நியாயத்தில் மிக்க, நல்லோர்கள்-நல்லவர்கள், எங்கிருந்தாலும் —, அவர்-அவர்கள் கொண்ட, நிறைபட்சம்-பூரணமான அன்பை, மறவார்கள-ஒருபோதும் மறக்க மாட்டார்கள். காண் அசை.

“ மங்குலம்பதினாயிரம் யோசனைமயில்கண்டு நடமாடும்
தங்குபானு நூறாயிரம்யோசனை தாமரைமுகம்விள்ளும்,
திங்களாதவற்கிரட்டி யோசனையுறசிறந்திடு மரக்காம்பல்,
எங்குனாயினு மனபராயிருப்பவ ரிதயம் விட்டகலாரே.”

என்னும் செய்யுள் இங்கு அறிதற்பாலதாம்.

காலம் அறிதல்=அநுகூல மானகால முணர்ந்து வினை செய்தல்

51. (ப-ரை) மயிலேறி ......குமரேசனே-, காகம் - காக்கை யானது, கூகையை - கோட்டானை, பகற்காலம் - பகற்காலத்தில், வென்றிடும் - ஜெயிக்கும், கனகமுடி - பொன் கிரீடத்தை யணிந்த, அரசர் தாமும்-ராஜாக்களும், கருது-எண்ணத்தக்க, ஜயகாலம் அது கண்டு-ஜயம் அடைதற்கு அநுகூலமான காலத்தைக் கண்டறிந்து, அந்த வேளையில் - அந்த சமயத்தில், காரியம் - தங்கள் காரியங்களை, முடித்து விடுவார்-, மேகமும்-மேகங்களும், காரகாலம் அது கண்டு-மழைக்காலத்தைக் கண்டறிந்து, பயிர் விளைய - தானியங்கள் விளையும்படி, மேல்மேலும் - மிகுதியாக, மாரிபொழியும் - மழையைப் பெய்யும், மிக்கான - மேலான, அறிவுள்ளோர் - அறிவுடையவர்கள், மிடியாளருக்கு-தரித்திரருக்கு, வருதருணகாலத்தில் - அவர்கள் வருகின்ற அந்த சமயத்திலேயே, உதவுவார் - உதவுவார்கள்; நாகரிகம் உறு-நாகரிகம் பொருந்திய, குயில்-குயிலானது, வசந்தகாலத்திலே-, நலமென்று - சுகமென்று கருதி, உகந்து - சந்தோஷித்து, கூவும் - கூவாநிற்கும், நல்லோர்-உத்தமர், குறித்ததை - எண்ணியதை, பதறாமல்-ஆத்திரப்படாமல், அந்தந்த நாளையில்-(எந்தெந்த நாளில் எவ்வெக் காரியம் முடிக்கவேண்டுமோ) அந்தந்த நாட்களில், முடிப்பர் நிறைவேற்றுவார்கள், வாகு - அழகை, அனைய - ஒத்த, காலை - இளமைப் பருவமானது, கனம்-(அறஞ் செய்வதற்கு) உறுதியென்றும், மாலை-முதுமைப் பருவமானது, புல் எனும் - அற்பமென்றும் சொல்லும், உலகவாடிக்கை-உலகவழக்கு, நிஜம் அல்லவோ-உண்மை அல்லவா.

* வசந்தகாலம்-சித்திரை வைகாசியின் பருவம். வாகனைய காலைகல் மாலைபுல் என்றும் பாடம். கல் - உறுதி. "பகல் வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது." இத்திருக்குறள் இங்கு அறிதற்பாலது.

இடனறிதல்=ஜயமடைதற்கு அநுகூலமான இடத்தைத் தெரிந்து கொள்ளுதல்

52. (ப-ரை.) மயிலேறி......குமரேசனே-, தரை அதனில் - பூமியில், ஓடுதேர் - ஓடும்படியான ரதமானது, நீள்கடலில் -

பெரிய சமுத்திரத்தில், ஓடுமோ - ஓடாது, சலதியிசை - கடலி னிடத்து, ஓடு - செல்லும்படியாகிய, கப்பல் - கப்பலானது, தரை மீதில் ஓடுமோ - பூமியின்மேல் ஓடுமா - (ஓடாது), தண்ணீரில் உறு - ஜலத்தில் வசிக்கும், முதலை தன் முன்னே - முதலையின் எதி ராக, கரி நிற்குமோ - யானை நிற்குமா (நிற்காது) விரைமலர் - வாசனை பொருந்திய புஷ்பங்களை அணிந்த, முடிபரமர் - முடியை யுடைய சிவபெருமானது, வேணி அரவினைவெல்ல - சடாபாரத்தி லுள்ள சர்ப்பத்தை ஜெயிப்பதற்கு, மிகு கருடனால் ஆகுமோ - வலி மிகுந்த கருடனால் ஆகுமா (ஆகாது), வேங்கைகள் - புலிகள், இருக்கின்ற - சஞ்சரிக்கின்ற, காடுதனில் - காட்டில், அஞ்சாமல் - பயப்படாமல், வேறு ஒருவர் செல்ல வசமோ - வேறு எவரேனும் போவதற்கு சாத்தியமாகுமோ (ஆகாது), துரைகளை - பிரபுக்களை யும், பெரியோரை - பெரியவர்களையும், அண்டி - சேர்ந்து, வாழ் வோர்தமை - ஜீவிப்பவர்களை, துஷ்டர்பகை-துர்மாக்கர்களுடைய விரோதம், என்ன செய்யும் - யாது செய்யக்கூடும் (ஒன்றுமில்லை), துணைகண்டு - உதவி அறிந்து, சேர் இடம் அறிந்து சேர் என்று - சேரத் தகுந்த இடத்தை அறிந்து சேரக்கடாய் என்று, ஔவை சொன்ன கதை - ஔவையார் சொல்லியுள்ள பழமொழி, பொய் யல்லவே - நிஜமல்லவா, பஞ்சவர்கள் - பாண்டவர்கள் ஐவரும், வன்போர் - வலிய பாரதயுத்தத்தை, செயித்தது-வென்றது, வரை - புள்ளாங்குழலை, ஊது - ஊதுமபடியாகிய, மாயனை - கண்ண பிரானை, அடுத்தலால் - சேர்ந்ததினாலே, அன்றோ - அல்லவா?

கருடன் சர்ப்பத்தால் பங்கமுற்ற கதை

ஒருகாலத்தில் கருடன் கைலயங்கிரிக்குச் சென்றபோது அங்கு சிவமூர்த்தியினிடம் இருந்த பாம்பானது கருடனை நோக்கி, "கருடா! சுகமா?" என்று கேட்டது. இதையறிந்த கருடன், இருக்கத்தக்க இடத்திலிருந்தால் எவரும் சுகமாயிருப்பார்கள் என்று பதிலளித்துத் திரும்பினன என்பது.

வேட்டகத்து இகழ்ச்சி=ஒருவன் தான் கலியாணஞ் செய்து கொண்ட பெண்ணினது தாய் தந்தையர் வீட்டில் அநேக நாள் தங்கி இருப்பதனால் உண்டாகும் அவமரியாதை

53 (ப-ரை) மயிலேறி..... குமரேசனே-, வேட்ட அகம் தன்னிலே-கலியாணம் செய்துகொண்ட பெண்ணின் தாய் தந்தையரது வீட்டில், மருகன்-மருமகன், வந்திடும் அளவில்-வந்திருக்குங் காலத்தில், மேன்மேலும் உபசரித்து - அதிகமாய் மரியாதைகள் செய்து, விருந்துகள் சமைத்து - சிறந்த உண்டிகள் சமைத்து, நெய் பால் தயிர் பதார்த்த வகை-நெய் பால் தயிர் பதார்த்தங்கள் முதலிய, வேண்டுவ எலாம்-வேண்டியவைகளை எல்லாவற்றையும், அமைப்பார்-, இடுவார்கள், ஊட்டம் மிகு-மிகுதியும் புஷ்டியைத் தரத்தக்க, வர்க்க வகை-பலகார விதங்களை, செய்து இடுவர்-செய்து வைப்பர், உறுதியாய்-நன்றாக, தைலம் இட்டு-எண்ணெய் தேய்த்து, முழுகுவிப்பர்-ஸ்நானம் செய்விப்பர், ஓயாது-இடைவிடாமல், தினவே-அருந்துவதற்கு, பாக்கு இலை கொடுத்திடுவர் - வெற்றிலை பாக்கு கொடுப்பார்கள், உற்றநாள் - தங்கிய நாளகள், நால ஆகிலோ - நான்காய் விடின், நாட்டம் ஒருபடி இறங்குவது போல - பிரியமானது படிப்படியாக குறைந்துகொண்டே வருவது போல, மரியாதை - மரியாதையும், நாளுக்கு நாள-, குறைவு உறும்-குறைந்து வரும். மைத்துனர்கள்-, நகை செய்வா - பரிகாசம் செய்வார்கள், மாமி - மாமியானவள், அலுவலபார் - உத்தியோகததைத் தேடிப்பார், போ-, என்று-, நாணாமல் - கூசாமல, சொல்வாள-, வாட்டம் மனையாள் - மெலிவு அடைந்த பெண்டாட்டியும், ஒருதரமாய் - அலட்சியமாய், மதிப்பள்-எண்ணுவாள், அவன் - (இத்தகைய அவமானத்தை அடையும்) அவன், மட்டியிலும் மட்டி அன்றோ-மூடனிலும் மூடன் அல்லவா?

செல்வம் நிலையாமை=பொருள் ஓரிடத்தும் நிலை பெறாமை

54. (ப-ரை) மயிலேறி......குமரேசனே-, ஓடம் இடும் இடம் அது - தோணிகளைச் செலுத்தும்படியான நீருள்ள இடத்திலிருக்கும், மணல்-மணலும், சுடும்-நீர்வற்றிச் சுடும்படியான இடம் ஆகும், சுடும் இடமும் - அவ்வாறு சுடும்படியான இடத்திலேயும்,

ஓடம் மிகவே நடக்கும்-(மணல் பூமி நீர்நிறைந்த இடமாகி) தோணி நன்றாகச் செல்லும், உற்றது ஓர் ஆற்றின் மடு - பொருந்திய ஒரு ஆற்றினது உட்பள்ளம், மேடு ஆகும-மேடாகிவிடும், மேடு எலாம்-மேடாயிருந்த இடமெல்லாம், உறுபுனல்கொள்-மிக்க நீர்கொண்ட, மடு ஆய் இடும்-மடு ஆகிவிடும, நாடு காடு ஆகும் - செழிப்பாயிருந்த ஒருதேசமானது காடாய் விடும், உயர் காடு - பெரிய காடும், நாடு ஆகிவிடும், நவில் சகடு-சொல்லப்பட்ட வண்டியின் சக்கரம், மேல் கீழதாம் - மேலும் கீழுமாகச் சுழலும், நடை ஊறு - மனிதர்கள் நடமாடுகின்ற,பலசந்தை-அநேகரு சந்தைக்கூட்டங்களா, கூடும்-சேரும், உடனே கலையும் - அககூட்டங்கள் உடனே கலைந்துவிடும், நல் நிலவும் - நலல நிலாக்காலமும், இருள் ஆயவிடும் - இருளா ஆகிவிடும், நீடு பகல்போய் பின்பு - மேலான பகறகாலம போனபிறகு, இரவு ஆகும்-இராககாலம் வரும், இரவுபோய்-இராக்காலம் கழிநது, நிறை பகல்போது ஆய்விடும் - சிறந்த பகற்காலம் ஆகிவிடும், நிதியோர்-செல்வததை யுடையவர்கள், மிடித்திடுவர் - தரிததிரா ஆவர், மிடியோர்-தரித்திரர், செழித்திடுவர் - செல்வவந்தர் ஆவர், வாழ்வு-நமது வாழ்வானது, நிஜம் அல்ல-உணமை அல்ல, மாடு-மாடுகளும், மனை-வீடுகளும், பாரி - மனைவியர்களும், ஜனம் - பந்து ஜனங்களும், மக்கள்-பிள்ளைகளும், நிதி-ஐஸ்வரியமும், பூஷணமும் - ஆபரணங்களும், மருவு - பொருந்திய, கனவு ஆகும் அன்றோ - சொப்பனம் காண்பதுபோல் ஆகிவிடும் அல்லவா ?

பிறந்தார் பெறும்பேறு=மக்களாயப் பிறந்தவர் அடையவேண்டிய நலம்

55. (ப - ரை) ஐயா - சுவாமியே, வடகுவடு - வடகதேயுள்ள மேருகிரியானது, கிடுகிடு என - கிடுகிடுவென்று அசையவும, எழு கடலும் - எழுகடல்களும், அலைஎறிய - அலைவீசவும், மணிஉரகன்-மாணிககததையுடைய ஆதிசேடனும், முடிகள் நெரிய - தலைகள் நசிவுற, மயிலேறி.........குமரேசனே -, சடம் ஒன்று எடுத்தால் - ஒருவன் மானிட சரீரம்பெறறால், புவிக்கு - பூமியிலுள்ளவர்க்கு, நல்லவன் என்று - யோக்கியனென்று, சதிருடன் தன்பேர் விளங்க வேண்டும் - சிறப்பாகத் தன்னைச் சொல்லும்படி நடந்துகொள்ள வேண்டும், இது அல்லாது - இது அல்லது, மெய்ஞ்ஞானி என்று

அவதரிக்கவேண்டும் - மெய்ஞ்ஞானியென்று சொல்லும்படி பிறத்தல்வேண்டும், அல்லால் - அல்லது, இவன் -, திடம் இனிய - வல்லமை மிக்க, ரணசூரவீரன் - பெரிய போர்வீரன், என்ன - என்று சொல்லி, திசைமெச்சவேண்டும் - எத்திசையும் கொண்டாடவேண்டும், அலலால் - அல்லது, தேஇனை - கொடு என்று யாசித்தது, வருபவாக்கு - வருமவர்கட்கு, இல்லை என்னுமல் - இல்லையென்று சொல்லாமல், செய்யவேண்டும் - தருமஞ் செய்தல்வேணடும், அல்லால் — அல்லது,' அடைவுடன் - முறையாக, பலகல்வி - அநேகம் கல்விநூல்களை, ஆராய்ந்து - பாாத்தறிந்து, வித்துவான் ஆகவேண்டும் - பண்டிதனாதல் வேண்டும், அல்லால் - அல்லது, அறிவு ஆன - நல்லறிவுடைய, துரைமக்கள் ஆகவாவேண்டும் - பிரபுக்களாகி வரவேணடும், (இவ்வாறு சிறந்துவரின்) இவர் - இத்தன்மையானவர்களே, அதிக பூபாலர்-அரசரினும் மேம்பட்ட அரசரென்று மதிக்கப்படுவர். ஏகாரங்கள் - அசை.

மேற்சொன்னவற்றுள் ஒன்றிலுஞ் சிறவாது பிறப்பவரைச் சுட்டி "இந்தவகையில்லாத மனிதரைக் காசினியில் ஏன்படைத்தாய், கருதுதாய் உதரமும் பார்க்கின்ற பேர்களிருகண்களுஞ் செய்தவினையோ" என்பர் பிறர்

வறுமையிற் சிறுமை=தரித்திரத்தின் கொடுமை

56. (ப - ரை) மயிலேறி......குமரேசனே -, வறுமைதான்-, தரித்திரமானது, வந்திடில் - வந்துசேர்ந்தால், தாய் - பெற்றெடுத்த மாதாவும், பழுது சொல்லுவாள் - குறைகூறுவாள், மனையாட்டி - மனைவியும், சற்றும் எண்ணுள் - கொஞ்சமும் மதிக்கமாட்டாள், வாக்கில் பிறக்கின்ற - வாயினின்றும் வருகின்ற, சொல் எல்லாம் - எல்லா வார்த்தைகளும், பொல்லாத வசனமாய் வந்து விளையும்- கொடிய வார்த்தைகளாய் மாறிவிடும், சிறுமை ஒடு-துன்பத்துடன், தொலையா - நீங்காத, விசாரமே - கவலையே, அல்லாது - உண்டாவதன்றி, சிந்தையில்-மனதில், தைரியம் இல்லை - திடத்தன்மை யுண்டாகாது, செய்ய சபைதன்னில் - மேலான சபையின்கண், சென்று வர-போய் வர, வெட்கம் ஆம்-கூச்சமுண்டாகும், செல்வரை - தனவந்தரை, காணில்-பார்க்க நேரிடின், நாணும் - மனங்கூசும், உறுதி பெறு-வன்மைபெற்ற, வீரமும்-தீரமும், குன்றிடும்-குறையும், விருந்

துவரில்-விருந்தினர்வநதால், உயிருடன் செத்தபிணம ஆம்-உயிரிருந்தது செத்த பிணததிற்கு ஒப்பாயிருக்க நேரும் (நடைபிணம் ஆகயிருக்கச் செய்யும), உலகம் பழிததிடும்-உலகிலுள்ளவர் நிந்திப்பார்கள், முன்பு சென்று-ஏதிராகப்போய, பெருமையோர் ஒருவரொடு, பெருமையுடையா ரொருவருடன், செய்திசொன்றால் - ஏதேனுமொரு சமாசாரத்தைச் சொல்லிடின், (அவர்) மறுவசனமும் - (யாதொரு) பதில்மொழியும், சொல்லார் - சொல்லமாட்டார், தன் பினில் முன்பாக இது-துன்பததினும் துன்பமாகிய இததரித்திரம, வந்து அணுகாது அருளுவாய் - என்னைக கிட்டிவந்து வருத்தாமல் கிருபைபுரிவாய். தான், ஏ-அசை.

"தாங்கொணு வறுமை வந்தாற் சபைதனிற் செல்ல நாணும், வேங்கை போல வீரங்குன்றும் விருந்தினர்க்காண நாணும், பூங்கொடி மனையாட்களுக்கும், புல்லருக்கிணக்கஞ் செய்யும், ஓங்கிய வறிவு குன்றும் உலகெலாம் பழிக்குந்தானே" என்பதும் இங்கறிக.

தீச்சார்பால் நன்மையிழப்பு=துர்ச்சங்கத்தால் நன்மையிழத்தல்

57. (ப-ரை). மானையும் - வள்ளி நாய்ச்சியாரையும், திகழ்-விளங்கும், தெய்வயானையும் - தெய்வானையையும், தழுவும் - கூடும், அணிமார்பனே-அழகிய மார்பையுடையவனே, அருளாளனே - கிருபாகரனே, மயிலேறி.....குமரேசனே-, ஆனை - யானையானது, தண்ணீரில்-ஜலத்திலே, நிழல் பார்த்திட - தனது நிழலைப் பார்க்கும் போது, அங்கே - அவ்விடத்தில், தவளை சென்று - தவளையானது போய், கலக்கி உலவும்-நீரைக் கலங்கவைததுச் சஞ்சரியா நிற்கும், ஆயிரம்பேர் கூடி-, வீடு கட்டிடில்-, ஏதம் அறை-அதற்குக குற்றஞ் சொல்லுகிற, குறளும்-கோளனும், உடனே வரும்-உடனே வந்து சேருவான், வினை-மற்றும், நல் பெரியோர்கள்-நல்ல பெரியவர்கள், போசனம் செயும் அளவில்-அன்ன முணணும்போது, ஈகிடந்து-(போஜனத்தில்) ஈயானது விழுந்து, இசை கேடு அது ஆம்-பழிப்புக்கிடமாகும், இன்பம் மிகு - சந்தோஷம் மிகுந்த, பசுவிலே-பசுவினிடம், கன்று சென்று ஊட்டுதற்கு - கன்றானது போய் பால் குடிப்பதற்கு (முயலும்போது) இனிய கோன்-பசுவைக்காத்தலிற் சிறந்த தலைவனுன இடையன், அது - அதனை, தடுக்கும்-

குடிக்க வொட்டாமற்றடுத்து விடுவான், சேனை மன்னவர் - நால் வகைச சேனைகளையுடைய அரசர், என்ன கருமம் நியமிக்கினும்- எந்தக் காரியத்தை நியமித்தாலும், சிறியோர்களால் - அற்பர்களால், குறைபடும் - அதற்குக குறைவு நேரிடும; சிஙகத்தையும்-, பெரிய ருஷபத்தையும-பெரிய எருதையும், பகைமை செய்தது - விரோதப் படுத்தியது, ஒரு நரி அல்லவோ ?—

நால்வகைச் சேனை-ரதம், கஜம், துரகம், பதாதி.

நரி சிங்கத்தையும் ரிஷபத்தையும் பகை மூட்டிவிட்ட கதை

ஒரு காட்டில் ஒரு சிங்கமும் எருதும் இணைபிரியாத நேசங் கொணடிருந்தன. இதைக கண்ட ஒரு நரியானது அவ்விரண்டின் நட்பையும் பிரிக்கவெண்ணி, அவையிரண்டும் தனித்தனி இரை தேடித் திரிந்துகொண்டிருந்த சமயத்தில் சிங்கத்தினிடம் வந்து எருதைப் பழித்துக்கூறி உன்னை அது இன்று கொல்லத் தீர்மா னித்திருக்கிறது; இன்று மாலை அது உன்னிடம் வரும்போது நீ அதை யுற்றுப்பார்த்தால் அது வரும் தன்மையைக் கண்டே அதன் கருத்தையறிந்து கொள்ளலாம் என்றது. இவ்வாறே அது எருதை யுங் கண்டு சிங்கத்தை யிகழ்ந்துபேசி இரண்டிற்கும் பகையை மூட்டிவிட்ட தென்பது.

இடையூறு உற்றும் பயன் படுபவை=துன்பமடைந்தாலும் உபயோகமாகுமவை

58. (ப-ரை.) மாறுபடு - விரோதங்கொண்ட, சூரசங்கார - சூரபத்மனைச சங்கரித்தவனே, கம்பீரனே - பராக்கிரமனே, வடி வேல் அணிந்தமுருகா-, மயிலேறி......குமரேசனே-, ஆறு - நதியா னது, தண்ணீர் வற்றி விட்டாலும்-, ஊற்று நீர் அமுதபானம் கொடுக்கும் - ஊற்று நீரானது அமுதம் போன்ற குடி ஜலத்தைத் தரும், ஆதவனை - சூரியனை, கட்செவி - (கண்ணையே காதாக வுடைய) பாம்பானது, ஒரு பாதி - சரிபாதிபாகத்தை, மறைத்தா லும் - மறைத்தபோதிலும், அப்போதும் - அந்தச் சமயத்திலும், உதவி செய்வன் - சூரியன் பூமிக்கு உதவிபுரிவான், கூறும் மதி - சொல்லப்படும் சந்திரன், தேய்பிறையது ஆகவே குறையினும் - தேய்பிறையாய்க் குறைந்தாலும், குவலயத்து இருள்

இருளை, சிதைக்கும - ஒழிப்பான், கொல்லைதான் - வயல்நிலம், சாவிபோய்விட்டாலும் - சாவியானாலும், அங்குவரு - அவவிடம் வருகின்ற, குருவிககு - பறவைகளுக்கு, மேசசல் உணடு - இரை யுணடு, வீறுடன் - மிகுந்த பெருமையுடன் கூடிய, உதாரிதான் - கொடையாளி, மிடி ஆனபோதினுலும் - வறுமையடைந்தபோதி லும், மிக - மெத்தவும், நாடி வருபவர்ககு - தனனைக் கருதி வரும வர்க்கு, வகைவேறு இலலை யென்று - உதவும் உபாயம் வேறெது வும் இலலை யென்று, உரையாது - சொல்லாமல், இயன்றது - தன் னுற் கூடியதை, வியநது - மதித்து, உளம மகிழ்ந்து - மனங்க ளித்து, உதவுவான்-, தான் - அசை

"ஆற்றுப்பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா, றூற்றுப் பெருககா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு, நலலகுடிப்பிறந்தார் நல் கூாநதாாானுலு மிலலையென மாட்டாரிசைநது" எனனும் கவியின் கருத்து இஙகு வருதல காணக.

இன்னவர்க்கு இது இல்லையெனல்=இப்படிப்பட்ட தன்மை யவர்க்கு இன்னது இல்லை யெனல்

59. (ப-ரை) வாலிமேல் - வாலி என்பவன்மீது, மார்பு உருவ - அவனது மார்பையும் ஊடுருவிச் செல்லுமாறு, அஸ்திரம் விடுத்த - பாணப்பிரயோகஞ் செய்த, நெடுமால் - விஷ்ணுமூர்த்தி யின், மருகனை முருகா-, மயிலேறி...குமரேசனே-, சார்பு இல் லாதவருக்கு - ஆதரவற்றவர்களுக்கு, நிலை ஏது - நிலையான இடம் இல்லை, முதல் இல்லாதவருக்கு - அசல் இல்லாதவர்களுக்கு, இலா பம் ஏது - லாபம் இல்லை, தயை இலலாதவர்தமக்கு - இரக்கமில்லா தவர்களுக்கு, உறவு ஏது - சுற்றம் இல்லை, பணம் இல்லாதார்க்கு - பணம் இல்லாதவர்களுககு, வேசை உறவு ஏது - வேசியர் நேசம் இல்லை, ஊர் இல்லாதவர் தமக்கு - ஊரில்லாதவர்களுக்கு, அரசு ஏது-இராஜா இல்லை, பசிவேளை உண்டிடார்க்கு உறுதி நிலை ஏது - பசி எடுத்த சமயத்தில் போஜனம் சாப்பிடாதவர்களுக்கு நல்ல திடன் இல்லை, உண்மை இல்லாதவர்க்கு - வாக்கு நாணயம் இல்லா தவர்களுக்கு, அறம் ஏது - தரும சிந்தை இல்லை, முயல்வு இல் லாத குடிக்கு - உழைப்பற்ற சோம்பேறிகட்கு, உறுவது ஒரு செல்வம் தவிற் சிறநத

எது - வரும்படியான பாக்கியம் ஒன்றுமில்லை, சோர்வு இல்லாதவருக்கு - மனத்தளர்ச்சியற்றவர்களுக்கு, மற்றும் ஒரு பயம் எது - பயம் வேறொன்றுமில்லை, சுகம் இல்லார்க்கு - இன்பம் அற்றவர்களுக்கு, ஆசை எது-எதிலும் ஆசை இல்லை, துர்க்குணம் இல்லாதவர்க்கு - கெட்ட குணங்கள் இல்லாத (நல்ல) வர்களுக்கு, எதிராளி எது – பகை இல்லை, இடர்செய் துஷ்டர்க்கு - துன்பத்தைச் செய்யும் தீயவர்களுக்கு, இரக்கம் எது - இரக்கமில்லை, வாலி - இந்திரன் புதல்வன்; சுக்ரீவன் தமையன்.

நற்புலவர் தீப்புலவர் செயல்=உத்தமதுண வித்துவான்களுடையவும் கெட்டதுண வித்துவான்களுடையவும் ஒழுக்கங்கள்

60. (ப - ரை.) மை - மை தீட்டப்பெற்றவையும், காவி - கருங்குவளைமலரை யொத்தவையுமான, விழி - கண்களையுடைய, தெய்வானையும் - தெய்வயானையும், குறவர்வள்ளியும் - குறவர் வளர்த்த வள்ளிநாயகியும், தழுவு - கூடும்படியாகிய, தலைவா - நாயகனே, மயிலேறி......குமரேசனே-, மிக்குஆண-வளம் மிகுதியுங்கொண்ட, சோலையில் சோலையினிடத்தில், குயில்சென்று - குயிலானது போய்ச் சேர்ந்து, விருப்பம்தொடு - பிரியத்துடனே, மாகனி - மாம்பழமானது (எங்கிருக்கிறதென்று), தேடி நாடும் - அக்கினியைத் தேடி யடையவும், மிடை - (கும்பலாய்) நெருங்கியிருக்குஞ் சுபாவமுள்ள, கரும்காகங்கள் - கரியநிறம்வாய்ந்த காக்கைகளோ, எகனி இருந்தாலும் - (அச்சோலையில்) எத்தகைய பழங்களிருப்பினும், வேப்பம் (வேம்பு) கனிக்கு நாடும் - வேப்பங்கனியையே நாடித்திரியும், எக்காலும் - எப்போதும், வரிவண்டு - வரிகளை (கோடுகளை) யுடைய வண்டுகள், பங்கேருகத்தினில் - தாமரைமலரில், இருக்கின்ற - உள்ள, தேனை நாடும் - தேனைவிரும்பி ஆராயும், எத்தனை - எவ்வளவுதான், சுகந்தம்வகை - நல்லவாசனைப் பொருள்கள், உற்றும் - பொருந்தியிருந்தாலும், உருள்வண்டு இனம் - உருண்டுசெல்லும் வண்டின்கூட்டங்கள், அர்மலத்தை நாடும் - துர்க்கந்தமுள்ள மலத்தையே விரும்பியடையும், தக்கோர் - தாம் அறிவுடையோர்கள், பொருள் - சொற்பொருள்களின், சுவை - சுவையும், நயங்கள்-

நயங்களையும், எங்கே என்று பார்த்து - எங்கிருக்கின்றனவென்று ஆராய்ந்து, உகந்து - மகிழ்ந்து, கொள்ளவர் - அவற்றைக் கிரகிப்பார்கள், தாழ்வுஆன - இழிவான தன்மையைக்கொண்ட, வன்கணர் - இரக்கமற்ற துஷ்டர்கள், தமிழில் - தமிழ் நூலகளில, குற்றம் எங்கே என்று - குற்றம் எங்கிருக்கிறதென்று, ஆய்வர் - தேடித் திரிவர் - கண்டாய் - அசை.

வரி - இசைப்பட்டாடு எனினும் ஒக்கும்.

தாழ்தல் பெருமை = வணங்கி நடத்தலால் உண்டாகும் பெருமை.

61. (ப-ரை.) மாஙகனிக்கு ஆக = மாம்பழத்தின் பொருட்டு, அரனை, சிவபிரானை, வலம் அது புரிந்து-வலஞ்செய்து, வளா மத கரிககு-, (பெருமையால்) வளர்ந்த மதத்தைப் பொழிகின்ற யானை முகத்தினையுடைய விநாயகருககு, இளைய முருகா - தம்பியாகிய முருகப் பெருமானே, மயிலேறி.. ...குமரேசனே-, வேங்கைகள் பதுங்குதலும்-, மாமுகில் - கரியமேகங்கள், ஒதுங்குதலும் - ஆகாயத்தில் பரவுதலும, விரிசிலை - (நாணேற்றி வளைககாமல்) விரிந்திருக்கும் வில்லானது, குனிந்திடுதலும்-வளைந்து கொடுத்தலும், மேடம் அது - ஆட்டுக்கடா, அகன்றிடலும் - பின்வாங்குதலும், யானைகள் நடுங்குதலும் - யானைகள் அடஙகியிருத்தலும், வெள் விடைகள்- வெண்ணிறமான எருதுகள், துள்ளிவிழலும்-, மூங்கில் வணங்குதலும்-, மேலவர் இணங்குதலும்-பெரியோர்கள் அடங்கியிருத்தலும், முனிவர்கள்-, நயந்து கொளலும்-இரந்து வேண்டிக்கொள்ளுதலும், முதிர்படை-பலமிகுந்த சேனையானது, ஒதுங்குதலும் - பின்வாங்குதலும், வினைஞர்கள் - காரியஙகளில் வல்லவர்கள், அடங்குதலும், முதலினர் - செல்வத்தை முதலாக உள்ளவர்கள், பயந்திடுதலும், அரவு சாய்குதலும்-பாம்பானது தான் எடுத்த படத்தை மடக்கிச் சாய்த்தலும், மகிழ்மலர்—மகிழம்பூ, உலர்ந்திடுதலும்—, ஆயர் குழல்— இடையர்களின் புல்லாங்குழல்கள், குடுபடலும்—, இவை — மேற்சொல்லியவை யாவும், அம்புவியில் — உலகத்தில், காரியங்களுக்கு அல்லாமல், அதனால்—அந்தந்தச் செய்கையால், இளப்பு வருமோ— அவமதிப்பு உண்டாகுமோ (உண்டாகாது).

ஆங்கரவு—ஆம்கரவு எனவும் பிரிக்கலாம். கரவு — முதலை, சாய்குதலும் — தலை சாய்த்திருத்தலும். புலி பதுங்குவது உடனே பாய்வதற்கும், மேகம் ஒதுங்குவது மழை பெய்வதற்கும், வில் வளைவது பாணம விடுவதற்கும், ஆடு பின்வாங்குவது உடனே பாய்ந்து மோதுவதற்கும், யானை ஒடுங்குவது சமயமறிந்து கொல்வதற்கும், எருது உள்ளிவிழுவது பிறகு எழுந்து உற்சாகமாய் வேலை செய்வதற்கும், மூங்கில் வளைவது பல பொருள்கள் செய்வதற்கும், மேலோர் கீழோருடன் இணங்குவது சமயத்தில் அவரை ஜெயிப்பதற்கும், தறபோது பெருமை யடைதற்கும், முனிவர் நயந்து கொள்வது தவத்தின் வல்லமை குன்றாது சிறப்படைதற்கும், படை ஒதுங்குதல் சமயமறிந்து பகைவரை வெல்வதற்கும, வினைஞர் அடங்குதல் தங்கள் வேலைத்திறத்தைக் காட்டி மேன்மையுறுதற்கும், முதலினர் பயந்திடுவது கீழ்மக்களை ஆராய்ந்தறிதற்கும், அரவு தலைசாய்வது பின்படமெடுத்தற்கும், (முதலை தலை சாய்வது இரையைக் கவர்வதற்கும்,) மகிழம்பூ உலர்வது மணமிகுவதற்கும், ஆயர் குழல் சூடுபடுவது நன்றாகப் பயன்பட்டு இசை தருதற்கும் எனக் கொள்க.

"வில்லது வளைந்ததென்றும் வேழமது றங்கிற் றென்றும்
வல்லியம் பதுங்கிற்றென்றும் வளர்கடா பிறந்திற்றென்றும
புல்லர்தம் சொல்லுக்கஞ்சிப் பொறுத்தனர் பெரியோரென்றும்
நல்லதென்றிருக்கவேண்டாம் நஞ்செனக் கருதலாமே."

காரியங்களுக்கு-பிறகு ஆகவேண்டிய செயல்களுக்கு.

தெய்வச் செயல்=கடவுளின் மகிமையால் உண்டாகும் காரியங்கள்

62. (ப - ரை.) மயிலேறி.....குமரேசனே-, மரத்தில் புறா இரண்டு-சோடாய் இருந்திட, சதையாய் இருக்க, வேடுவன்-, துறவு கண்டு-அவை அம்மரத்தினின்றும் நீங்குதலை அறிந்து, தோலாமல்-பின்வாங்காமல், அவை எய்யவேண்டும் என்று - அவைகளை அம்பெய்து கொல்லவேண்டு மென்று, ஒருகணை தொடுத்து - (தனது வில்லில்) ஒரு அம்பைத் தொடுத்து, வில்வாங்கி நிற்க - வில்லை வளைத்து நிற்க, (அதேசமயம்) வடாடி - அவ்வேடனது அம்பிற்கு

தொருவாறு தப்பித்துக்கொண்டு, மேலே எழும்பிடில் - அப்புறாக்கள் மேலே கிளம்பினால், அடிப்பதற்கு - (இரைக்காக) அடித்துக் கொண்டுபோக, உலவுராசாளிகூட - வட்டமிடுகின்ற ராஜாளியும், உயரம் - ஆகாயத்தில், பறந்துகொண்டே திரிய-, அப்போது-, வல் விடம் - கொடிய விஷமுள்ள பாம்பானது, சேடு ஆக நீண்ட - பெருமையாய் அவனைக் கடிக்க, (அதனால்) உதைத்தசிலை - பிரயோகித்த வில்லையுடைய, வேடன் அவன் - வேடனானவன், அடியில் விழ - அம் மரத்தின் கீழே விழுந்துவிடவும், சிலையில் தொடுத்த வாளி — அவனது வில்லில் பிரயோகம் செய்த கணையானது, சென்று - குறிதவறிப்போய், இராசாளி மெய்தைத்து - இராசாளியின் தேகத்திற்பட்டு, விழ — அது பூமியில் விழவும், சிறை — சிறகுகளையுடைய, அ இரு புறா — அந்த இரண்டு புறாக்களும், வாழ்ந்த — தமது உயிர்தப்பி சுகமாய் வாழ்ந்தன, இவையெல்லாம்—, வாடாமல் — தவறாமல், சிவன் செயல்கள் அல்லால் — சிவபிரானது செயல்களே அல்லாமல், மனம் செயலால் — மது மனத்தின் செய்கைகளால், வருமோ — உண்டாகுமோ (உண்டாகாது)

ராஜாளி — பறவைப் புலி.

"கரந்தொருவன் கணை தொடுக்கத் தேற் பறக்கும் ராசாளி கருத்துங் கண்டே, உரந்தசிறு கானகத்தில் உயிர்ப்புறா பேடுதனக் குரைக்குங்காலை, விரைந்து விடந் தீண்ட வுயிர் வீடும் வேடன் கணையால் வல்லூறும் வீழ்ந்த(து), அரன் செயலே யாவதல்லால் நம் செயலால் ஆவதுண்டோ அறிவுள்ளோரே" என்பதையுங் கவனிக்க. வாங்கி — களைத்து, இதில் இகரவிகுதியே இறந்தகாலங் காட்டி நின்றது — வாழ்ந்த — (வாழ்ந்தன) அன்சாரியை பெறாது வந்த பலவின் படர்க்கை இறந்தகாலவினை முற்று.

பாடல் இயல்பு=பாடல் இன்னதன்மையாய் இருக்கவேண்டுமென்பது

68. (ப - ரை). மழு-மழுவாயுதத்தை, தினம் செங்கைதனில் இடைவிடாமல் தனது சிவந்த கையில், வைத்து-அணிந்த, கங்கா நதி-எதும்பு மாலையையுடைய சிவபிரான், அருள் மைந்தன் எனப்பெற்ற குமாரன் என்று சொல்லும்படி, வந்த முருகா—, மயி